கல்கி



ஜில்லுன்னு ஜோரா!

இலவச இணைப்பு

KALKI 6.4.2003

ரூ.6.00



திடீர்த் தேவதைகள்!


"அம்மா, பால் உடம்புக்கு ரொம்ப நல்லது. இன்னும் கொஞ்சம் கிடைக்குமா ?"
அறிமுகம் புதிய கேட்பரி டிலைட். இதில் அற்புதமான கேட்பரி சாக்லேட்டின் சுவை அடங்கியுள்ளது. ஒரு கிளாஸ் சூடான அல்லது குளிர்ந்த பாலில் இரண்டு முழு டீஸ்பூன் அளவு போட்டு கலக்குங்கள். பிறகு பாருங்கள் அதிசயத்தை ! பால் என்றாலே முகம் சுளிக்கும் உங்கள் குழந்தை பாலுக்கு ஃப்ரெண்டாகி விடும்.
Delite
நான் பாலை ருசிகரமாக்க விரும்புகிறேன்.
இந்த கூப்பனை பயன்படுத்தி 250 கிராம் பேக்கில் 10% தள்ளுபடி பெறுங்கள்
Delite
பெயர்:
முகவரி :
அன்புள்ள ரீடெயிலரே, கேட்பரி டிலைட் ஒரு ஜார் வாங்கும் வாடிக்கையாளரிடமிருந்து முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட கூப்பனை பெற்றுக்கொண்டு தயவு செய்து அவருக்கு ரூ. 6/-தள்ளுபடி தரவும். நீங்கள் கேட்பரி டிஸ்ட்ரிபியூட்டரிடம் இந்த கூப்பனை கொடுத்து ரூ. 6/-ம் ஹேண்ட்லிங் சார்ஜாக 50 பைசாவும் பெற்றுக் கொள்ளுங்கள்.
இச்சலுகை தமிழ்நாட்டில் தேர்ந்தெடுத்த நகரங்களில் மட்டுமே. ஏப்ரல் 30, 2003 வரையே.
இச்சலுகை சரக்கு உள்ள வரையே.
கேட்பரி இண்டியா லிமிடெட்டிற்கு, கேட்பரி டிலைட் பேக்குகளை ரீடெயிலரிடமிருந்து வாங்கியதற்கான அத்தாட்சியை சரிபார்க்க உரிமை உண்டு.

பரபரப்பான அறிவிப்பு!
புரட்டுக... பக்கம்...

8,9

ரிமோட்

'அலைகள்' தொடரில் ஆசையின் உச்சபட்சமாக 'சுற்றும் பூமி சுற்றும்வரை, சூரியன் நிலவு காயும்வரை, நில்லாது அலைகள்' என்கிறது டைட்டில் சாங்! என்றாலும் விரைவில் தொடர் முடியக்கூடும் என்பதுபோல் சம்பவங்களில் ஒரு வேகம் தெரிகிறது. ஆனால் அதற்காக செய்யப்படும் சில மாறுதல்கள் செயற்கையாக உள்ளன. உதாரணமாக மஞ்சரியின் பாத்திரம் ஏற்கெனவே மணமான விஜய்யை உண்மையாகவே விரும்புவது போல்தான் இதுவரை சித்திரிக்கப்பட்டது. இப்போது திடீரென்று அவனது சொத்துக்காகத்தான் அவள் ஆசைப்பட்டாள் என்று அந்தர் பல்டி அடித்து, பிரச்னை தீர சுலபமான வழியைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.



அலை அடித்த பல்டி!

விலங்குகளில் ஆணினம்தான் அழகு என்பதை மயில், யானை, கோழி, சிங்கம் போன்ற பல இனங்கள் நிரூபித்து விட்டன. பனிமலையில் வாழும் 'லாமா' என்ற விலங்கினமும் அப்படித்தான். அனிமல் பிளானட்டில் ஆண் லாமா விதம் விதமாகத் தன் முகத்தை அசைத்துக் காட்டிக் கவர நினைத்தும், பெண் லாமா அலட்சியமாகத் தன் முகத்தைத் திருப்பிக் கொள்ளும் காட்சி ஒருவிதத்தில் கவிதைதான்.

'கதையல்ல நிஜம்' லட்சுமியிடம் இப்போதெல்லாம் ஒரு மாற்றம். படபடப்பைக் குறைத்துக் கொண்டு பணிவைக் கூட்டி வருகிறார். அண்ணனும், தம்பியும் மோதிக் கொள்வதாக ஒரு நிகழ்ச்சி. தன்னை அண்ணன் மதிப்பதில்லை என்றும், பைத்தியக்காரன் என்றும் அழைப்பதாகவும் தம்பி குமுறினார். சிறு வயதில் தம்பியை வளர்த்தவனே தான்தான்

"இன்ஸ்பெக்டர் சார்! உங்களுக்கு இவ்வளவு பெரிய தொப்பை இருக்கே! எப்படி திருடனை ஓடிப் போய் பிடிப்பீங்க?"
"எதுக்கு ஓடிப் போய் பிடிக்கணும்? அவங்களே மாமூலை கிரெக்டா கொண்டு வந்து கொடுத்துடுவாங்க!"

— எம். விநோத்



என்னும் அண்ணன், வாழ்க்கையில் செட்டில் ஆகாமல் தம்பி இருப்பது தனக்குப் பிடிக்கவில்லை என்று கண்ணாடிக் கூண்டுக்குப் பின்னால் இரைந்தார். லட்சுமி வழக்கம் போல் அவர்களைக் கைகுலுக்க வைக்க முயற்சி செய்தும் பலனில்லை (ஒரு சந்தேகம். இருவருமே சமாதானத்துக்குத் தயாரில்லை என்னும் போது யார் இந்த நிகழ்ச்சியில் பங்கெடுத்துக் கொள்ள முன் வந்தார்கள்?) போதாக்குறைக்கு சகோதரர்கள் நடுநடுவே "இந்த விஜய் டீ.வி பார்த்துக்கிட்டு இருக்கும் அத்தனை பேர் மேலயும் சத்தியமாச் சொல்றேன்..." என்று வேறு உணர்ச்சி வசப்பட்டார்கள். உடனே பக்கத்து வீட்டில் டீ.வியை அணைத்து விட்டார்கள் - பயம்!

அமெரிக்க - இராக் யுத்தத்துக்கும் டால்பின்களுக்கும் சம்பந்தமுண்டு என்பது சன் நியூஸைப் பார்த்த போது தெரிந்தது. குழந்தையைக் கிள்ளிவிட்ட அமெரிக்கா தொட்டிலையும் ஆட்டுகிறது. அல்பா என்ற, இராக் எல்லையில் உள்ள ஒரு தீபகற்பத்தில் தனது கப்பலை அனுப்பியுள்ள அமெரிக்கா, அதிலுள்ள அத்தியாவசியப் பொருள்களை, போரில் பாதிக்கப்பட்ட இராக் பொதுமக்களுக்கு இலவசமாக விநியோகித்து வருகிறது. இந்தக் கப்பல் போகும் பாதையில் கண்ணிவெடிகள் இருக்கக் கூடாதே என்ற கவலையில், சில பயிற்சி பெற்ற டால்பின்களைப் பயன்படுத்துகிறது அமெரிக்கா. கண்ணிவெடிகளைக் கண்டால் அந்த டால்பின்கள் சிக்னல் கொடுக்குமாம்.



அரிகிரி அசெம்ப்ளி (ஜெயா டீவி)யின் எழுநூறாவது நிகழ்ச்சியின் ப்ரோமோக்கள் கொஞ்சம் தடபுடலாகவே இருந்தன. சிறப்பு விருந்தினர் ஷகிலா என்பதால் எதிர்பார்ப்பும் கூடிவிட்டது. ஷகிலாவின் சிறப்புப் பேட்டியைப் பார்க்கும் அதிர்ஷ்டமில்லாது போனவர்களுக்காக சில சுவராசியமான ஹைலைட்ஸ் மணி முத்துகள் மட்டும்.

- மாசத்துக்கு நான் நடிச்ச படம் மட்டுமே பத்துக்கும் மேலே கேரளாவில் ரிலீஸ் ஆகுது...
- காண்டாக்ட் லென்ஸ் போடாட்டி, எனக்கு மேக்கப் போட்ட மாதிரியே இருக்காது.
- பர்தா போட்டுக்கிட்டுதான் வெளியே போவேங்கிறதினாலே ரசிகர்கள் தொல்லை கிடையாது.
- குணச்சித்திர ரோல்களிலும் நடிக்க ஆசைதான். ஆனா யார் தர்றாங்க?

— ஆதர்ஷ்

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
செ. ஏக்நாத் ராஜ்
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இண்டர்நெட் முகவரி :
www.kalkiweekly.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

பழம்பெரும் படப்பிடிப்புத்தளமான 'கற்பகம்' ஸ்டுடியோவுக்குள் நுழைந்தால் பழைமை மாறாத ஓட்டு வீடுகள் வரிசையாய் எதிர்ப்படும். அதில் நடு நாயகமாய் இருந்த தஞ்சைபாணி வீட்டிற்குள்ளிருந்து, எக்கச்சக்கமாய் வெண்ணிறப் புகை வெளியேறிக் கொண்டிருக்க, பதற்றத்தோடு உள்ளே ஓடினார்கள் சில ஸ்டூடியோ ஊழியர்கள். அவர்களைப் பின் தொடர்ந்து போன நம்மையும் பிடித்து நிறுத்தினார் உதவி இயக்குனர் ஒருவர். எதுவும் புரியாமல் திபுதிபுவென்று வெளியேறிக் கொண்டிருந்த புகையை வெறித்தால், அதற்குள்ளிலிருந்து தீபு!!! ராட்சஸ மின் விசிறியின் தயவில், அலை பாயும் கூந்தலோடு, படபடக்கும் பட்டுப் பாவாடை சட்டையில், புகை மூட்டத்திலிருந்து திமர்த் தேவதை மாதிரி தீபு வெளிப்பட்ட அடுத்த வினாடி, "கட்! ஷாட் ஓ.கே!" என்று எங்கிருந்தோ குரல் கொடுத்தார் இயக்குனர். அவரது குரலுக்கு மரியாதை கொடுத்து புகை போடுவதை படக்குழு நிறுத்த, தைரியமாய் தீபுவை நெருங்கினோம்.



• அனு

சாம்பிராணிப் புகை போட்டால் தேவதைகள் திடீரெனத் தோன்றி, வரம் கொடுத்துவிட்டு மறைந்து விடுவதைப் போல, ஒரே படத்தோடு காணாமல் போய்விடும் அறிமுக தேவதைகள் கோடம்பாக்கத்தில் அதிகம். நீங்களும் அப்படியொரு தேவதைதானா என்று தீபுவைப் பார்த்துக் கேட்டதில், தங்கக் கோடாரியைத் திரும்பப் பறித்துக் கொண்ட தேவதை கணக்காய் முறைத்தார்.

"நிச்சயமாய் நான் அந்த மாதிரி பட்டியலில் வரமாட்டேன். ஏன்னா, வினயன் இயக்கிய 'என் மனவானில்' படத்தில் 'ரோட்டோரம் பாட்டுச் சத்தம் கேட்டுதா'ங்குற ஒரே ஒரு பாட்டிற்கு ஆடினேன். அதில் என்னோட நடனத் திறமையைப் பார்த்துட்டு 'அன்பு' படத்தில் கதாநாயகி வாய்ப்புக் கொடுத்தாங்க. 'அன்பு' படத்தில் நான் வெளிப்படுத்திய நடிப்புத் திறமையைப் பார்த்துட்டு இப்போ, 'வருவது நீதானா' படத்தில் நாயகியாக மறுபடியும் வாய்ப்பு கொடுத்திருக்காங்க" என்ற தீபு, படப்பிடிப்புக்கு இடையே பத்தாம் வகுப்பு பாடப்புத்தகங்களைப் புரட்டிக் கொண்டிருந்தார். "கோடம்பாக்கம் ஜே.ஆர்.எம். மெட்ரிகுலேஷன் பள்ளியில் பத்தாவ்து படிக்கிறேன். இது பரீட்சை நேரம் என்று பின்வாங்கிய தீபுவின் பெரியம்மா விஜயலட்சுமி நாயுடு, தெலுங்குப் பட உலகில்

"அந்த டீவி. சீரியலில் நடிக்க மாதச் சம்பளம் தருகிறார்களா?"
"அதுமட்டுமல்ல... பென்ஷன், பீ.எஃப்.எல்லாம் உண்டாம்."
— எஸ்மோஹன்





• பிரசன்னா

திடீர்த் தேவதைகள்



• தீபு

நடன இயக்குனராம். ''சின்ன வயசுலேருந்து பெரியம்மாகிட்டே நடனம் கத்துக்கிட்டேன். அவங்க தான் என்னை சினிமாவுக்குத் தயார்ப்படுத்தினாங்க. எந்தப் போட்டியையும் சமாளிக்கிற திறமையும் தில்லும் எனக்கு இருக்கு'' என மீண்டும் முறைத்த தீபு, வனதேவதையாக மாறிவிடுவதற்கு முன்பு அங்கிருந்து நழுவி, ஏவி.எம். படப்பிடிப்பு வளாகத்திற்கு வந்தால், இன்னொரு தேவதை!

'காதல் டாட்.காம்' படத்திற்காக பிரசன்னாவுடன் 'சாட்' செய்து கொண்டிருந்த அனு, அச்சு அசலாய் அப்படியே நடிகை சிமாவை குளோன் செய்த மாதிரி இருந்தார். "சிமாவுக்கு நீங்கள் நெருங்கின சொந்தமா?" என்று கேட்டபோது, "நான் சிமா - ஐ.வி. சசியோட செல்லப் பொண்ணுங்க" என்று அதிர வைத்தார். அனு ஐ.வி யிடம் 'நூற்று அறுபத்தைந்து படங்களை இயக்கிய ஒரு இயக்குனரின் மகள், இயக்குனராவதை விட்டு விட்டு நடிக்க வருவதா?' என்றோம்.

"எனக்கும் இயக்குனராகணும்கிற ஆசைதான் அதிகமிருந்துச்சு, பல படங்கள்ளே அப்பா கூட சேர்ந்து ஒர்க் பண்ணியிருக்கேன். இயக்குனராகணும்னா முதல்லே நடிப்பு தெரியணும் இல்லியா? அதுக்காகத்தான் அம்மா ஆலோசனைப்படி முதல்லே நடிப்பு. அப்புறம் இயக்கம்னு முடிவு பண்ணியிருக்கேன்'' என்று தெளிவாகத் தமிழில் பேசிக் கொண்டே போன அனுவை இடைமறித்த பிரசன்னா, "திடீர்த் தேவதைகள் பற்றித்தான் எழுதுவீங்களா? என்னை மாதிரி தேவகுமாரனெல்லாம் உங்க கண்ணுக்குத் தெரியாதா?" என்று மதுரை வீரன் மாதிரி பயமுறுத்தினார்.

"ஃபைவ் ஸ்டார் படத்துக்கு நடிகர்கள் தேவைன்னு விஜய் டீ.வியில் வந்த விளம்பரத்தைப் பார்த்துவிட்டு என்னோட ஃபோட்டோவை அனுப்பினேன். போட்டி நிறைந்த உலகத்தில் நமக்கு எங்கே வாய்ப்பு கிடைக்கப் போகுதுன்னு அதை மறந்தே போனேன். லாட்டரி சீட்டு வாங்காமலேயே பரிசு விழுந்த மாதிரி, மணிரத்னம் நிறுவனத்திலிருந்து திடீர் போன். அப்புறம், ஸ்கிரீன் டெஸ்டில் தேறி, 'ஃபைவ் ஸ்டாரி'ல் ஒரு ஸ்டாராக நடிச்சிருந்தாலும், என்னோட கேரக்டர் மட்டும் அதிகம் பேசப்பட்டதாலே... இப்போ உங்க முன்னாலே அடுத்தடுத்த வாய்ப்புகளோடு நின்னுட்டு இருக்கேன்" என்கிற பிரசன்னா, 'ஃபைவ் ஸ்டார்' படத்திற்காக இன்ஜினியரிங் படிப்பை பாதியில் விட்டுவிட்டு வந்தவராம்!

— ஸ்ரீசக்கரம்



கராத்தேயின் பதிலடி!

கல்கி 23.3.03 இதழின் தலையங்கம் பார்த்தேன். சென்னை மாநகராட்சி பட்ஜெட்டில் காணப்பட்ட அனைத்து அம்சங்களுமே நடைமுறைக்கு ஏற்றதுதான்.

சென்னையில் சாலைகள் பராமரிப்பு பற்றி குறை கூறியுள்ளீர்கள். கடந்த நவம்பர் மாதம் பெய்த கடும் மழையில் சென்னை மாநகர சாலைகள் எந்த அளவிற்குப் பழுது பட்டு போயின என்பது எல்லோருக்கும் தெரியும். அந்தச் சாலைகள் எல்லாம் போர்க்கால அடிப்படையில் செப்பனிடப்பட்டு இப்போது எப்படி இருக்கின்றன என்பதை சாலைகளில் பயணம் செய்யும் மக்கள் நன்கு அறிவார்கள்.

மாநகராட்சி சரித்திரத்திலேயே கடந்த ஆண்டுதான் அறிவிக்கப்பட்ட தொகைக்குக் கூடுதலாகவே அத்தியாவசியப் பணிகளுக்காகச் செலவிடப்பட்டுள்ளது. பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ள இவ்வளவு திட்டங்களுக்கும் பணம் எங்கிருந்து வரப் போகிறது என்ற கேள்வி அதிபுத்திசாலித்தனமானது.

வரவு செலவுத் திட்டம் என்பது வருமானத்தைப் பெருக்குவதற்கும், அந்த வருமானத்தைக் கொண்டு ஆக்கப்பூர்வமாக செலவிடுவதற்குமே ஆகும். ஆண்டுக்கு ஆண்டு இது சரிவிகிதத்தில் உயரும் என்பது பொதுவானதுதான்.

வருமானத்தைப் பெருக்க வேண்டும். அதே நேரத்தில் மக்கள் தலையிலும் கூடுதல் வரியைத் திணிக்கக் கூடாது என்ற எண்ணத்தில்தான் Tax Mapping திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த பல ஆண்டுகளாக வரி கட்டாமலும், தங்களது சாமர்த்தியத்தால் வரியைக் குறைத்துக் கட்டியும் மாநகராட்சியை ஏமாற்றிக் கொண்டிருப்பவர்களைக் கண்டறிந்து, முறையான, சரியான வரியை நிர்ணயம் செய்து வசூலிப்பதே இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இந்த விஞ்ஞானபூர்வமான செயற்கைகோள் வரைபடத் திட்டத்தைப் பற்றி சரிவர புரிந்து கொள்ளாமல் கிண்டல் செய்திருக்கிறீர்கள்.

இந்தச் செயற்கைகோள் வரைபடத் திட்டத்தின் மூலம் மாநகரின் மொத்த பகுதிகளுமே கணினி மயமாக்கப்பட்டு கண்காணிப்பின் கீழ் கொண்டு வரப்படும். இதனால் சொத்துவரியில் விடுபட்ட இனங்கள், குறைத்து மதிப்பிடப்பட்டு ஏமாற்றப்பட்டு வரும் தவறுகள் கண்டறியப் படும். வரிவிதிப்பு ஒழுங்குபடுத்தப் படும்.

மாநகராட்சி ஆய்வின்படி தற்போது சுமார் 240 கோடி அளவில் உள்ள சொத்து வரி வசூல் மூன்று மடங்காக உயரும் என்பதுதான் கண்டறியப்பட்ட கணக்கு. ஆனால் பட்ஜெட்டில் இதை இரண்டு மடங்காக நிர்ணயித்து ரூபாய் 400 கோடி சொத்து வரி வசூலிக்க திட்டமிடப்பட்டிருக்கிறது. இந்த அதி நவீன முறையில் இலக்குக்கு அதிகமாகவே வரிவசூல் செய்யப்பட வாய்ப்பிருக்கிறது.

கொசு உற்பத்திக்குக் காரணமான சாக்கடைக் கால்வாய்கள், மழை நீர்வடி கால்வாய்கள் போன்றவை கடந்த மாநகராட்சி காலங்களில் சரிவர தூர்வாரப் படவில்லை. இதுதான் தண்ணீர் தேங்குதலுக்கும் அதனால் கொசு உற்பத்தி அதிகரிப்பதற்கும் காரணமாயிற்று. இதை அறிந்துதான் மாநகராட்சி பராமரிப்பிலுள்ள 16 நீர் வழிகள் தூர் வாரப்படவுள்ளன. பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட 16 கோடியிலிருந்து இதற்காக செலவு செய்யப்பட்டு பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்படவிருக்கின்றன. அதன் பின்னரே அந்தப் பகுதிகளில் சாலைகள் மேம்படுத்தப்படும்.

சம்பந்தப்பட்ட அனைத்து துறைகளின் ஒத்துழைப்பும், நிதி ஒதுக்கீடும் பூரணமாக கிடைக்க வேண்டும் என்ற எண்ண ஓட்டத்தில்தான் அம்மா அவர்களே முன் வந்து இதற்கான உயர்மட்டக் குழு திட்டத்தை அறிவுறுத்தியிருக்கிறார்கள்.

இப்படிக்கு
கராத்தே ஆர். தியாகராஜன்
துணை மேயர், சென்னை மாநகராட்சி



அடுத்த இதழ்...

'சுபானு' ஸ்பெஷல்... புத்தம் புதுச் சிறப்பிதழ்!

சுதா சேஷய்யன்

எழுதும்

இந்த நூற்றாண்டில் இந்து மதம்!



அக்னி சர்மா

எழுதும்

தமிழ்ப் புத்தாண்டு ராசிபலன்



பிரபஞ்சன்

எழுதும்

ஜீவநதி

சின்னத் திரை தொடர்

தாமரை மணாளன்
எழுதும்



சில்லுக் கருப்பட்டி

- நெல்லைத்தமிழில் ஓர் இளமைத்தொடர்

2 புத்தகங்கள்



முதலில் இரண்டு ஆஸ்திரேலிய விக்கெட்டுகள் விழுந்தபோதெல்லாம் பட்டாசு வெடித்த மும்பைக்காரர்கள் போகப் போக, மழை வரும் போலிருந்தால் கூட வெடித்துக் கொண்டிருந்தார்கள். கடைசியில் உலகக் கோப்பையைக் கோட்டை விட்டு விடுவோம் என்று தெள்ளத் தெளிவாகத் தெரிந்த பின்னும், பயங்கர வெடிச் சத்தம் தொடர்ந்தபோது... சித்தத்தில் கிரிக்கெட் பித்தம் முற்றிவிட்டது என்று பெரிசுகள் அங்கலாய்க்கவே துவங்கியபின், "அட... பட்டாசு நிறைய மீந்துடுச்சு; வெடிச்சா தப்பா" என்றார்களே... "ஹூம்.... மும்பை இஸ் டிஃபரண்ட்னா டிஃபரண்ட்தாங்கோ...!" அடிக்கும் வெடிக்கும் என்ன சம்பந்தம்?

சம்பந்தம் இல்லாமலேயே, உலகக் கோப்பை வானில் கொடி கட்டிப் பறந்தவர் மந்திரா பேடி. ஏதோ கிரிக்கெட் பற்றி உளறிக் கொட்டிக் கிளறி மூடினால் என்ன? அவர் மிழற்றும் போது ஹர்பஜன் சிங் இடது கை ஸ்பின்னரா வலது கை ஸ்பின்னரா என்று யார் காதில் போட்டுக் கொள்கிறார்கள்? கண் கொள்ளாமல் பார்த்துக் கொண்டிருக்கும்போது, செவிக் கென்ன விருந்து வேண்டிக் கிடக்கிறது? மற்றவர்கள் வேண்டுமானால் கிண்டலடித்து விட்டுப் போகட்டும்; கணவர் ராஜ் கௌசல் ரொம்பவும் ஆதரவாகப் பேசுகிறார். வெறும் 'சாந்தி' சீரியலுடன் நிற்காமல், இப்படி கோடிக் கணக்கானவர்கள் மனத்தில் அசாந்தியை கிளறுமளவிற்கு மனைவி உயர்ந்திருப்பதில் அவருக்கு அசாத்தியப் பெருமை. 'சாதாரண டீ.வி. தொடர்களுக்கு ரீ டேக்குகள் உண்டு. ஆனால் இப்படிப்பட்ட நிகழ்ச்சியில் கிரிக்கெட் துறையில் ஜாம்பவான்களுக்கு மத்தியில், எத்தனை தன்னம்பிக்கையுடன் செயல்பட்டிருக்கிறாள்? அந்தத் தோள் தொங்கி டிரஸ்ஸில் அசத்திவிட்டார்" என்று பூரிக்கிறார். மந்திரம் போட்டுவிட்டார் மந்திரா!



• மந்திரா பேடி

'**ம**ந்திரா? மஸ்ஜிதா?' விஷயங்கள்தான் தூள் பறக்கும் என்று எதிர்பார்த்துச் சென்றவர்களுக்கு எதிர்பாரா நகைச் சுவை விருந்து கிடைத்து விட்டது. அண்மையில் தொகாடியா கலந்து கொண்ட வி.ஹெச்.பி.காரர்களின் பேரணியைத் தான் சொல்கிறோம். மனிதர் கனல் பறக்கும்

''கவர்மெண்ட் ஆஸ்பத்திரியில 'வெட்டு', 'குத்து' நடக்குதாமே?''
''ஆமாம்! நர்ஸ்கிட்ட பணத்தை 'வெட்டி'னா தான் ஊசி 'குத்து' வாங்க!''
— அஜிகாளத்தி



பேச்சுகளுக்குப் பெயர் 'போன'வராயிற்றே? ஒரு காவி உடைக்காரர், 'பைபிள் என்பது கீதையின் மறு பதிப்பே' என்ற 'உண்மையை' உடைத்தார். மற்றொருவர் ஹிந்து ராஜ்யம்' வந்தால் மக்கள் கவலை எல்லாம் பறந்தோடிவிடும். முக்கியமாக குண்டு வெடிப்புகளே இருக்காது என்றார். இன்னொருவர் பாப்ரி மஸ்ஜித் விவகாரத்தில் நரஸிம்மராவ் 'கம்'மென்றிருந்ததற்கு நன்றி தெரிவித்தார். தொகாடியாவோ 'இன்று இந்துக்கள்



• குடும்பத்துடன்...

மந்திரம் போட்ட மந்திரா!

இரண்டாந்தர குடிமக்கள் போலாகி விட்டனர். அவர்கள் கோயில்களுக்குப் பாதுகாப்பே இல்லை' என்றார். மேளங்கள் முழங்கி, காவிக் கொடிகள் பறந்து, ஒரே ஹிந்துத்வ மணம் பரப்பின. காவிகளில் மயங்கும் அப்பாவிகள்.

அப்பாவிகளின் கூட்டத்தைப் பார்க்க வேண்டுமென்றால் மும்பை ஏர்போர்ட்டுக்கு வாருங்கள். குவைத்திலிருந்து மூட்டை முடிச்சுகளுடன் வந்து இறங்கிய வண்ணமிருக்கிறார்கள்.

அமெரிக்க – இராக் யுத்தம் மூண்டதும், எங்கே இராக் கெமிக்கல்களை உபயோகித்து குவைத்தை அழித்து விடுமோ என்ற பயத்தில் ஓடி வந்து கொண்டிருக்கின்றனர். ஆனால்... என்ன ஆச்சர்யம்! ஷேர் மார்கெட் நிலவரம் மாறுவதுபோல், குவைத்தை துறப்பவர்களின் நிலவரமும் நாலே நாட்களில் மாறிவிட்டது. வரும் விமானங்களில் எக்கச்சக்கமான ஸீட்டுகள் காலியாகவே இருக்கின்றன. யார் கை ஓங்கியிருக்கிற தென்பதற்கு அத்தாட்சியா? அல்லது டென்ஷன் முற்றி விட்டதா?



• அர்ஜுன்

டென்ஷன் முற்றி விட்டதன் பயனாய்ச் சிலர் என்னவெல்லாம் செய்கிறார்கள்? உதாரணத்திற்கு அஞ்சலி டெண்டுல்கரை எடுத்துக் கொள்ளுங்கள். உலகக் கோப்பையை சச்சின் வெல்ல முயன்று கொண்டிருந்தபோது, அவர் பாட்டுக்கு அவர் பிள்ளை அர்ஜுன் கலந்து கொண்ட, கிரிக்கெட்டை மையமாகக் கொண்ட ஒரு குழந்தைகள் நாடகத்தை பார்க்கப் போய்விட்டார். ஆனால் எங்கள் முதல்வர் சுஷில்குமார் ஷிண்டே, டீ.வி.யின் முன்னால் தன் பூரா குடும்பத்துடன் அமர்ந்து விட்டார். பேரன் பேத்திகளெல்லாம் இந்திய கிரிக்கெட் யூனிஃபார்மில் காட்சியளித்தனர். சிரித்துக் கொண்டு போஸ் கொடுத்தது, ஆட்டம் ஆரம்பித்த முதல் அரை மணிக்குள் இருக்குமோ?

- ஜெய்ஸ்ரீ ராஜ்



ஜெயிச்சாச்சு!

உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு கல்கி மற்றும் எஸ்.எஸ்.மியூசிக் இணைந்து நடத்திய சூப்பர் சிக்ஸ் போட்டியில் எக்கச்சக்க வாசகர்கள் கலந்து கொண்டு திக்குமுக்காட வைத்துவிட்டனர் ஆசிரியர் குழுவை. பெரும்பாலான வாசகர்கள் ஒரேயொரு தவறில் 21" கலர் டி.வியைத் தவறவிட்டு விட்டனர். எல்லா விடைகளையும் சரியாக எழுதி சிறப்பான கவிதை / வாசகமும் எழுதி முதல் பரிசைத் தட்டிச் செல்பவர்:

என். விஜயலக்ஷ்மி,
38, அபித் காலனி,
ஆலந்தூர்ரோடு,
சைதாப்பேட்டை,
சென்னை - 15.

இரண்டாம் பரிசான மூவாயிரம் ரூபாயைப் பெறுபவர்:

நிவேதா ஸ்ரீநிவாசன்,
7-பி, ஐந்தாவது தெரு,
கார்த்திகேயபுரம்,
மடிப்பாக்கம், சென்னை - 91.

நான்கு கேள்விகளுக்கு மட்டுமே சரியான விடை எழுதியவர்களுள் சிறந்த வாசகமும் எழுதி, மூன்றாம் பரிசான இரண்டாயிரம் ரூபாயைப் பெறுபவர்:

அ. ஞானபாஸ்கர்,
தலைமை ஆசிரியர், 37, புதுத்தெரு,
பெரிய சோழவல்லி, நெல்லிக்குப்பம்,
கடலூர் மாவட்டம் - 607 105.

இனி கேள்விக்கான விடைகள்:

1. டான் பிராட்மன் கோல்ஃப் விளையாட்டிலும் சிறந்து விளங்கியவர்
2. முதன் முதலில் சிட்னி நகரத்தில்தான் செயற்கை ஒளி வெள்ளத்தில் ஒரு நாள் கிரிக்கெட் போட்டி நடந்தது.
3. சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் செஞ்சுரி அடித்த முதல் இந்திய வீரர் லாலா அமர்நாத்.
4. ஒரு டெஸ்ட் தொடரின் ஐந்து மேட்சுகளிலும் டாஸ் வென்ற இந்திய அணி கேப்டன் பட்டோடி
5. கால்பந்து உலகக் கோப்பை, கிரிக்கெட் உலகக் கோப்பை, இரண்டிலும் இது வரை இடம் பெற்ற ஒரே வீரர் விவியன் ரிச்சர்ட்ஸ்.

என். விஜயலட்சுமியின் கவிதை:

பிறப்புக்கும் இறப்புக்கும்
நடுவே ரன்ஸ்தான்
இருப்பதோ
எல்லோர்க்கும் ஒரே
இன்னிங்க்ஸ்தான்.
வரவுக்கும் வசதிக்கும்
சரிக்கட்டு
வாழ்க்கையே என்றும்
கிரிக்கெட்டு
தேடித்தான் பிடிக்கணும்
சான்ஸ் ஒரு காட்ச்
ஆடித்தான் பார்க்கணும்
லைஃப் ஒரு மாட்ச்.

நிவேதாவின் கவிதை:


ஆடாத பந்தும்
ஓடாத ரன்னும்
தேடாத முன்னேற்றம்தான்

ஞான. பாஸ்கரின் வாசகம்:

தேசத்தின் சுவாசமே கிரிக்கெட்!

வெற்றி பெற்றவர்களை வாழ்த்துகிறோம். போட்டியில் ஆர்வமுடன் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி.

— ஆசிரியர்.



காஷ்மீர் படுகொலைகள்!

காஷ்மீர் பண்டிட் பிரிவைச் சேர்ந்த இருபத்து நான்கு பேர் வஞ்சகமாகப் படுகொலை செய்யப்பட்டிருப்பதைக் கண்டனம் செய்து அறிக்கை வெளியிட்டுள்ளது பாகிஸ்தான். அச் சம்பவத்துக்குத் தங்கள் பேரில் பழி சுமத்தப்படுவது அபாண்டம், அநியாயம் என்று மறுத்தும் இருக்கிறது.

நடந்த கோர நிகழ்ச்சிக்கு, பாகிஸ்தான் தூண்டுதலே காரணம் என்று நிரூபிப்பது இயலாத காரியம். ஆனால், காஷ்மீரில் பயங்கரவாதம் இத்தனை தூரம் வேர்விட்டு வளர்ந்திருப்பதற்கு பாகிஸ்தான் அளித்து வரும் ஆதரவே காரணம் என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மை. இதனால்தான் பாகிஸ்தானை அனைத்து வகைகளிலும் ஆதரிக்கும் அமெரிக்கா கூட, இந்தோ - பாக் எல்லைப் பிரச்னை குறித்து இந்தியா பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தைக்கு ஒப்புக் கொள்ளவேண்டும் என்று திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறது.


நமது உள்துறை அமைச்சரோ, அமெரிக்க யோசனையைத் தூக்கியடிக்கிறார். 'பேச்சாவது வார்த்தையாவது; முதலில் பயங்கரவாதத்தை பாகிஸ்தான் நிறுத்தட்டும்' என்கிறார். விரக்தியும் துயரமும் பொங்க காஷ்மீரை விட்டு வெளியேறத் தயாராகும் பண்டிட் குடும்பத்தாரிடம் 'இப்போது நீங்கள் கிளம்பிப் போனால், பயங்கரவாதிகளின் நோக்கம் நிறைவேறிவிடும். காஷ்மீர், முஸ்லிம் மாநிலமாகிவிடும். அதனால் இங்கேயே இருங்கள்' என்று அறிவுரை கூறுகிறார்.



கல்கி

2003 ஏப்ரல் 6
சித்ரபானு பங்குனி 23
மலர் : 61
இதழ் : 36






சில மாதங்களுக்கு முன்பு ஜம்மு ரகுநாத் ஆலயத்தில் ஹிந்துக்கள் படுகொலை செய்யப்பட்டனர். இப்போது, சற்றும் எதிர்பாராத விதமாக, தென் காஷ்மீர் நந்திமார்க் பகுதியில், பாதுகாப்பு அதிகாரிகள் போல் வேடம் தரித்து, வீடு புகுந்து கொலை செய்துள்ளனர் பயங்கரவாதிகள். காஷ்மீர மக்களில் யாருக்குமே பாதுகாப்பை மத்திய - மாநில அரசுகள் உறுதி செய்ய முடியாத போது, என்ன தைரியத்தில் காஷ்மீர் பண்டிட் குடும்பங்கள் அப் பகுதியில் வாழ்க்கையைத் தொடர முடியும்? இந்த லட்சணத்தில், ஏற்கெனவே காஷ்மீரை விட்டு வெளியேறிய பண்டிட் குடும்பங்களைத் திரும்ப காஷ்மீருக்கே வருமாறு அழைத்தால், எப்படி வருவார்கள்?

காஷ்மீர் தேர்தல்கள் வெற்றிகரமாக நடந்தாலும் பி.ஜே.பி. அங்கே தோற்றுவிட்டதால், மாநிலத்தில் ஆளும் கட்சிக்கும் மத்திய அரசுக்கும் இழுபறி. காஷ்மீர் மக்களின் பாதுகாப்பை இந்த உறவுச் சிக்கல் பாதிக்கிறது. இது நமது தேசத்துக்கே தலைகுனிவு.

எனினும் உள்நாட்டுப் பாதுகாப்பைப் பலப்படுத்துவதன் மூலம் மட்டுமே காஷ்மீர் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு கண்டு விட முடியாது. இன்று பயங்கரவாதிகளிடையே நவீன உபகரணங்களும், ஆயுதங்களும், தற்கொலைப் படைகளும் சர்வசாதாரணமாகி விட்டன. எவ்வளவுதான் பாதுகாப்பு ஏற்பாடுகளும் ஒற்றாடல் பணிகளும் முடுக்கி விடப்பட்டாலும் இடுக்குகளில் புகுந்து பயங்கரவாதம் பெரிதாக வெடித்துக் கொண்டேதான் இருக்கும்.

அதை வேரோடு அகற்ற வேண்டுமானால், அதன் உற்பத்தி ஸ்தானத்தை, அதாவது பாகிஸ்தானைத் தாக்க வேண்டும்.

அண்டை நாட்டைத் தாக்கி யுத்தம் செய்வதென்பது பொருளாதார ரீதியாக நம்மை நொடித்துப் போகச் செய்துவிடும் என்பதோடு, உலக நாடுகளின் பார்வையில் இந்தியா அனுதாபத்தை இழந்துவிடும். பரப்பளவிலும் முன்னேற்றத்திலும் பாகிஸ்தானைக் காட்டிலும் நம் நாடு பலம் பொருந்தியது என்பதால், ஏதோ குட்டி நாடான பாகிஸ்தானை, நாம் அக்கிரமமாகத் தாக்குவதாக



அவதூறு வந்து சேரும். நிலைமையின் நியாய - அநியாயங்கள் மறந்து, மறைந்து போகும்.

பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை நடத்துவதுதான் சிறந்த தீர்வாக அமையும். நடுநிலை வகிக்கும் ஒரு மூன்றாவது நாட்டினை சாட்சிக்கு வைத்துக் கொண்டு, முத்தரப்புப் பேச்சுவார்த்தை நடத்தலாம். இதற்குத் துணிவு வேண்டும். நமது அரசு முதல் அடியை எடுத்து வைத்துவிட்டால் பாகிஸ்தானும் ஒப்புக் கொண்டுவிடும். மூன்றாவது நாடு ஈடுபடுகிறபோது, பிரச்னை சர்வதேச கவனம் பெற்றுவிடும். கொடுக்கிற வாக்குகளை பகிரங்கமாக மீற இயலாதபடி பாகிஸ்தான் நிர்ப்பந்திக்கப்படும்.

மூன்றாவது நாட்டின் தலையீட்டை வாஜ்பாய் அரசு ஏற்க விரும்பாவிட்டால், முத்தரப்புப் பேச்சு வார்த்தைக்கான முதல் அடியையாவது உடனே எடுத்து வைத்தாக வேண்டும்.

காஷ்மீரில் பயங்கரவாதம் நிற்க வேண்டுமானால், முத்தரப்புப் பேச்சுவார்த்தை நடந்தாக வேண்டும். பாகிஸ்தானை ஒதுக்கிவிட்டு காஷ்மீரத் தீவிரவாதிகளோடு மட்டும் பேசிப் பயனில்லை. இதனால் பிரச்னை மேலும் சிக்கலாகும். அதேபோல் தீவிரவாதிகளை ஒதுக்கிவிட்டு பாகிஸ் தானுடன் மட்டும் பேசினாலும் தலைவலி அதிகரிக்கவே செய்யும். ஆனால், மத்திய அரசோ பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தையே கிடையாது என்று அடம் பிடிக்கிறது. இதற்கு அயலுறவு ரீதியான விஷயங்கள் மட்டுமே காரணமல்ல. பாகிஸ்தான் ஒரு முஸ்லிம் நாடு; இந்திய அரசு ஹிந்து சார்புள்ள அரசு என்று அறியப்படுகிறது. இந்த வேற்றுமைதான் கௌரவத்துக்கும் மேலாகப் பேச்சு வார்த்தைக்குக் குறுக்கே நிற்பதாகத் தோன்றுகிறது.

வேற்றுமைகளையும் வறட்டுக் கௌரவத்தையும் தூக்கிப் போட்டுவிட்டு, வாஜ்பாய் பேச்சுவார்த்தைகள் நடத்த முன்வரவேண்டும். இதைச் செய்யாமல், அமைதிக்கு வழி வகுக்காமல், பயங்கரவாதத்துக்குப் பலியாகும் மக்களுக்கு லட்ச லட்சமாக ஈட்டுத் தொகை தருவதென்பது வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுகிற கதைதான்!○

மகான்களைப் பார்க்கப் போகும் போது எலுமிச்சைப் பழத்துடன் போகிறோம். இது ஏன்? மற்ற பழங்கள் காயில் ஒரு ருசி, பழத்தில் ஒரு ருசி என சுவை மாறுபடுகிறது. ஆனால் எலுமிச்சம் பழம் ருசியில் மாறுபடுவது இல்லை. தன் பக்தி, குணம் மாறிவிடாமல் ஒரே மாதிரி இருக்க வேண்டும் என்பதற்காகதான் எலுமிச்சம் பழம்.

ஸ்ரீகுருஜி முரளிதர சுவாமிகள் கூறக் கேட்டவர்: கூந்தலூர் ஜெயராமன்

தேரோட்டி மகன் என்று, பாண்டவர்கள் கர்ணனைக் கேலி பேசிய போது கர்ணனின் தலைக்குனிவையும் துயரத்தையும் காணச் சகிக்காத துரியோதனன், தனது அங்கத நாட்டுக்கு கர்ணனை அரசனாக்கியது நாமெல்லாம் அறிந்த கதை. ஆனால், உண்மையில் ஆராய்ந்து பார்த்தோமானால் ஏழு குதிரைகள் பூட்டிய தேரை தினமும் ஓட்டுகிற சூரியபகவானின் மைந்தன் தானே கர்ணன்.

அதனால்தான் கிருஷ்ண பரமாத்மா, பிற்காலத்தில் கர்ணனை யாரும் தேரோட்டி மகன் என்று குறைத்து மதிப்பிட்டுக் கேலி பேசக் கூடாது என்பதற்காகவே அர்ஜுனனுக்குத் தாமே தேரோட்டியாக அமர்ந்தார்.

— அஸ்வதிமணாளன், மடிப்பாக்கம்.

குருவாயூரப்பன் கோயிலின் மேற்கு வாயிலிருந்து முக்கிய சாலையில் வடக்கே சற்று தூரம் சென்றால் மம்மியூர் என்ற சிவக்ஷேத்திரம் உள்ளது.

''குருவாயூரப்பனை வணங்கிவிட்டு அதன் பின்னர் மம்மியூர் சென்று மகாதேவனைப் பூஜித்தால்தான் குருவாயூர் யாத்திரை பூர்த்தியாகும்'' என்று சொல்கிறார்கள்.

தேரோட்டியது ஏன்?



வேதகால பண்பாடு, ஆலயத்தின் சைதன்யம், புனிதத்தன்மை போன்றவற்றைப் பாது காப்பதற்காகவும் சமூக நலனுக்காகவும் இந்தக் கோயிலில் அடிக்கடி பல சடங்குகளும் ஹோமங்களும் நடத்தப்படுகின்றன.

— பா. குணா



எங்கியோ போயிட்டாங்க!

அசிமோ. பிறந்த இடம் ஜப்பான். வயது பதினைந்து. நாலடி உயரம். எடை 43 கிலோ. நிதானமான நடை. யாரையாவது பார்த்தால்... உடம்பை வளைத்து ஜப்பானிய வணக்கம் செலுத்தி "வந்தனம் ஐயா... என் பெயர் அசிமோ" என்று அழகாய் அறிமுகப் படுத்திக் கொள்வான். நடனம் ஆடப் பிடிக் கும். குழந்தைகளிடம் அவன் ரொம்பப் பிரபலம். சந்தோஷமாக விளையாடுவான். சண்டை கிடையாது, ரகளை இல்லை, அழுகை இல்லை... அவ்வளவு சமத்து.

அசிமோவின் இந்த நடவடிக்கைகளைப் பார்த்து மூக்கின் மேல் விரலை வைக்கக் காரணம் இருக்கிறது. அவன் சாதாரணச் சிறுவனல்ல. ஜப்பானின் ஹோண்டா நிறுவனம் பதினைந்து வருட ஆராய்ச்சிக்குப் பிறகு உருவாக்கியிருக்கும் ரோபாட் தான் அசிமோ. பார்ப்பதற்கு ஆம்ஸ்ட்ராங் நிலா வில் கல்யாணம் செய்து கொண்டு அங்கே அவருக்கு பிறந்ததுபோல ஆஸ்ட்ரநாட் உரு வம். இரும்பு பாகங்களின் உறுத்தல்களும், குழப்ப வயர்களும் இல்லாமல் வழ வழ மொழு - மொழு தேகத்தோடு, முதுகில் புத்த கங்களைச் சுமந்து ஸ்கூலுக்குப் போகும் ஒரு பையன் மாதிரி இருக்கிறான் அசிமோ.

கிட்டத்தட்ட மனித உடலமைப்பைச் சார்ந்தே அவனை வடிவமைத்திருப்பதால் இந்த நளின வனப்பு. பாதத்தில் ஆறு 'ஆக்ஸிஸ் சென்சார்கள்' பொருத்திய அமைப்பினால் மணிக்கு இரண்டு கிலோ மீட்டர் வேகத்தில், கல் லும் முள்ளும் நிறைந்த கரடு முரடான பாதையில் கூட எளிதாய் நடக்கும். மாடிப் படிகளைக் கூட ஏறி இறங்கும் திறன் கொண்டது. நடக்கும் பாதையில் தடை இருந்தால் சென்ஸார்களால் கணித்து, நின்று உடம்பின் ஈர்ப்பு சக்தியை திசை திருப்பி, உடலை நகர்த்தி முன்னேறும் நுட்பம் பொதிந்திருக்கும் புத்திசாலி ரோபாட். கண்களில் உள்ள சென்சார் வழியாக விவரங்களைக் கணிக்கும் திறனும், சின்னச் சின்ன உத்தரவுகளுக்கு கீழ்ப்படி யும் வியக்கத்தக்க நேர்த்தி யும் கொண்டது.

அசிமோவை ஐ.பி.எம். போல நிறைய நிறுவனங்கள் வாடகைக்கு எடுத்துக் கொள்கின்றன. என்ன, சம்பளம் கொஞ்சம் அதிகம் தரணும். ஒரு மாதத்திற்கு எழுபது லட்ச ரூபாய், அம்புட்டுதான்!

- ஆனந்த் ராகவ்
படம் : 'தி நேஷன்'

புத்தாண்டு மலர்கிறது...
பொற்காலம் பிறக்கிறது!



தமிழ்ப் புத்தாண்டு சீட்டுத் திருவிழா
1-14, ஏப்ரல் 03

சுபானு: அறுபது தமிழ் வருடங்களின் வரிசையில் 16-ஆவதாக வரும் ஆண்டு. இப்புத்தாண்டில், வருங்காலம் வாழ்வின் பொற்காலமாக விளங்க, பெரியவர்கள் சிறியவர்களுக்கும், குழந்தைகளுக்கும், பணம் தந்து வாழ்த்துவது வழக்கம்.



ஸ்ரீராம் சீட்டுத் திட்டங்கள்: இந்திய மக்களின் அனுபவ அறிவில் உதயமானவை. காலத்தை வென்ற, உலகின் தலைசிறந்த சேமிப்பு முதலீட்டு முறை. மூவாயிரம் ஆண்டுகள் ஆகியும் இளமையாகவும், புதுமையாகவும் திகழ்பவை. உங்களது நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தேவையான கூறுகள் அனைத்தும் கொண்டவை.



உற்சாகம் ஊட்டும் உயர் வருவாய்: இந்தியாவில் சேமிப்புகளின் மீதான வருவாய் வீழ்ந்து கொண்டே போகின்றது. ஆனால், சீட்டு சேமிப்புத் திட்டங்களில் தள்ளுபடி ஏலத்திற்கான உச்சவரம்பு 40% ஆக உயர்த்தப் பட்டது முதல், சந்தாதாரர்களின் கூறுத்தொகை (Dividend) உற்சாகம் தரும் வகையில் உயர்ந்து வருகிறது. ஏலத்தின் போது தேவையற்ற போட்டிகள் தவிர்க்கப்பட்டு, அவசரத் தேவைக்கு எளிதாகத் தொகை கிடைக்கும் வாய்ப்பு அதிகரித்துள்ளது.

ஸ்ரீராம் சிட்ஸ் சிறப்புகள்

• சீட்டு நிதிச் சேவையில் இந்தியாவின் இமயம் • பல லட்சம் குடும்பங்களின் வளமைக்கு வழிகாட்டி • ரூ.9,000 கோடிக்கு மேல் சீட்டுத் தொகை பட்டுவாடா • பலருக்கு நேரடி, மறைமுக வேலை வாய்ப்பு • தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் 465 கிளைகள்.


சித்திரை விழாவைக் கொண்டாட
சீர்மிகு சிறப்புப் பரிசுகள்!



மகாராஜா எலெக்ட்ரிக்
ரைஸ் குக்கர்

டிராலி சூட்கேஸ்


ஹாக்கின்ஸ்
ஃபியூச்சுரா படிலா


செல்லோ
லஞ்ச் மேட் (2)



ஃபீனிக்ஸ் கடாய்

செல்லோ
மார்கரிட்டா கேஸரோல்


எஸ்.எஸ்.சி.பி.
சைனீஸ் பாட்



எஸ்.எஸ். குக்பாட்
(மூடியுடன்)

சீட்டு மதிப்பு	சந்தாதாரர் பரிசுகள்
ரூ. 10.000	ஸ்ரீபெட் டவர் பேக் (4)
ரூ. 15.000	லஞ்ச் மேட்
ரூ. 25.000	எஸ்.எஸ். குக்பாட் (மூடியுடன்)
ரூ. 30.000	பிக்னிக் செட்
ரூ. 50.000	எஸ்.எஸ்.சி.பி. சைனீஸ் பாட்
ரூ. 75.000	செல்லோ மார்கரிட்டா கேஸரோல்
ரூ. 1.00.000	ஃபீனிக்ஸ் கடாய்
ரூ. 1.50.000	செல்லோ லஞ்ச் மேட் (2)
ரூ. 2.00.000	ஹாக்கின்ஸ் ஃபியூச்சுரா படிலா
ரூ. 3.00.000	டிராலி சூட்கேஸ்
ரூ. 5.00.000	மகாராஜா எலெக்ட்ரிக் ரைஸ் குக்கர்

- நுழைவுக் கட்டணம் தனி • முன் அனுமதி பெறப்பட்டது
- நேரடியாகச் சீட்டில் சேருவோருக்கும் சந்தாதாரர் பரிசு உண்டு.

ஸ்ரீராம் சிட்ஸ்
தமிழ்நாடு (பி) லிமிடெட்

சுப்ரமணியன் பில்டிங், 1, கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை 600 002.
போன்: 28461833 - 38 www.shriramchits.com

WORDCRAFTS

விடிகாலை ஐந்து மணிக்கெல்லாம் கைக் குழந்தை சுனிஷ்கா அலாரம் வச்ச மாதிரி எழுந்து விடுவாள்.

பிஞ்சுக் குரலின் அழுகை சத்தம் மகனுக்கும் மருமகளுக்கும் எப்படியோ, சொர்ணம்பாளுக்கு அதுதான் சுப்ரபாதம்.

"எழுந்துட்டியா என் ராஜாத்தி" என்று பேத்தியைக் கொஞ்சிக் கொண்டே துயில் கலைந்து எழுந்து விடுவாள்,

வீட்டுப் பூச்சு



அவள்.

அன்றைக்கும் அப்படித்தான்.

சியாமளா, தூளியில் அழுத குழந்தையைத் தூக்கி மாமியாரிடம் ஒப்படைத்துவிட்டு மறுபடியும் கொசுறு தூக்கம் தூங்க ஆரம்பித்து விட்டாள்.

குழந்தையைக் காலுக்கு வைத்து, கழுவி, குட்டி மெத்தையில் கிடத்

"கபாலி இனி திருடுறதில்லைனு முடிவெடுத்திட்டானாம், சார்..."

"அடப்பாவி! இவ்வளவு அதிர்ச்சியான விஷயத்தை எப்படிய்யா இவ்வளவு கூலா சொல்லிக்கிட்டிருக்கே...?"

- வி. சகிதா முருகன்



தமிழினியன்

தினாள், சொர்ணாம்பாள்.

''சமர்த்தா படுத்துக் கோடி கண்ணு'' என்று கொஞ்சி முத்தமிட்டாள். ஹம்மிங் குரலில் தாலாட்டுப் பாடிக் கொண்டே ஸ்டவ் மூட்டி குழந்தை குளிக்க வெந்நீர் வைத்தாள்.

ஆறு மணி தொலைக்காட்சி.

'இந்த நாள் இனிய நாள்' ஞாபகம் வந்தது. ஞாபகம்தான். அவள் என்ன ஒரேயடியாக உட்கார்ந்து பார்க்கப் போகிறாளா... கிடையாது. இதுதான் என்றில்லை. எல்லா கண்ணராவியும் பார்ப்பாள். வீட்டுக்குள் அடைந்து கிடைப்பவளுக்கு வேறு என்ன தான் பொழுதுபோக்கு? ஆனால் எதையும் முழுசாய்ப் பார்க்க இயலாது அவளால். ஹாலைக் கடக்கும்போது தென்படும் காட்சி தான். ரசிக்கும்படியாக இருந்தால் நிமிஷப் பொழுதேனும் நிற்பாள். இல்லையேல் ஜூட்! வேலைகள் சங்கிலித் தொடராக அவளை விரட்டிக் கொண்டே இருக்கும்.

தற்சமயம் யாரும் இன்னும் எழுந்திருக்கவில்லை. குழந்தையும் சமர்த்தாய்க் கால்விரலைச் சப்பிக் கொண்டிருக்கிறாள். இடையூறு இல்லாமல் இரண்டு நிமிஷம் டீ.வி பார்க்கலாமே...

ஆர்வம் மேலிட தொலைக்காட்சிப் பெட்டியைத் திறந்தாள், சொர்



ணம்பாள்.

"அம்மோவ்..!"

காம்பவுண்ட் கதவில் கௌரியின் குரல்.

''என்னடி அதுக்குள்ளாற. ஏழரைக்குத்தான் நீ வருவே?''

"பத்து மணிக்கு ஊருக்குப் போறேம்மா. அதனாலே சீக்கிரம் துலக்கிப் போட்டுற லாம்னு வந்தேன்."

"இரு... இரு..."

பத்துப் பாத்திரங்களை பிளாஸ்டிக் கூடையில் நிரப்பி, புழக்கடை குழாயடியில் கொண்டு வந்து போட்டாள்.

குழந்தை இரண்டுக்குப் போய் விட்டான்.

ஓடிப் போய் துணி மாற்றித் துடைத்து, வெந்நீர் தயாராக இருந்ததால் குழந்தையைக் குளிக்க வைத்தாள்.

குழந்தைக்குப் பவுடர் பூசி, சட்டை மாட்டிக் கொண்டிருந்தபோது -

"அம்மா டிஷ் சோப் தீர்ந்துடுச்சு. வேற சோப் இருக்கா?"

"இரு தர்றேன்."

இடுப்பில் குழந்தையை வைத்துக் கொண்டே கௌரிக்குச் சோப் சப்ளை.

"அம்மா காப்பி ரெடியா?'' பிள்ளையாண்டான் கண்ணைக் கசக்கிக் கொண்டு வந்தான்.

''வர்றேண்டா. சியாமளா என்ன பண்ணுறா?''

"பாத்ரூமிலே இருக்கா."

குழந்தை குளித்து 'ஃபிரஷ்' ஆனதும் கண் மயங்கினான். தூளியில் கிடத்தி தூங்க வைத்தாள் மாமியார்க்காரி.

சியாமளா அடுக்களைக்கு வந்ததும், சொர்ணம்பாள் கீரை வாங்கக் கிளம்பினாள்.

"அம்மா ஒரு நிமிஷம்" மகனின் குரல் தேக்கியது.

"என்னடா ரவி?"

"ஆபீசுக்கு நேரமாச்சு. இந்தப் பொத்தானைக் கொஞ்சம் தைச்சுக் கொடேன். கௌரி ஏதோ கைவேலையா இருக்காளாம்."

பொத்தான் தைத்துக் கொண்டே டீ.வி.யில் கொஞ்சம் பார்வையைச் செலுத்தினாள், சொர்ணம்பாள். அந்த நேரம் பார்த்து 'பவர் ஆஃப்'.

"ரவி... உன் சட்டை ரெடி."

"தாங்க்யூமா."

கீரை வாங்கி வந்து, டீ.வி முன் உட்கார்ந்து ஆய உட்கார்ந்தாள், சொர்ணாம்பாள்.

"மாமி, கீரை நான் ஆயறேன். குழந்தையோட ஜட்டி எல்லாம் ஈரமாக் கிடக்கு. அதைச் சித்தே அலசிப் போட்டுருங்களேன். வெயிலிலே காயட்டும்" என்று மாற்றுவேலை கொடுத்தாள் மருமகள்.

துணிகளைத் துவைத்து கொடியில் உலரப் போட்டுக் கொண்டிருந்தாள், அவள்.

டீ.வியில் கல்யாணப் பரிசு - தங்கவேல் காமெடி.

அவசர அவசரமாய் ஹாலுக்கு வந்தாள்.

சாப்பாடு தூக்குகிறவன் சைக்கிள் மணி.

"இருடாப்பா... வர்றேன்."

மகனுக்கு காரியர் சாப்பாட்டைக் கொடுத்துவிட்டு கதவை மூடப் போன போது, மின்சார இலாகாவிலிருந்து மீட்டர் ரீடிங். அவன் போனதும் பேப்பர் பில்.

அதற்குள் அந் நிகழ்ச்சி முடிந்து விட்டது.

சொர்ணம்பாள் குளித்து, சாப்பிட்டு முடித்தாள்.

கிண்டல் பிண்டர்!



"சியாமளா... இன்னிக்கு கே.டி.வியில் என்ன மாட்னி?"

"தங்கப்பதுமை."

"தங்கமான படம்" சொல்லும்போதே மாமியின் நாவில் ஜலம்.

"மிளகாய் வத்தலும், மல்லியும் அலுமினியத் தூக்கிலே தனித்தனியா வச்சிருக்கேன் மாமி. கரண்ட் இருக்கறப்பவே போய் அரைச்சுட்டு வந்தாத்தான் நாளைக்கு குழம்பு வைக்க முடியும்..."

"அடடே... ஆமாம்... அதை நான் மறந்தே போயிட்டேன். எடு...எடு..."

இடுப்பிலும் கையிலுமாய், தூக்கை எடுத்துக் கொண்டு வெளியேறினாள், சொர்ணம்பாள். மில்லில் இடையிடையே மின்தடை ஏற்பட்டதால், அரைத்துக் கொண்டு வீடு திரும்பும்போது மணி ஐந்து.

தூக்குகளை கூடத்தில் வைத்துவிட்டு ஆசு வாசமாய் முந்தானையால் விசிறிக் கொண்டாள். அறை உள்ளே இருந்த சியாமளாவுக்கு மிளகாய்ப் பொடி நெடி ஏறியதோ என்னவோ. வெளியில் வந்தாள்.

"இன்னிக்கு அவர் பஜ்ஜி வேணுன்னாரு மாமி."

"கடலை மாவு இருக்கா?"

"எல்லாம் அடுப்படியில் எடுத்து வச்சிருக்கேன்."

ஏழு மணியானதும் வெஞ்சனத்துக்கு காய் அரிந்து கொடுத்துவிட்டு, கோயிலுக்குப் போனாள். திரும்பி வந்ததும் "மாமி... குழந்தைக்கு செரிலாக் கொடுங்கோ" என்று கிண்ணத்தில் கலக்கி வைத்தாள், சியாமளா.

குட்டிச் செல்லத்துக்கு 'மம்மு' ஊட்டுவதென்றால் சாதாரண விஷயமா. ஜெகப் பிரளயம்தான். சொர்ணாம்பாளுக்கு மூச்சு வாங்கியது முழுக்கிண்ணத்தையும் காலி பண்ணுவதற்குள்...

அப்புறம்...

ஒன்பது மணிக்கு ஆரம்பித்த சாப்பாட்டுக் கடை பத்து மணிக்குத்தான் முடிந்தது.

ரவியும் சியாமளாவும் அறைக்குள் புகுந்து கதவைத் தாள் போட்டுக் கொண்டார்கள்.

'அம்மாடீ...' என்று டி.வியைத் திறந்துவிட்டு காலை நீட்டிப் போட்டுக் கொண்டு ஹாலில் உட்கார்ந்தாள், சொர்ணம்பாள். டி.வியில் 'காதலிக்க நேரமில்லை.'

'தமாஷா இருக்கும்' என்று தனக்குத் தானே சொல்லி மகிழ்ந்தாள். ஆர்வத்துடன் கலந்த எதிர்பார்ப்பு.

அப்போது அறைக்கதவு திறந்து ரவி வெளியே வந்தான்.

"இன்னிக்கு வியாழக்கிழமை. ஸ்போர்ட்ஸ் சேனலில் மல்யுத்தம் இருக்குமே" என்று சேனலைத் திருப்பினான்.


சொர்ணாம்பாள் திகைத்தாள். "என்னடா ரவி... சேனலை மாத்திட்டியே..."

"ஆமாம்மா... நீ பொழுதன்னைக்கும் வீட்டிலேயே இருக்கிறவதானே. எப்ப வேணாலும் பார்த்துக்கலாம். போய்ப் படு..." என்று விரட்டினான் பிள்ளை.


"சரிடாப்பா..." முழங்காலைத் தாங்கிப் பிடித்துக்கொண்டு மெள்ள எழுந்தாள், சொர்ணாம்பாள். ●

படத்தில் சதுரங்கக் காய்கள் வடிவில் அமைக்கப்பட்டிருக்கும் பிரபலங்கள் பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்தவர்கள். சதுரங்க காய்கள் வடிவில் பிரபலங்களை அமைத்த கலைஞரின் பெயர் பீட்டர் பின்டர். பிரிட்டிஷ் நாட்டைச் சேர்ந்தவர். பின்டர் கையில் பிடித்திருக்கும் சதுரங்க காய் பிலிப்பைன்ஸ் நாட்டின் ஜனாதிபதியான க்ளோரியா அரோயா. சதுரங்கத்தில் இவரை ராணியாக வடிவமைத்திருக்கிறார் பின்டர். ராணியாகிய க்ளோரியா அரோயா கையில் ஏந்தியிருப்பதோ சலவை சோப் மற்றும் துடைப்பான். பணமேடையின்மீது நின்ற வண்ணம் கையில் சீட்டுடன் காட்சி தருபவர் நீக்கப்பட்ட ஜனாதிபதியான ஜோசப் எஸ்ட்ரடா (கீழ் வலது). இடப் பக்கம் இருப்பவர் மணிலாவின் சமயவட்டத் தலைவரான கார்டினல் ஜெய்மி சின். நடுவில் கண்ணாடி அணிந்து சிகரெட் புகைத்த வண்ணம் தென்படுபவர் முன்னாள் ஜனாதிபதியான பிடெல் ரமோஸ். தமது கலைப் பொருட்களுடன் காட்சி யளிக்கும் பீட்டர் பின்டர் தமது இந்த கலைப் பொருட்களை சலவைக்கல் தூசும், பிசினும் கொண்டு தயாரித்தாராம்.

செய்தி : சுறுசுறுப்புத் திலகம்
நன்றி : 'தி வீக்'



"மன்னா தங்களைப் பாராட்டிப் பாட புலவர் ஒருவர் வந்திருக்கிறார்."
"கஜானா காலி என்பது உங்களுக்குத் தெரியும். கடனுக்குப் பாடுவாரா, கேட்டு வாரும் மந்திரியாரே!"
— வி. சகிதா முருகன்



ஷாப்பிங் திருவிழா!

ஒரு பக்கம் ஆச்சரியமூட்டும் ஆப்பிரிக்கன் சர்க்கஸ், மற்றொரு பக்கம் மெய்சிலிர்க்க வைக்கும் ஸ்பெயின் நாட்டு புல் ஃபைட், இன்னொரு பக்கம் கையினால் செய்யப்பட்ட, சிறியதும் பெரியதுமான, சுமார் ஒரு லட்சம் தரை விரிப்புகளைக் கொண்ட கார்பெட் ஒயாஸிஸ், வேறு ஒரு பகுதியில்











1. பங்களாதேஷ் அரங்கின் உள்ளே...
2. ஸ்பிரிங் கயிறில் துள்ளி விளையாடும் சிறுவர்கள்
3. பிர்லா மியூசியத்தின் மாடலில் அமைந்த இந்திய அரங்கு
4. ஜெய்ப்பூர் ஹவா மஹால் மாதிரி வடிவம்
5. குளோபல் வில்லேஜ் நுழைவு வாயில்
6. பரிசுப் போட்டிகளுக்கும் பஞ்சமில்லை
7. அழகிய பொம்மைக் கடை....

அதிசயிக்க வைக்கும் உலகிலேயே மிகப் பெரிய ஜெயண்ட் ஃபெரீஸ் வீல் என்று துபாய் நகர் முழுக்க நிகழ்ச்சிகளின் மயம்! பணம் செலவாகிறதே என்று இல்லை துளி பயம்!

எங்கு பார்த்தாலும் மின்மினிப் பூச்சியாக வண்ண வண்ண விளக்குகளின் அலங்காரம். உயரமான கட்டடங்கள். எல்லாம் வர்ண விளக்குகளின் வெளிச்சத்தில் குளித்து... குளிர்ச்சியாகக் காணப்பட்டன.

முப்பத்திரண்டு நாட்களாக நடைபெற்ற 'துபாய் ஷாப்பிங் திருவிழாவில் மிக அதிக பார்வையாளர்களை (அதாவது சராசரியாக ஒரு நாளைக்கு ஒரு லட்சம் பேர் வரை) கவர்ந்த ஓர் அம்சம், 'குளோபல் வில்லேஜ்'

சுமார் மூன்றரை லட்சம் சதுர மீட்டர் பரப்பளவில், 'குளோபல் வில்லேஜை' அமைத்திருக்கிறார்கள். இவ்வாண்டு முப்பத்தியொரு நாடுகளின் அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. துபாய்க்கு 'சிட்டி

ஆஃப் கோல்டு' என்றொரு பெயரும் உள்ளதால்... புதிதாக, 'கோல்டு ஜுவல்லரி' அரங்கும் இடம் பெற்றிருக்கவே அங்கே தான் பெண்கள் கூட்டம் மொத்தமும் படையெடுத்தது!

இன்னொரு பெருமைக்குரிய விஷயம்... முப்பத்தியொரு நாடுகளின் அரங்குகளில் இந்திய அரங்குதான் மிகப் பெரியது. ஒவ்வொரு ஆண்டும் இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்தின் கலை, கலாசாரம், பண்பாடு ஆகியவற்றை சித்திரித்துக் காட்டுகிறார்கள். கடந்த ஆண்டு, ஆந்திரா மாநிலம் இடம் பெற்றது. இவ்வாண்டு, ராஜஸ்தான் மாநிலத்தை இந்திய அரங்கு பிரதிபலித்தது.

இந்திய அரங்கின் முன்பு மிகப் பிரமாண்டமான முறையில் பிர்லா மியூசியத்தை அமைத்துள்ளனர். அதன் அமைப்பும், வனப்பும், நுணுக்கமும், கைவண்ணமும் எல்லோரையும் ஒரு நிமிடம் வியந்து நிற்க வைக்கிறது. அரங்கினுள் நுழைந்ததும்... இன்னும் ஆச்சரியம்! தேன் கூடுகளை அடுக்கி வைத்தார் போல் 'பிங்க் சிட்டி' என்ற பெயர்வரக் காரணமான ஜெய்ப்பூர் நகரின் 'ஹவா மஹா'லை நம் கண்முன்னே அப்படியே அமைத்துள்ளனர். எப்படி அதே மாதிரி அச்சாக அமைத்தார்களோ? வாழ்க கலைஞர்கள் என்றபடியே விசாரித்தால்....

இவ்வளவு சிறப்பான அரங்கை அமைத்தது தமிழ் நாட்டைச் சார்ந்த ஐம்பத்தியேழு கலைஞர்கள்தானாம்.

ஒரு பக்கம் யுத்த பீதி, மற்றொரு புறம் பயமுறுத்தும் பயங்கரவாதம், கூடவே இனவெறி, மதவெறி – இவை எல்லாம் கடந்து... பல தரப்பட்ட மக்கள், கலை, கலாசார, பண்பாடு ஆகியவற்றால், ஒன்றிணைந்து, ஒற்றுமையாக இந்த 'குளோபல் வில்லேஜில்' கண்டபோது மகிழ்ச்சியாக இருந்தது. இந்த மகிழ்ச்சி எந்நாளும் தொடர... நீங்களும் கூட்டுப் பிரார்த்தனை செய்யுங்கள்!

கட்டுரை, படங்கள்:
துபாய் இப்ராஹீம்



''ஹலோ...யாரது? பாறையா!''

கோடம்பாக்கத்தின் நம்பர் ஒன் மசாலா மன்னர் என்ற முத்திரையோடு. சூப்பர் ஸ்டார் வரை இயக்கி முடித்துவிட்ட அந்த வெற்றிப்பட இயக்குனருக்குள் இப்போது இரசாயன மாற்றம். ''நான் இதுவரை இயக்கிய படங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்ட படைப்பாக 'பாறை' இருக்கும். கிராமத்தில் வாழ்கிற நிஜக் கேரக்டர்களை. அவர்களின் இயல்புத்தன்மை துளிகூட மாறிவிடாத வண்ணம். சினிமாத்தனங்களைத் துணிச்சலாக ஓரம்கட்டிவிட்டு மண் வாசனையோடு அவர்களைத் திரையில் வாழ வைத்திருக்கிறேன்'' என்று சொல்லும் கே.எஸ்.ரவிக்குமார். இதுவரை சரத்குமாரை வைத்து யாரும் செய்யாத முயற்சியை. தாம் செய்திருப்பதாகச் சொல்கிறார்.

இந்தப் படத்தில் சரத்குமாரின் தோற்றமும் பார்வையுமே பாதிக் கதையைச் சொல்லுமாம். படப்பிடிப்பு இடைவேளை என்றாலும் சரி, படப்பிடிப்பு இல்லாத நேரம் என்றாலும் சரி, தமக்கு வரும் தொலைபேசி அழைப்புகளுக்கு ''ஹலோ'' சொல்வதற்குப் பதிலாக ''நான் பாறை பேசறேன்'' என்று சொல்லும் அளவுக்கு பாத்திரத்தோடு ஒன்றிவிட்டாராம் சரத்.

– ஸ்ரீ

கோமேதகம் புஷ்பராகம் நீலம் வைடூரியம் முத்து

பாரதி பாலசுந்தர்

“**எ**ன்னது, குழந்தையை, தத்து எடுத்துப் போன குழந்தையைத் திரும்பக் கொண்டு வந்துவிட்டாயா, வேண்டாம் என்று திரும்பக் கொடுக்க வந்திருக்கிறாயா?” பெரிய அலறலாக வெளிப்பட்டது அவரின் குரல்.

சட்சட்டென்று சன்னலிலும் வாசலிலும் முகங்கள் தோன்றுவதை சங்கீதாவால் உணர முடிந்தது. முதுகுக்குப் பின்னால் இருந்தும் துளைக்கும் பார்வைகள். நிர்வாகி இப்படிக் கத்துவது அங்கே புதியதோ என்னவோ.

அவள் மாதிரி ஒரு பெண்ணை இந்த அடாப்ஷன் சென்டர் இதுவரை பார்த்ததில்லை. இந்த சென்டர் இதுவரை நாற்பத்து ஏழு குழந்தைகளை தத்துக் கொடுத்திருக்கிறது. அதனுடைய ஐந்து வருட வரலாற்றில் எடுத்துப் போன குழந்தையைத் திருப்பியவர் யாருமே கிடையாது. எல்லாரும்

பூப்போல பூப்போல

குழந்தையோடு சந்தோஷமாய் இருக்கிறார்கள். அவள் படித்தவள் தானே? அவள்தானே அவசரப்பட்டாள், அவள்தானே வந்த அன்றே குழந்தை வேண்டும் என்று துடித்தாள்? அவள் கணவன் மற்றும் மாமியாரின் மௌனத்தைப் பற்றிக் கேட்ட போது அவள்தானே அவர்களுக்குச் சம்மதம் என்றாள்? வாங்கிப் போகவும் வேண்டாம் என்று திருப்பவும் இது என்ன பொருளா? ஒரு மனித உயிர், அன்றியும் இது என்ன சினிமாவா? குழந்தைகளை வரிசையாக நிற்க வைத்து - ஒரு குழந்தையை எடுத்துப் போக, வேண்டாம் என்றால் திரும்ப விட? அவள் ஒரு பெண்ணா, முதலில் அவள் ஒரு மனுஷப் பிறவி தானா....?

சங்கீதா அழத் துவங்கியபின்தான் நிர்வாகியின் மலையாள ஆங்கில கர்ஜிப்பு நின்றது.

“அழாதீங்கம்மா... கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க. உங்களால எவ்வளவு கஷ்டம். இந்தப் பிஞ்சுக் குழந்தை ஏற்கெனவே

“மன்னா, கிரீடத்தைக் கிலோ கணக்கில் தங்கம் வைத்துச் செய்யாதீர்கள் என்று சொன்னேன், கேட்டீர்களா?”


“அதற்கு என்ன இப்போது?”

“தங்களுக்கு ‘தலைக்கனம்’ ஜாஸ்தி என்று பக்கத்து நாடுகளில் பேசிக் கொள்கிறார்கள்!”

— விசித்ரா முருகன்



மினி தொடர்




நீங்கதான் அம்மான்னு உணரத் தொடங்கியிருக்கும். அதை வெட்டி முறிச்சிட்டு, இங்கே விட்டுட்டு வீட்டுக்குப் போய் உங்களால தூங்க முடியுமா? என்ன பிரச்னை உங்களுக்கு?"

சங்கீதா சொன்னாள். எட்டு வருஷ அலைக்கழிப்பை. ஒவ்வொரு மாசமும் எதிர்பார்த்து ஏமாந்த ஏக்கத்தை. காத்துக் கொண்டிருந்த டாக்டர்களின் மருத்துவ மனைகளின் பளபளப்பை, பணப்பறிப்பை. விவரிக்க முடியாத மலட்டுத் தன்மை, அன்எக்ஸ்பிளெய்ண்டு இன்ஃபெர்டிலிடி என்றதை. "இதுக்கெல்லாம் சித்த வைத்தியம் தான், ஆயுர் வேதம்தான்' என்று வேறு வேறு பெயர்கள் சொன்ன மற்ற மருத்துவ முறைகளை. கணவனோடு சேர்ந்து இருப்பதில் காதலே இல்லாமல் போய் இப்போதாவது பிள்ளை உண்டாகுமா என்ற பந்தய மனப்பான்மையை, கோவில்களில் செய்த அங்கப் பிரதட்சணங்களை, மடியில் வைத்துக் கொண்ட சந்தான கோபால கிருஷ்ண விக்ரகங்களின் கனத்தை. உறவினர் வீட்டுச் சீமந்தங்களுக்குப் போனபோது "பக்கத்துல வைச்சு வளை அடுக்கினா உனக்கும்

குழந்தை பிறக்கும்'' என்ற பச்சாதாப அவமானத்தை. முரளிக்கும் இவளுக்குமான உறவு இயந்திரம் போல ஆனதை. 'எல்.ஐ.சி. பாலிசிக்குப் பணம் கட்டணும், ரசத்தில உப்பு கம்மி. இன்னைக்கு லஞ்ச் வேண்டாம்' இவை தவிர அவர்களுக்குள் பேச்சற்றுப் போனதை. ஆவேசத்தில் வந்து மூன்று மாதக் குழந்தையை தத்து எடுத்துப் போன பின்னால் ஒவ்வொன்றாக முளைத்த பிரச்னைகளை, இவளின் அம்மா உதவி செய்ய முடியாமல் நோய் வாய்ப்பட்டிருப்பதை, இவளின் மாமியார், 'என்ன ஜாதியோ, என்ன மதமோ, என்ன எழவோ' என்று குழந்தை அழுதால் கூட தூளியை ஆட்டாததை. 'என்னதான் இருந்தாலும் எனக்குப் பிறந்ததா' என்று முரளி சொன்னதை. 'மெட்டர்னிடி லீவா, என்ன விளையாடறீங்களா, குழந்தையை தத்து எடுத்தா மெட்டர்னிடி லீவு தரணும்னு என்ன சட்டத்தில் இருக்கு?' என்று மேலதிகாரி தர்க்கம் செய்ததை. காலை எட்டிலிருந்து இரவு ஏழு வரை காப்பகத்தில் இருப்பதைவிட, இங்கேயே திருப்பி விடலாம் என்று அவள் முடிவு செய்ததை. தன்னை விட, சிறந்த அம்மாவும், தன்னுடையதை விட சிறந்த குடும்பமும் கிடைக்க அந்தக் குழந்தைக்காக தான் பிரார்த்தனை செய்யப் போவதை... நிர்வாகி அம்மாள் ஒரு பெருமூச்சோடு அவளைப் பார்த்தாள். இயலாமையைப் பார்த்துப் பரிதாபப்படும் பார்வை.

''உங்களைப் பார்த்தால் எனக்கும் கஷ்டமாகத்தான் இருக்கிறது. ஆனால் பொருளைத் திருப்புவது போல் குழந்தையைத் திருப்ப முடியாது. எதற்கும் ஒரு கடிதம் எழுதிக் கொடுங்கள். என்ன செய்வது என்று மற்ற நிர்வாகிகளைக் கேட்டு வருகிறேன். வேண்டாம் என்று நீங்கள் சொன்னபின், பலவந்தமாய் குழந்தையை உங்களிடம் கொடுக்கவும் எனக்கு இஷ்டமில்லை. பிளீஸ் வெய்ட்!''



''ஓட்டல்காரர் எடுக்கப்போற படம் நிச்சயம் ஊத்திக்கும்னு எப்படி உறுதியாகச் சொல்றே...?''
''படத்துக்கு 'சரண்டி'ன்னு டைட்டில் வைச்சுத் தொலைச்சிருக்காரே...!''
— ஜி. வினோத்

நிர்வாகி எழுந்து போய்விட்டார். அவர் வருவதற்குக் காத்திருப்பதற்குள் பலபேர் ஜன்னல் வழியாக சங்கீதாவைப் பார்த்துப் போனார்கள். 'அடிப்பாவி' என்று பார்க்கும் பார்வை. கண்ணுக்குத் தெரியாத கிடுக்கிப் பிடிகள் முளைத்து இவள் கழுத்தை நெரித்தன. ரொம்ப நேரம் குழந்தையை மடியில் வைத்திருந்து இரு கால்களும் மரத்துப் போவது போலிருந்தது. காலை மாற்றி வைத்து, குழந்தையை இடம் மாற்றிப் பார்த்தாள். நரம்பை இழுப்பது போன்ற உணர்வு. குழந்தையை அப்படியே மேசை மீது படுக்கப் போட்டாள். இது பிறந்து நான்கு மாதங்களுக்குள் இது இரண்டாவது நிராகரிப்பு என்று நினைத்துக் கொண்டாள். முதல் நிராகரிப்பு எங்கே? குப்பைத் தொட்டியா, அரசுத் தொட்டிலா? ஆஸ்பத்திரியிலேயே கைகழுவப்பட்ட கேசா? இப்போது இரண்டாவது நிராகரிப்பு. இந்த முறை குப்பைத் தொட்டி இல்லை. ஏ..ஸி. அறையில் நாகரிகமான ஆங்கில வார்த்தைகளுக்கு நடுவில், ஒன்றும் பெரிய வித்யாசமில்லை. முகம் தெரியாத இந்தக் குழந்தையின் அம்மாவும் நானும் ஒரே நேர்க்கோட்டில் சந்திக்கிறோம். எங்கள் சுயநலத்திற்கும் கோழைத் தனத்திற்கும் இந்தக் குழந்தையை பலியாக்குகிறோம். சங்கீதா திரும்பக் குழந்தையைப் பார்த்தாள். நல்ல கறுப்பு,

'எடுத்ததுதான் எடுத்த, சிவப்பா எடுக்கக் கூடாதா?' என்று மாமியார் சொன்னது நினைவுக்கு வந்தது. கண்ணன் மாதிரி, காளி மாதிரி, குயில் மாதிரி கறுப்பு. சங்கீதா பார்க்கும்போதே குழந்தை கண்ணைத் திறந்தாள். வீலென்று ஒரு அழுகை. ஏனோ மற்ற சமயம் போல் சங்கீதாவுக்குப் பயமாக இல்லை. கையில் வைத்திருந்து இலேசாக ஆட்டினாள். திடீரென்று அவளுக்கு நினைவுக்கு வந்தது. ஜான்சி ராணிக்குக் கூட குழந்தை பிறக்க வில்லை என்று. அவளைப் போலவே ஜான்ஸி ராணியும் தத்து எடுத்துக் கொண்டாள். தத்து எடுத்தாலும் இது என் பிள்ளை தான் என்ற உரிமைக்காகத்தான் அத்தனை பெரிய பிரிட்டிஷ் ராஜ்ஜியத்தோடு சண்டை போட்டாள். இவளுக்கு ஒரு மாமியாரோடும், அலுவலக நிர்வாகியோடும், கணவனோடும் போராட முடியவில்லை.

குழந்தையின் கையில் தன் விரலைக் கொடுத்தாள். டக்கென்று பிடித்துக் கொண்டது. அந்த நொடியில் சங்கீதாவுக்குள் ஏதோ ஒன்று புரண்டது. அப்பா இவள் காலைப் பிடித்துவிட்டபோது தோன்றிய சுகம், அம்மா இவளுக்காகவென்று தையல் வேலை செய்த சல்வாரை எடுத்துக் காட்டும்போது தோன்றும் இனிமை, 'நீ எனக்குத் தேவை' என்று ஓர் உயிர் மற்றொரு உயிரிடம் ஒடுங்கும் நிறைவு...' இப்போது அவள் என்ன செய்ய வேண்டும்? இந்த நிறைவை முழுங்கி விட்டு, விரலைப் பிடித்திருக்கும் குழந்தையின் கையை விலக்கி, விண்ணப்பத்தை எழுதிக் கொடுத்துவிட்டு குழந்தையைக் கொடுக்க வேண்டும். பிறகு வீட்டுக்குப் போய் குழந்தை பிறக்கவில்லையே என்று அழ வேண்டும்.

ரிஜிஸ்டரோடும் விண்ணப்பத்தோடும் வந்த நிர்வாகி, சங்கீதா எங்கே என்று தேடுகையில், விரலைப் பற்றிய குழந்தையின் கையை விடாமல் ஆட்டோ தேடினாள் சங்கீதா. அதே ஆட்டோ வேறு சவாரி கிடைக்காமல் நின்று கொண்டிருக்க, அதிலேயே ஏறினாள்.

"ஆஸ்பத்திரில குழந்தையைக் காட்டியாச்சாம்மா?"

"எனக்குத்தான் உடம்பு சரியில்லப்பா. இப்போ சரியாப்போச்சு!" ஆட்டோ கிளம்பிவிட்டது.

(தொடரும்)

புத்தம் புதுசு!



நாகரிக நங்கையருக்கென அழகு சாதனப் பொருள்களைத் தயாரித்துவரும் 'எல் 18' நிறுவனம், 'பீ ட்ரெண்டி' என்னும் நகப் பூச்சு ரகங்களை அறிமுகப் படுத்தியுள்ளது. கலர் கிளிட்டர், லைட் பீச், டார்க் பர்பிள், வைன், மெரூன், டீப் மெரூன் என்ற ஆறு வண்ணங்களும், நகங்களுக்குக் கவர்ச்சியும், நவீன அழகும் தந்து பளபளக்க வைக்குமாம்!

சென்னை ஸ்ரீ முருகன் ஏஜென்ஸியினரால் தயாரிக்கப்பட்டு, சந்தைப் படுத்தப்பட்டிருக்கிறது புதிய சுபிக்ஷா வெட் கிரைண்டர். டில்டிங் டானிஷ், டில்டிங் மேனகா, ஸ்லீக், மேஜிக் என நான்கு மாடல்களில் கையடக்கமாக உருவாக்கப்பட்டுள்ள இந்தச் சமையலறை உபகரணம், பெண்களின் ஏகோபித்த வரவேற்பைப் பெற்றுள்ளது. நியாயமான விலை, நீடித்த உழைப்பு இவை சுபிக்ஷா வெட் கிரைண்டரின் சிறப்பம்சம்.



ஸ்ரீ முருகன் ஏஜென்சிஸ்,
20, வ.உ.சி. தெரு, மேற்கு
தாம்பரம், சென்னை - 45

பரிசுத்தமும் தூய நறுமணமும் நிறைந்த கே.பி.எல். தேங்காய் எண்ணெயை வாங்குபவர்களுக்கு, விசேஷப் பரிசுகள் காத்திருக்கின்றன. ஒரு லிட்டர் வாங்கினால், எவர்சில்வர் டபரா, ஐந்நூறு மில்லிக்கு பெரிய தம்ளர், இருநூறு மில்லி எண்ணெய்க்குச் சிறிய தம்ளரும் வழங்கப்படும். நூறு அல்லது ஐம்பது மில்லி வாங்கினால் எவர்சில்வர் ஸ்பூன் இலவசமாகத் தரப்படுகின்றது.





சிக்கனத்தையும், சிறப்பையும் நாடும் இந்தியப் பெண்மணிகள் 'சர்ஃப் எக்ஸெல்' போன்ற தரமான டிடர்ஜென்ட்டையே நாடுகிறார்கள். முன்னணி நிறுவனமான ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட் வழங்கும் சர்ஃப் எக்ஸலின் விலைக் குறைப்பு, இல்லத்தரசிகளை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியுள்ளது. அரை கிலோ சர்ப் எக்ஸெல் ரூ.70 மட்டுமே!

'மத வெறி மாநாடுகள்' என்ற தலைப்பில் வெளி வந்த தலையங்கத்துக்கு, உள்நோக்கம் இருப்பதாகக் குற்றம் சாட்டியிருந்தார் வாசகி எம். சுஜாதா. அது குறித்து வாசகர் கருத்து கேட்டிருந்தோம். வந்து குவிந்த கடிதங்களில், ஒரு சில கடிதங்கள் மட்டுமே (எந்த உள்நோக்கமும் இல்லாமல்) மிகச் சுருக்கமாக இடம் பெறுகின்றன.

(ஆர்)

கல்கிக்கு உள்நோக்கமா?



எந்தவிதமான கலவரமும் இல்லாமல் கட்டுப்பாட்டுடன் சீரும் சிறப்புமாக காஞ்சிப் பெரியவர் ஆசியுடன் நடந்த அமைதி மாநாட்டை, தீவிரவாத மாநாடு என்று தாங்கள் முத்திரையிட்டதில் உள் நோக்கம் உள்ளது என்று நினைப்பதைத் தவிர வேறு என்ன இருக்கிறது? இனியும் நடுநிலை தவறாமல் இந்துக்களை இந்தியாவில் வாழ விடுங்கள்.

- கே. சுப்பிரமணியன்,
சென்னை

'கல்கி' இதழின் ஒரே 'உள் நோக்கம்' அமைதிப் பூங்காவாகப் பல நூற்றாண்டுகள் திகழ்ந்த - எம்மதமும் சம்மதம் எனச் சமரச சுத்த சன்மார்க்கம் தழைத்த - வள்ளுவரும் வள்ளலாரும் அவதரித்த தமிழகத்தில் மதக் கலவரங்கள் ஏற்பட்டு மக்கள் வாழ்க்கை சீரழிந்து விடக் கூடாதே என்ற சமூக அக்கறை மட்டுமே!

- இராமச்சந்திரன்,
கரூர்

நீங்களும் ஒரு ஹிந்துவாக இருப்பதால் சமரசமாக இருக்க வேண்டும் என்ற ஆதங்கத்தின் வெளிப்பாடுதான் தங்கள் விமர்சனம்.

- ப.சு.வைத்தியநாதன்,
பெங்களூர்

என்ன உள்நோக்கம் என்கிறீர்களா? இது தான் உள்நோக்கம். சர்க்குலேஷன் மேம்பட இந்த செக்யூலர் போர்வை வேண்டுமே!

- ராமஸ்வாமி,
சென்னை

சென்னை வாசி சுஜாதா எழுதியது 'கல்கி' வாசகர்களைப் புண்படுத்தி உள்ளது.

'கல்கி'க்கு என்றுமே உள்நோக்கம் இருந்ததில்லை. சொல்லும் கருத்தில் துணிவு, நேர்மை, நடுநிலை இவைதான் அன்றும் என்றும் கல்கியின் தாரக மந்திரங்கள்.

- வேலவன்,
மயிலாடுதுறை

சிறுபான்மையினரின் பாதுகாப்பு என்ற பெயரில் சலுகைகளை வாரி வழங்கி, பெரும்பான்மையினரை இரண்டாம் தரக் குடிமக்களாக நடத்துவதும், எங்களிடம் வோட்டுப் பொறுக்கியே பதவிக்கு வந்து பத்துத் தலைமுறைக்கு சொத்து சேர்க்கும் அரசியல்வாதிகள் இந்துக்களைத் 'திருடர்கள்' என்றும் வர்ணிக்கும்போது, காயப்படும் இந்துக்களின் உணர்வுகளையும் புரிந்து கொண்டு, நடுநிலைமையுடன் கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

- பிரகதீஸ்வரி இராஜப்பன்,
அறந்தாங்கி

முஸ்லீம் எழுச்சி மகாநாடு, கிறிஸ்தவ மத எழுச்சி மகாநாடு மற்றும் ஹிந்து எதிர்ப்பு மகாநாடு போன்றவை நடத்தப் படும்போது காட்டாத எதிர்ப்பை, நியாய



"பீச்சுக்கு நான் ஒருநாள் வரலேன்னதும் புதுக் காதலியே தேடிட்டீங்களே... இது நியாயமா?"

"நான்தான் உன்னைப் பிரிஞ்சு ஒரு நாள்கூட இருக்க முடியாதுன்னு சொல்லி இருக்கேனே..."

- அம்பை தேவா

வாதங்களை, ஒரு ஹிந்து இளைஞர் மாநாடு நடத்தப்படும்போது காட்டுவது உள்நோக்கமில்லையென்றால் 'கல்கி'க்கு உள் நோக்கம் கிடையாதுதான்.

தன் வீட்டு ரோஜா மலர்வதில் அக்கறை காட்டாது, அடுத்த வீட்டு ரோஜா வளர்ச்சியில் கவனம் செலுத்தினால், அடுத்த வீட்டுக்காரன் சந்தோஷப்படலாம், ஆனால் வீட்டில் உள்ளவர்கள் விரும்ப மாட்டார்கள்.

- திருமலைராஜன்,
திருநெல்வேலி

உங்களுக்கு உள்நோக்கம் இல்லாமல் இருக்கலாம். ஆனால், உங்கள் செயல்பாடு இந்து, முஸ்லீம், கிறிஸ்தவர் எல்லோரும் சம உரிமை பெற்ற இந்தியரே என்று ஒற்றுமைப் படுத்துமா என்பது சந்தேகம்தான்.

- ஆர்.எஸ்.வி.சுப்ரமணியன்,
சென்னை

அதர்மம் நடக்கும் எல்லா இடத்தையும் ஒரே மாதிரியாக தட்டிக் கேட்பதில்லை. Sometimes you have jaundiced eyes.

- கீதா ராஜன்,
சென்னை

கோடிக்கணக்கான ரூபாய் வருமானம் வருகிற விளம்பரங்களை - மது பான, பீடி, சிகரெட், பான்மசாலா விளம்பரங்களை - பிரசுரிக்க மறுப்பதற்கு எந்த உள்நோக்கம் இருந்து வருகிறதோ, அதே உள்நோக்கம் தான், 'மதவெறி மாநாடு' என்ற தலையங்கத்தை எழுதி வெளியிட்டதில் 'கல்கி'க்கு இருக்கிறது.

- க.கண்ணன்,
சென்னை

பத்திரிகைகள், படிப்போரின் மன சாட்சியாக இருக்க வேண்டுமே தவிர, பண்பாட்டுக்கு விரோதமான காரியங்களுக்கு வழிகாட்டியாகத் திகழக் கூடாது என்ற உள்நோக்கம் உண்டு.

'ஆறு' ரூபாய்க்கு 'கல்கி' வாங்குபவன் 'ஏழு' பிறவிக்கும் பயன்பெற வேண்டும் என்ற உள்நோக்கம் உண்டு.

'இதழியல்' 'இதழ்' - இயலாக மாறி வரும் சூழ்நிலையில், இதயம் தொடும் மனித நேயம் எங்கிருந்தாலும் வெளிச்சமிட்டுக் காட்டும் நோக்கம் உண்டு.

பாரதப் போரில் உண்மையைத் திரித்துக் கூறியதால் மண் தொடாத தர்மன் தேர், மண் தொட்டது என்பார்கள். தரை தொடாத தகுதி கொண்ட 'கல்கி'த் தேருக்கும் நன் நோக்கம் உண்டு.

உள்நோக்கம் உண்டு என்று இதயத்தில் ஈட்டி செருகுவோரின் சொல்லையும் மேடை(ஜை)யேற்றும் 'கல்கி'யைப் பற்றி எழுத, இரும்பு இதயமா இவருக்கு என்று எங்களை வியக்க வைக்கும் உள்நோக்கம் உண்டு.

- எஸ்.அறிவுடைநம்பி,
திருச்சிராப்பள்ளி

மைனாரிடிகள் எல்லோரும் மிக மிக பயந்தவர்களாகவும், இந்திய நாட்டில் தத்தளிக்கும் பரிதாபமானவர்கள் போலவும், அதற்கு ஹிந்துக்களே முழுக்க முழுக்க காரணம் என்பது போலவும், தலையங்கங்கள் எழுதி வருகிறீர்கள்.

ஹிந்து என்றால் திருடன் என்று கூறி பிள்ளையாரையும், கொழுக்கட்டையையும், கேலி செய்து, கேவலம் வோட்டுக்காக ரம்ஜான் கஞ்சி குடிக்கும் கருணாநிதியை விட்டு விலகி, உண்மையான ஹிந்துவாக, மற்ற மத 'மனிதர்களை' அரவணைத்து, ஆனால் மற்ற 'மதங்களின்' உள்நோக்கத்தை உணர்ந்து, ஜாக்கிரதை உணர்வோடு உங்கள் எழுத்துப் பணியைத் தொடருங்கள்.

ராஜேஸ்வரி நீலகண்டன்,
சென்னை



மார்பக புற்றுநோய் பரவாமல் தடுக்கவும், கட்டுப்படுத்தவும், வராமல் பாதுகாக்கவும் தேவையான தெய்வீக மூலிகைகள் & இயற்கை சிகிச்சை முறைகள்



பெண்களுக்கு தோன்றும் புற்று நோய்களில் மார்பகபுற்று நோய் இரண்டாம் இடத்தை வகிக்கின்றது. இது ஹார்மோன் குறைபாடு, வைரஸ் போன்ற நோய்க்கிருமி, பரம்பரை தன்மை, உணவு பழக்கம், வாழ்க்கை முறை, சுற்று சூழல் மனநிலை பாதிப்பு போன்ற ஏதேனும் ஓரிரு காரணங்களால் உடலில் நச்சுக்கள் அதிகமாகி புற்று நோயாக மாறிவிடுகின்றது. இவைகளை நாம் உட்கொள்ளும் உணவில் கசப்பு சுவையுள்ள காய்கள், கீரைகள், பழங்கள், நம் அருகில் உள்ள சில வகையான கசப்பு சுவையுள்ள மூலிகைகள் உட்கொள்வதால் எல்லாவிதமான புற்று நோய்களையும் குணமாக்கி கொள்ளலாம். வராமலும் தடுத்துக் கொள்ளலாம். கசப்பு சுவையானது நச்சுக்களை முறிப்பதிலும், நோய்க்கிருமிகளை அழிக்கும் தன்மை கொண்டது. சுமார் 40 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்குத் தான் மார்பக புற்று நோய் வருகின்றது. இதற்கு ரேடியோ தெரபி, கீமோ தெரபி, அறுவை சிகிச்சை போன்ற முறையில் சிகிச்சைகள் தரப்படுகின்றது. இவைகளில் பக்க விளைவுகள் உண்டு. முழுமையான நிவாரணத்திற்கு உத்திரவாதமில்லை. எனவே எல்லா பெண்களும் மார்பக புற்று நோய் பற்றியும் அவைகளை குணப்படுத்தும் மூலிகை, உணவு முறைகளை தெரிந்து கொள்வது அவசியம்.

மார்பக புற்று நோய் வருவதற்கான காரணம் : • குறிப்பிட்ட வயதிற்கு முன்பே மாதவிடாய் ஏற்படுவது. • 45 முதல் 50 வயதிற்கு பிறகு மாதவிடாய் வருவது நின்று விடும். 45 வயதிற்கு பிறகும் மாதவிடாய் ஏற்பட்டால் மார்பகபுற்று நோய் வரலாம். குழந்தைக்கு தாய்ப்பால் கொடுக்காமல் இருப்பது, காலதாமதமாக முதல் குழந்தை பெறுவது, குழந்தையில்லாதவர்கள், மார்பகபுற்று நோய் ஏற்கெனவே இருக்கும் குடும்பத்தில் பிறந்தோர் ஆகியோருக்கு இந்நோய் வரும் அபாயம் அதிகம்.

மார்பக புற்று நோயின் அறிகுறிகள் : மாதவிடாய் ஏற்படுவதற்கு ஒரு வாரம் முன்போ (அ) மாதவிடாய் காலத்திலோ அல்லாமல் மற்ற நாட்களில் மார்பகத்தில் தனிதனியாக, வலியற்ற சிறிய அல்லது பெரிய கட்டிகள் தோன்றுதல், மார்பகங்களின் அளவில் மாற்றம், மார்பக காம்புகள் உள்மடித்து இருத்தல், மார்பக காம்பில் இருந்து இரத்தம் வடிதல், மார்பக காம்பைச் சுற்றி அரிப்பு, மார்பகம் அசைக்க முடியாத உறுதியான நிலையில் காணப்படுதல் போன்றன மார்பக புற்று நோயின் அறிகுறிகள் ஆகும். மேலும் 40 வயதிற்கு மேல் உள்ளவர்கள் மார்பக சுய பரிசோதனை செய்தும் மேற்கூறிய அறிகுறிகள் உள்ளதா என்பதை தெரிந்துக் கொள்ளலாம்.

மார்பக புற்று நோயாளிகள் உட்கொள்ள வேண்டிய தெய்வீக மூலிகைகள் : வேப்பிலை, வில்வம், அத்தி, துளசி, அருகம்புல், தும்பையிலை, மாவிலை, நித்தியகல்யாணி, கீழாநெல்லி, முட்டைக்கோஸ், நெல்லி, குப்பைமேனி, நாவல், ஆவாரம்பூ போன்ற மூலிகைகளை பறித்து வெயிலில் உலர்த்தி பொடி செய்து சம அளவில் கலந்து வைத்துக் கொள்ள வேண்டும். பின் இதில் இருந்து இரண்டு ஸ்பூன் தூள் எடுத்து அரை அல்லது ஒரு டம்ளர் தண்ணீரில் கலந்து உணவுக்கு ஒரு மணி நேரம் முன்பாக தினம் காலை, பகல், இரவு ஆகிய மூன்று வேளையும் சாப்பிட்டு வரவும். இந்த மூலிகைகளில் உள்ள சக்தி புற்று நோய் செல்களை அழித்து நோய் பரவாமல் தடுக்கின்றது. நோய் எதிர்ப்பு சக்தி அதிகமாக்கி நோயை குணமாக்குகிறது.

மார்பக புற்று நோயாளிகள் பின்பற்ற வேண்டிய உணவு முறைகள் : செயற்கையாகத் தயாரிக்கப்படும் உணவுகளும், சில உணவுத் தயாரிப்பு முறைகளும் புற்று நோய்க்கு காரணமாகின்றன. எனவே நிறத்திற்காகவும், மணத்திற்காகவும், இனிப்புக்காகவும் சேர்க்கப்படும் செயற்கை வேதிப் பொருட்களை தவிர்த்து, புற்று நோயை விரட்டியடிக்கின்ற பச்சையாக உட்கொள்ளும் பழங்கள், காய்களை அதிகம் உட்கொள்ள வேண்டும். எனவே காலை உணவாக தினம் இந்நோயாளிகள், பச்சையாக சாப்பிடும் பழங்கள், காய்கள், வெஜிடபிள் சாலட், பழச்சாறுகள் இளநீர் போன்றவையாக உட்கொள்ள வேண்டும். அந்தந்த காலங்களில் கிடைக்கும் பழங்கள், காய்கள், வெஜிடபிள் சாலட், பழச்சாறுகள், இளநீர் போன்றவையாக உட்கொள்ள வேண்டும். பகல் வேளை உணவை 50% சமைத்த உணவாகவும், 50% அளவு காய்கள், கீரைகள் இருக்கும்படியாக உள்ள உணவுகளை சாப்பிடவும் மாலையில் வெஜிடபிள் சூப், சத்துமாவு கஞ்சி, பட்டாணி சூப், கீரைகள் சூப் போன்றன சாப்பிடலாம். இரவு சமைத்த உணவாக வாரம் நான்கு நாட்களும், இயற்கை உணவை வாரம் மூன்று நாட்களும் சாப்பிடவும். இவ்வாறான உணவில் உடலுக்குத் தேவையான சரிவிகித உணவு கிடைக்கும். இதனால் நோய் விரைவில் குணமாகும்.

இயற்கை சிகிச்சை முறைகள் : இரண்டு மார்பகங்களுக்கும் மண்பற்று போட்டு 20 முதல் 30 நிமிடங்களுக்கு பிறகு தண்ணீரால் சுத்தம் செய்யலாம். இதனை இரண்டு நாட்களுக்கு ஒரு முறை காலை (அ) மாலை வேளைகளில் செய்துக் கொள்ள வேண்டும். வெந்நீர் ஒத்தடம் தினம் காலை (அ) மாலை வேளைகளில் 20 நிமிடம் தர வேண்டும். வேப்பிலை + மஞ்சள் தூள் அரைத்து மார்பகம்மீது பற்று போட்டு 30 நிமிடம் கழித்து சுத்தம் செய்யலாம்.

மேற்கூறியவைகளை பின்பற்றினால் இந்நோயினை முழுமையாக கட்டுப்படுத்தலாம். நலமுடன் இருக்கும்போதே வாரம் ஓரிரு முறைகள் பின்பற்றினால் வராமல் தடுத்துக் கொள்ளலாம்.



தெய்வீக மூலிகை வைத்தியர்கள்

Chennai Cell : 98410 45138

தலைமை முகவரி : Dr.M.குருபரன் & Dr.M.சபாபதி, Dr.M.சிவசக்தி, S/o Dr.C.K.மாணிக்கவாசகம்

P.B.No:30, No.3, திருநாத முதலி நகர், (காலேஜ் எதிரில்), திருப்பத்தூர் (N.A.A.) - 635 601 ✆ 04179-220469, 222769

சென்னை கிளை : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, (பிரின்ஸ் மேனர் பக்கத்தில்) கெல்லீஸ், சென்னை - 10

இரு முகவரிகளிலும் ஆலோசனை நேரம் தினமும் காலை 10 to 1, மாலை 5 to 7 ✆ 26424285, 26427638

7 & 8ந் தேதி - மும்பை : காலை 9 to இரவு 8 மணி வரை The South Indian Concerns Ltd., 401, Telang Road, Matunga, (CR), Ph : 24011589, 24063879

9ந் தேதி - பெங்களூர் : காலை 11 to மாலை 1 மணி வரை, ஹோட்டல் பிரைட்டே, (கல்பனா தியேட்டர் அருகில்) செப்பேகவுடா ரோடு : ✆ 080-2266374, 2873013

20 & 21ந் தேதி - புதுடெல்லி : காலை 9 to இரவு 8 மணி வரை South Indian Hotel, 10211, Padam Singh Road, Ajmal Khan Road, Karol Bagh, : 25717126, 25723651



இந்தத் தொடருக்கான எந்தவித தயாரிப்புமில்லாமல் இருந்த என் மனத்தை வாசகர்களின் வரவேற்பும் இலக்கியவாதிகளின் உபசரிப்பும் தயக்க முறச் செய்தது. மிகச் சாதாரண காகிதங்களில் எழுதப்படுகிற என் எழுத்துக்கான மரியாதை, அன்பு முத்தங்களால் கௌரவிக்கப்பட்டதும் அழ வேண்டும் போலிருந்தது.

பெயர் சொல்லாமல், 'என் அனுபவத்தை எழுதுவீர்களா?' என்ற முகந் தெரியாத பெண்ணிலிருந்து, வெளிநாட்டில் வசிக்கும் எழுத்தாளர் எஸ். பொன்னுத்துரை வரை இந்தப் படைப்பை நேசித்தது உற்சாகமாயிருக்கிறது.

வாரந்தோறும் படித்துவிட்டு அபிப்ராயத்தை பகிர்ந்து கொண்ட பிற பத்திரிகை நண்பர்களுக்கு, கசிந்த கண்களோடு வணக்கம் செலுத்துகிறேன்.

எந்தக் காரணத்துக்காகவும் என் எழுத்தில் குறுக்கிடாமல் பூரண சுதந்திரத்தோடு என்னை இயங்க வைத்த ஆசிரியரும் பதிப்பாளரும், என்றென்றும் என் நன்றிக்குரியவர்கள். அத்தியாயங்களோடு ஒரு படைப்பு முடிவடைவதில்லை என்பது போல, 'கல்கி' மீது எனக்கிருக்கும் பிரியமும் தொடரவே செய்யும். கல்யாணத்தோடு முடிவடையாத காதலைப் போல.

'காதல் பிசாசே' பாடலை எழுதிய ராத்திரியையும் இந்தத் தொடருக்காக பல புத்தகங்களில் மூழ்கிக் கிடந்த ராத்திரிகளையும் பாதுகாப்பான இடத்தில் பத்திரப்படுத்துவேன். எனில், அது என் கனவுக் குழந்தையின் பரவசப் பொழுதுகள். இந்தக் குழந்தை மறுபடி மறுபடி எங்களால் முத்தமிடப்படுவதையும் வளர்க்கப்படுவதையும் காலம் விரும்பும்.

நிறைய ப்ரியமுடன்
யுகபாரதி

காதல் பிசாசே!



நீ வாழ்ந்த
என் கண்கள்
குளமாயின
ஆன போதும்
வருவதென்ன
தூண்டிலோடு?

பரவலாக அறியப்பட்ட ஒரு படைப்பாளி தன் படைப்புக்கான சிந்தனையில் எவ்வப்போது மூழ்குவான்? ஒதுக்கி வைத்த நேரத்துக்குள் நினைத்த விஷயத்தை நேர்த்தியாக எழுதிவிட முடியுமா? செலவழித்த நேரத்துக்கான மரியாதையை அந்தப் படைப்பு கொண்டிருக்கிறதா? உழைப்புக்கான ஊதியத்தையும் அங்கீகாரத்தையும் காலம் அவனுக்கு வழங்குகிறதா? என பல்வேறு கேள்விகளைக் கேட்டுப் பார்த்தால், இந்தக் கேள்விகள் முழுதும் அபத்தமானதும் அற்பமானதும் என்றே தோன்றும். எனில், படைப்பெனப்படுவது எழுதுதல் மட்டுமல்ல, அவனது உழைப்பென்பது, பள்ளத்தில் மண்ணை நிரவுவது போல் காகிதத்தில் வார்த்தைகளை நிரப்புவது அல்ல.

காதலும் எழுத்துக்கு நிகரானதுதான். எந்தக் கேள்வியோ எந்த பதிலோ அதற்குச் சரியானதாக அமைவதில்லை. சில கேள்விகளாகவும் சில பதில்களாகவுமே முடிந்து விடும். பரிசுகளும் விருதுகளும் அங்கீகாரம் என்று கருதப்பட்டாலும்,



இன்றைய சூழலில் இதிலெல்லாம் உண்மைக்குப் புறம்பான செயல்கள் அரங்கேறுதல் அங்கீகாரமென்பதும் மாயை போலவே தோன்றுகிறது.

ஒரு புள்ளியில் வாசகனைத் திருப்திப்படுத்தும் படைப்பாளனின் மனது, எந்தப் புள்ளியிலும் நிறைவுறாமல் ஊசலாடுவதே நிலைத்திருக்கிறது. நிலைத்த பொருள் மீது கொள்கிற பிரியமும் அபிலாஷைகளும் நிறைவேறாத கனவுகளால் கௌரவிக்கப் படுகின்றன.

நின்ற இடத்திலிருந்தே வானத்தைத் தொட்டுவிடும் நீண்ட விரல்களை எடுத்து அவனுக்கு வழங்கியபோதும், ஒருவித பரிதவிப்பும் பதற்றமும் அவனை விட்டு அகலுவதில்லை.

யார் யாராலோ சொல்லித் தரப்பட்ட செய்முறைகளால் அழகான அவனது எழுத்தை, அவனே வாசிக்கும்போது கிடைக்கும் கொஞ்ச நஞ்ச சந்தோஷமும் விமர்சனப் புருஷர்களால் கிழித்தெறியப் படுகிறது. காதலுக்கும் எழுத்தாளனுக்கும் ஏறக்குறைய ஒரேவிதமான அணுகுமுறைதான்.

வாசனை என்றாலும் வேதனை என்றாலும், அவனே அனுபவித்து அவனே மீண்டெழ வேண்டியதுதான். பக்கம் பக்கமாய் வியாக்கியானம் எழுதினாலும் வாசகனைச் சென்றடையாத எந்தப் படைப்பும் உயர்ந்ததில்லை.

சினிமாப் பாடல்கள் காதலை எல்லாக் கோணத்திலும் பார்த்துவிட்டன. ஒருதலைக் காதல், முக்கோணக் காதல், அறுகோணக் காதல், சதுரக் காதல், வட்டக் காதல் என்று பிரித்துப் பிரித்து பொருள் சொல்லியாயிற்று. இந்தக் காதல்,

யுகபாரதி

எந்தப் பொருளாலும் புரிந்து கொள்ள முடியாத உணர்வாக இருக்கிறது.

ஆதிசங்கரர் தொடங்கி அம்பிகாபதி வரை, பாரதியார் தொடங்கி பச்சியப்பன் வரை, விளக்கமும் நுணுக்கமும் கிரகித்த போதும் முழுமையற்ற ஒன்றாகவே காதலிருக்கிறது. ஆஷா பூர்ண மெஹந்தியானாலும், அம்பையானாலும், பெண் ணெனப்பட்டவளின் மன சஞ்சலத்தை எழுத்தால் பிரதிபலிக்க இயலவில்லை.

இயலாமையில் இருந்துதான் காதலின் மையப் புள்ளியைக் கண்டடைய முடியுமென்கிறார்கள் மருத்துவர்கள். மூளை நரம்புகளால் உயர்த்தப்படுகிறது இதயம் என்ற போதும், இத யத்தின் செயல்களை நிறுத்தவோ தடுக்கவோ முடிவதில்லை என்றால், இதயம் வேறு, மூளை வேறா?

காதலியின் பாதம் கண்ணனின் தலை மீது தீண்டுதல் குற்ற மில்லை என்கிறது கீத கோவிந்தம். கூடு விட்டுக் கூடு தாவுதலே காதலென்கிறது மேடைப்பாடல். கதிரடிக்கும் ஆணோடு முந் திச் கம்மாடு பெண்ணொருத்தி சிரித்துப் பேசி உறவாடுவதைக் காதலென்கிறது நாட்டார் வழக்காறு. ஜோதியைப் பெண் ணாகவோ, உயிராகவோ பாவித்து பிரார்த்தனை செய்கிறது திருவருட்பா.

விசும்பலும் பிரிவுமே உன்னதமென்று ஓரியக் கவிதைகள் உரத்துச் சொல்கின்றன. சமூக அக்கறையும், தான் சார்ந்த பதிவு களுமே காதலின் அச்சாணி என்று அறிவிக்கிறது வங்கக் கவிதை.

இழந்த தேசத்தின் அழகும், போரினால் தொலைந்த புன் முறுவலும், காதலைப் போன்றதென்று கண்ணீர் வடிக்கிறது ஈழம். இடப்பெயர்வு, புலப்பெயர்வு இவைகளால் அறிந்து, உறவுகளை ஞாபகத்தில் வைத்துக் கொள்வதும் காதல்தான் என்கிறது நவீன இலக்கியம்.

அடித்த அலைகளை அணைக்கும் கரைகளாய், மனிதம் பரவிய இந்த பூமியில் வாழ்வது சுகம். வாழ நேர்ந்த வாழ்க்கை சுகம். வாராது போன மழைக்காக வற்றிப் போன வயலைத் திட்டுகிற ஏழை விவசாயியைப் போல, கிடைக்காத காதலை நினைத்து நினைத்து ஏங்குவதே சிலருக்கு நிம்மதி தருகிறது.

ஐந்து திணைகளாக நிலத்தைப் பகுத்த நம்மால், எந்தத் திணையிலும் காதலை வெளியேற்ற முடியாததற்கு என்ன கார ணம்? ஆறு சுவையாக உணவைத் தொகுத்த நம்மால், எந்தச் சுவையாலும் பசியை வெல்ல முடியாது போனதற்கு என்ன பொருள்?

ஊடகங்கள் கற்றுத் தருகிற காதலும், உள்ளுணர்வு பெற்றுத் தெளிகிற காதலும் வெவ்வேறு. இலக்கியம் எழுதி வைக்கும் காதலும், இயல்பு தொழுது நிற்கும் காதலும் வேறுபட்டவை. எந்தப் புள்ளியிலும் நிறைவுறாமல் ஊசலாடுவதே படைப்பு மனம். காதல் மனம்.

யாரோ ஒருவனுக்காக தையல் மிஷினில் சட்டை தைக்கிற ஆயத்த ஆடை கடைக்காரரைப் போல, காதலை நெய்து வைத் திருக்கிறது காலம். மிகச் சரியாக பொருந்துகிறவர்கள் மகிழ லாம். அல்லாதவர்கள் தவித்து ஒதுங்கலாம். வேரின் சோகத்தை மறைத்திடத்தானே கிளைகளில் பூக்கள் சிரிக்கிறதென்பார் கவிஞர் அறிவுமதி.

(முற்றும்)


"பரீட்சையில் நான் 'படிச்சிட்டு'ப் போனது எதுவுமே வரலை!"
"அப்புறம் எப்படி பாஸ் பண்ணினே?"
"'எடுத்துட்டு'ப் போனது எல்லாமே வந்திருந்ததே!"

- நெய்வேலி அ. கௌரிஷீ



ஜாதகம் எப்படியிருப்பினும் தன்னை வணங்குபவர்களுக்கு நன்மையே செய்யும்

நவக்ரஹ க்ஷேத்ரங்களில் உங்கள் ராசிப்படி ப்ரீதி செய்ய அன்னதானம் செய்வோம் வாருங்கள்!



அன்புடையீர்! சித்திரபானு வருஷம் முடிந்து சுபானு ஆண்டு சித்திரையில் பிறக்க, நாடெங்கும் மாற்றங்கள் நடைபெறப் போகின்றன. வருகிற சனிப்பெயர்ச்சியின் போது ஒவ்வொரு ஜாதகருக்கும் கிரஹ மாற்றங்கள் மிகப்பெரிய அளவில் நிகழும். ஒவ்வொரு ஜாதகரின் வாழ்விலும் நவக்கிரஹங்கள் முக்கிய பங்காற்றி வாழ்வில் கஷ்டத்தைப் போக்கி சுபிக்ஷத்தை உண்டாக்குகின்றன. ஜாதகரின் அசுப ஸ்தானங்களில் இருக்கும் நவக்ரஹங்கள் கூடத் தன்னை வழிபடும் அனைவருக்கும் நற்பலனையே அளிக்கின்றனர். இது பிரம்மதேவனின் ஆணை. கிரஹங்கள் ஒரு ஸமயம் பிரம்மதேவனை வணங்கிப் பிரார்த்தித்தனர். ஐயனே! ஒரு ஜாதகனின் அசுப ஸ்தானத்தில் இருக்கும் நாங்கள் அவனுக்குத் தீய பலனையே அளிக்கும்படி தாங்கள் கட்டளையிட்டுள்ளீர்கள். அவ்வாறே நாங்களும் செய்கிறோம். ஆயினும் தீமையை அனுபவிப்பவர்கள் எங்களைச் சபிக்கின்றனர். எனவே, எங்களுக்கு அபயமளியுங்கள் என்றனர். அப்போது, பிரம்மதேவன் கஷ்டங்களை அனுபவிப்பவர்கள் உங்களைப் பூஜித்து அன்னதானம் அளித்தால் அவர்களுக்கு நீங்கள் நற்பலனை அளியுங்கள் என வரமளித்தார்.

"யஸ்ச யஸ்ச யதா துஸ்த: தத்தம் யத்னேன பூஜயேத்:!
ப்ரம்ஹணைஷாம் வரோதத்த: பூஜிதா: பூஜயிஷ்யத"

என்று மாந்தாரு கர்மவிபாகம் கூறுகின்றது.


ஆகவே, உங்கள் ஜாதகத்தில் கிரஹ மாற்றங்களினால் ஏற்படும் கஷ்டத்தைப் போக்க, உரிய கிரஹங்களுக்கான ஸ்தலங்களில் அன்னதானம் செய்ய கோபுரதரிசனம் அன்னதான அறக்கட்டளை விரிவான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. அந்தந்த கிரஹங்கள் அமர்ந்தருளும் க்ஷேத்ரங்களில் அன்னதானம் செய்வதில் பங்கேற்று அற்புதமான பலன்களை அடைய பிரார்த்திக்கிறோம்.

நவக்ரஹங்கள்	க்ஷேத்ரங்கள்
சூரியன்	- சூரியனார்கோயில்
சந்திரன்	- திங்களூர்
செவ்வாய்	- வைத்தீஸ்வரன் கோயில்
புதன்	- திருவெண்காடு
வியாழன்	- ஆலங்குடி
சுக்கிரன்	- கஞ்சனூர்
சனீஸ்வரன்	- திருநள்ளாறு
ராகு	- திருநாகேஸ்வரம்
கேது	- கீழப்பெரும்பள்ளம்

★ *சிறிய தொகை மற்றும் அரிசி போன்ற உணவுப் பொருட்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.*
★ *ரூ.500 அனுப்பும் அன்பர்களுக்கு, கோபுர தரிசனம் மாத இதழ் ஒரு ஆண்டுக்கு அனுப்பி வைக்கப்படும்.*
★ *ரூ.1000 அனுப்பும் அன்பர்களுக்கு, கோபுர தரிசனம் இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.*
★ *ரூ.5000 அனுப்பும் அன்பர்களுக்கு, கோபுர தரிசனம் இதழ் பத்து ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.*

நன்கொடையாளர்களின் இல்லங்களில் மகாலக்ஷ்மி நிரந்தரமாக வசிக்க ஸ்ரீகுபேர யந்திரம் வழங்கப்படும். அல்லது 'கிரிகோ'வின் ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமம் புத்தகம் அல்லது கேசட் அனுப்பி வைக்கப்படும். நமது வாழ்வில் ஏற்படும் தீராத பிரச்சனைகள் பல. கடன் தொல்லை, குடும்ப வாழ்வில் குழப்பம் - மனக்கவலை - வேலைவாய்ப்பின்மை - கல்வியில் மந்தம் என ஜாதகக் கோளாறால், நவக்ரஹங்களின் மாறுபாட்டால் பல பிரச்சனைகளுக்குத் தீர்வு காண உங்கள் சார்பாக **கவி-ந்யாய-மீமாம்ஸ சிரோன்மணி ஸ்ரீமான். திருவெண்காடு டி.கே. முத்துஸ்வாமி சாஸ்திரிகள்** தலைமையில் அன்னதானம் செய்து பிரஸாதம் அனுப்பி வைக்கப்படும்.

நன்கொடை அனுப்பும் அன்பர்கள் **GOPURA DHARISANAM ANNADHANA CHARITABLE TRUST, CHENNAI-41** என்ற பெயரில் CHEQUE/D.D./M.O. மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். லோக க்ஷேமார்த்தமாக அன்னமிடும் அரிய பணிக்கு உங்களது ஒத்துழைப்பை நல்கிட வேண்டுகிறோம்.



CHEQUE/D.D./M.O. அனுப்ப வேண்டிய முகவரி :

கோபுர தரிசனம் அன்னதான அறக்கட்டளை

GOPURA DHARISANAM ANNADHANA CHARITABLE TRUST

M-11/F-4, RAGAM APTS., I MAIN ROAD, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041. SOUTH INDIA

☎: (044) 24900303, 24900603, 24416122 E-mail : gopuradarshanam@yahoo.co.in

---

சிவகாமியின் சபதம்

ஐம்பத்தோராம் அத்தியாயம்

ஜயஸ்தம்பம்

வாதாபி நகருக்கு இரண்டு காத தூரம் கிழக்கே ஒரு குன்று இருந்தது. சுற்றிலும் காடு அடர்ந்த அந்தக் குன்றின் ஒரு பக்கத்துச் சரிவில் அடுத்தடுத்துக் குடைந்த குகைகள் இரண்டு இருந்தன. இரண்டு குகைகளும் குடையும் வேலை பூர்த்தியாகாமல் அரைகுறையாக விடப்பட்டிருந்தன.

பௌத்தர்களோ சமணர்களோ அந்தக் குகைகளைக் குடைய ஆரம்பித்திருக்க வேண்டும். அப்புறம் எந்தக் காரணத்தினாலோ வேலையை நடுவில் நிறுத்தி விட்டுப் போயிருக்க வேண்டும்.

குகைகளில் ஒன்றுக்குள்ளேயிருந்து சலசலவென்ற சப்தத்துடன் ஒரு சிற்றருவி வெளியே வந்து கொண்டிருந்தது. குகையின் வெளியில் அந்த அருவி அங்குமிங்கும் தவழ்ந்து விளையாடி முத்து நீர்த்துளிகளை வாரி இறைத்து விட்டுக் கீழ் நோக்கிச் சென்று அடர்ந்த விருட்சங்களின் நிழலில் மறைந்தது.

இவ்வளவு அழகான இயற்கைக் காட்சியின் ரம்யத்தைக் கெடுத்து அருவருப்பையுண்டு பண்ணக்கூடிய பொருள்கள் சில அருவியின் இருபுறத்துப் பாறைகளிலும் விருட்சங்களின் அடியிலும் காணப்பட்டன. அவை மனிதர்களின் மண்டை ஓடுகள், மாட்டுக் கொம்புகள் முதலிய காபாலிகர் கூட்டத்தின் சின்னங்களாகும். பாறைகள் சிலவற்றில் இரத்தக் கறை படிந்திருந்ததிலிருந்து, அந்தப் பாறைகள் சமீபத்தில் பலிபீடங்களாக உபயோகப்பட்டிருக்கின்றன என்பது தெரிய வந்தது.

மாலை நேரத்து மஞ்சள் வெயிலினால் பச்சை மரங்களும் பசும்பொன் நிறம்

அமரர் கல்கி

பெற்றுத் திகழ்ந்த நேரத்தில், மேற்கூறிய குகைகளுக்குச் சற்றுத் தூரத்தில் இருந்த ஒரு மொட்டைப் பாறையிலே நாலுபேர் உட்கார்ந்திருந்தார்கள். தொலை தூரம் பிரயாணம் செய்திருந்த காரணத்தினால் அவர்கள் பெரிதும் களைப்படைந்திருந்தார்கள். ஆடைகள் அழுக்கடைந்திருந்தன. தலையில் ரோமம் சடை விழுந்திருந்தது. முக வாய்க் கட்டையில் ரோமம் அடர்ந்தி ருந்தது.அவர்களுடைய இளம்பிராயத் துக்குப் பொருந்தாத சுருக்கங்கள் முகத்தில் காணப்பட்டன. கண்கள் குழி விழுந்து போயிருந்தன. ஆயினும், அந்தக் கண்களிலே ஒரு அசாதாரண ஒளி, இணையில்லா மனோதைரியத் தையும் எடுத்த காரியத்தை நிறை வேற்றும் உறுதியையும் காட்டும் ஜீவ சக்தி, - பிரகாசித்தது.

குன்றின் உச்சியில் ஒரு மனிதன் நின்று நாலாபுறமும் உற்று நோக்கிக் கொண்டிருந்தான். கீழே மொட்டைப் பாறையில் உட்கார்ந்திருந்தவர்கள் அடிக்கடி அவனை அண்ணாந்து நோக்கிக் கொண்டிருந்தார்கள்.

திடீரென்று மேலே நின்ற மனிதன் குதூகலம் நிறைந்த குரலில், "அதோ!" என்றான். அந்தக் குரலிலிருந்தே அவன் நமது பழைய நண்பன் குண்டோதரன் என்பதை அறிந்து கொள்கிறோம்.

"அதோ!" என்ற சத்தத்தைக் கேட் டதும் மொட்டைப் பாறையில் உட் கார்ந்திருந்த நால்வரின் முகங்களும் மலர்கின்றன. அவன் சுட்டிக்காட்டிய திக்கை அவர்கள் ஆவலுடன் உற்றுப் பார்க்கிறார்கள்.

மரங்கள் அடர்ந்த காட்டுக்குள்ளே யிருந்து ஒருவன் வருகிறான். அவன் வேறு யாருமில்லை; பல்லவ நாட்டு ஒற்றர் தலைவன் சத்ருக்னன்தான். மற்றவர்களைப் போல் அன்றிச் சத்ருக் னன் நன்றாக க்ஷவரம் செய்து கொண்டு சுத்தமான முகத்துடன் விளங்குகிறான். அதிலிருந்தே அவன் நகரத்துக்குப் போய் வருகிறான் என்று அறிந்து கொள்ளலாம்.

தோளிலே துணிப்பை தொங்க வந்த சத் ருக்னனை ஐந்து பேரும் சூழ்ந்து கொண்டார்கள். "சத் ருக்னா! காயா? பழமா சீக்கிரம் சொல்!" என்றார்கள்.

"பழந்தான்" என்று சொல்லிக் கொண்டே, சத்ருக்னன் தோளில் தொங்கிய பையை எடுத்து அவிழ்த் தான்.

அதிலிருந்து பழங்கள் கீழே விழுந்து உருண்டு ஓடின. அவற்றைப் பொறுக்கு வதற்கு எல்லாரும் பட்ட அவசரத்தி லிருந்து அவர்கள் எவ்வளவு தூரம் பசித்திருந்தார்கள் என்று தெரிய வந் தது.

பசித்ததோ, இல்லையோ தரையில் விழுந்த பழங்களின் மேல் கவனம் செலுத்தாமல், சத்ருக்னன் என்ன சொல்லப் போகிறான் என்பதிலேயே கவனம் செலுத்திய ஒருவரும் அவர் களில் இருந்தார்.

அவர்தான் மாமல்லர் என்று சொல்ல வேண்டியதில்லை.

"சத்ருக்னா! பழம் என்கிறாயே? அப்படி என்றால் என்ன? சிவகாமி யைப் பார்த்தாயா?" என்று கேட்டார்.

"ஆம் பிரபு, பார்த்தேன்!" என்று கூறி மறுபடியும் சத்ருக்னன் மௌனம் சாதித்தான்.

"ஏன் இப்படிப் பேசாமல் நிற்கிறாய்? மேலே சொல், சத்ருக்னா! எங்கே பார்த் தாய்? எந்த நிலையில் பார்த்தாய்?" என்று மாமல்லர் கேட்டார்.

"பிரபு! சிவகாமி அம்மையைப் பார்த்தேன். சௌக்கியமாக இருக்கிறார். கவலைக்கு ஒரு காரணமும் இல்லை. எங்கே பார்த்தேன். எப்படிப் பார்த் தேன் என்பதை விவரமாகச் சொல்ல வேண்டும். எல்லாரும் உட்காருங்கள், சொல்கிறேன்!" என்றான் சத்ருக்னன்.

அவ்வண்ணமே அனைவரும் பாறை மீது உட்கார்ந் தார்கள். சத்ருக்னன் சொல் லத் தொடங்கினான்.

"நேற்று மாலை வளையல்



வியாபாரியின் வேஷத்தில் வாதாபி நகருக்குள் பிரவேசித்தேன். கோட்டை வாசலுக்குள் பிரவேசிப்பதில் எவ்விதக் கஷ்டமும் இருக்கவில்லை. ஜனங்கள் தாராளமாய் நகருக்குள் வந்து கொண்டும், போய்க் கொண்டுமிருக்கிறார்கள். எந்த எதிரியின் படையெடுப்பையாவது எதிர்பார்த்தால் அல்லவா கோட்டையில் கட்டுக்காவல் வைக்கப் போகிறார்கள்? வாதாபியின் வீரப் படைகள் எட்டுத் திசையும் சென்று திக்விஜயம் செய்து கொண்டிருக்கும்போது...''

அச்சமயம் சேனாதிபதி பரஞ்சோதி குறுக்கிட்டு, ''என்ன உளறுகிறாய்! சத்ருக்னா! திக்விஜயமாவது மண்ணாங்கட்டியாவது? தென்னாட்டுக்குச் சென்ற வாதாபிப் படைகள் தோற்றுத் திரும்பி ஓடி வந்திருக்கின்றன! வேங்கிக்குப் போன சளுக்க சைனியத்தின் பாடும் ஆபத்துத்தான் என்று தெரிகிறது. அப்படியிருக்க வாதாபிப் படைகளின் திக்விஜயமாவது...? என்றார்.

சத்ருக்னன் பணிவுடன் கூறினான்: ''சேனாபதி! வாதாபிப் படைகளின் திக்விஜயம் என்று நான் கூறியது என்னுடைய சொந்த மொழியல்ல. வாதாபி நகரத்தின் பிரதான நாலு வீதிச் சந்திப்பிலே ஒரு நெடிதுயர்ந்த ஜயஸ் தம்பம் நாட்டியிருப்பதைப் பார்த்தேன். அந்த ஜயஸ்தம்பத்திலே பிராகிருத மொழியில் எழுதியிருக்கும் மொழிகளையும் படித்தேன். கிட்டத்தட்ட அதில் எழுதியிருப்பதை ஞாபகம் உள்ள வரை அப்படியே சொல்லிப் பார்க்கிறேன்:

''மகா ராஜாதிராஜ ராஜமார்த்தாண்ட ரணதுங்க சூர சளுக்க குலதிலக சப்தலோக தேவேந்திர புலிகேசிச் சக்கரவர்த்தி தென் திசையை நோக்கி விஜயம் செய்யப் புறப்பட்டுச் சென்று மகேந்திர பல்லவனை வடபெண்ணைக் கரையில் முறியடிக்க, மகேந்திரன் போரில் புறமுதுகிட்டோடிக் காஞ்சிக் கோட்டைக்குள் பதுங்கிக் கொள்ள, புலிகேசிச் சக்கரவர்த்தி மேலும் தெற்கு நோக்கித் திக்விஜயம் கிளம்பிக் காவேரி நதிக்கு யானைப்பாலம் அமைத்துக் கடந்து, அங்கே சக்கரவர்த்தியிடம் அடைக்கலம் புகுவதற்குக் காத்திருந்த சேர சோழ களப்பாள பாண்டிய மன்னர்களின் சிரங்களில் தம் திருப்பாத கமலங்களை வைத்து அருள் புரிந்து, திரும்புங் காலையில், காஞ்சிக் கோட்டையைப் பலங்கொண்டு தாக்க, மகேந்திர பல்லவன் சரணாகதியடைந்து காப்பாற்ற வேண்டும் என்று காலில் விழுந்து கெஞ்ச, அவ்விதமே மகேந்திரனுக்கு அருள் புரிந்து, அவனுடைய உபசாரங்களையும் காணிக்கைப் பொருள்களையும் ஏற்றுக் கொண்டு, தென்னாட்டின் திக்விஜயத்தைப் பூர்த்தி செய்து, ஜயபேரிகை முழக்கி, வெற்றிச் சங்கு ஊதி, வாதாபி நகரத்துக்குத் திரும்பி வந்தது சாலிவாகன சகாப்தம் நாளது ஆண்டு, திங்கள், தேதி, கடல் சூழ்ந்த நில உலகம் உள்ளவரையில் இந்த வாதாபி நகரமும் இந்த திக்விஜய ஜயஸ்தம்பமும் சளுக்க சக்கரவர்த்தி குலமும் என்றென்றைக்கும் நின்று நீடித்துப் பெருகித் தழைத்து விளங்குவதாக!''

இவ்விதம் சத்ருக்னன் கூறி வந்ததைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள், ''என்ன பொய்! என்ன கர்வம்! அந்த ஸ்தம்பத்தை இடித்துத் தள்ளாமல் விடுவதில்லை'' என்றெல்லாம் கூறினார்கள்.

சிறிது அவர்கள் இடங் கொடுத்ததும், சத்ருக்னன் மேலும் கூறினான்: - ''பிரபு, அந்த ஜயஸ்தம்பத்தில் இவ்விதம் நான் படித்ததும் என்னை நான் மறந்துவிட்டேன். ஸ்தம்பத்தை நோக்கி ஒரு உதை விடலாம் என்று எண்ணிக் காலையும் தூக்கி விட்டேன். கடவுள் அருளால் நல்ல சமயத்தில் எதற்காக வாதாபி நகருக்கு வந்தோம் என்பது ஞாபகம் வந்தது. ஏதோ கால் தடுக்கி விழுந்தவனைப் போல் தொப்பென்று கீழே விழுந்து சமாளித்துக் கொண்டேன். வீதியில் ஜனக்கூட்டம் 'ஜேஜே' என்று இருந்தது. யாராவது பார்த்திருந்



தால் விபரீதமாய்ப் போயிருக்கும்!'' என்று கூறி நிறுத்தினான்.

''சத்ருக்னா! வாதாபிக்கு வந்த காரியம் உனக்கு நினைவில் இருந்தது பற்றிச் சந்தோஷம். ஆனால் அதைப் பற்றி இன்னமும் நீ சொல்லவில்லை!'' என்று மாமல்லர் கோபம் தொனிக்கக் கூறினார்.

''பிரபு! மன்னிக்க வேண்டும். சளுக்கர்களின் பொய் சொல்லும் திறமைக்குச் சிறந்த ஞாபகச் சின்னமான அந்த ஜயஸ்தம்பத்தை விட்டு மேலே கிளம்பிச் சென்றேன். வாதாபி நகரின் மிதமிஞ்சிய ஐசுவரிய போகத்துக்கும் வாதாபி மக்களின் படாடோப வாழ்க்கைக்கும் பல அறிகுறிகளைப் பார்த்துக் கொண்டு போனேன். இந்தப் பெரிய நகரத்தில், கிழக்கு மேற்கிலும் தெற்கு வடக்கிலும் குறைந்தது காத தூரமுள்ள இந்தப் பிரம்மாண்டமான பட்டணத்தில், - சிவகாமி அம்மையை எப்படித் தேடுவது, யாரை விசாரிப்பது என்று சிந்தனை செய்துகொண்டே போனேன். கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது போல், அடுத்தாற்போல் வந்த நாற்சந்தி வீதி முனையில் அம்மையைச் சந்தித்தேன்...!''

''என்ன? நாற்சந்தி முனையிலா?'' என்று பல குரல்கள் ஏக காலத்தில் எழுந்தன.

''ஆம்; நாற்சந்தி முனையிலேதான் பார்த்தேன். அம்மை அங்கே செய்து கொண்டிருந்த காரியத்தைக் கேட்டால் நீங்கள் பெரும் ஆச்சரியப்படுவீர்கள். எனக்கும் பார்த்தவுடனே ஆச்சரியமாயிருந்தது; வேதனையாகக்கூட இருந்தது. ஆனால், விசாரித்து விஷயம் தெரிந்து கொண்டதும் அளவில்லாத பெருமை அடைந்தேன். பிரபு! தமிழகத்துப் பெண் குலத்தின் பெருமையைச் சிவகாமி அம்மை நிலைநாட்டி விட்டார். நூறு காத தூரத்துக்கு அப்பால் எதிரிகளின் கோட்டையில் அநாதையாகவும் தன்னந்தனியாகவும் இருக்கும் நிலைமையில் அம்மையார் தமிழகத்துப் பெண் குலத்தின் தயாள குணத்தை நிலை நாட்டியிருக்கிறார்...''

''சத்ருக்னா! ஏன் இப்படி வளைத்து வளைத்துப் பேசிக் கொண்டிருக்கிறாய்? சிவகாமி என்ன காரியம் செய்து கொண்டிருப்பதைப் பார்த்தாய்?'' என்று மாமல்லர் கடுமையான குரலில் கேட்டார்.

''பிரபு! சொல்லி விடுகிறேன். வாதாபி நகரின் நாற்சந்தியில் சிவகாமி அம்மை நடனம் ஆடிக் கொண்டிருந்தார்...!''

''ஆகா...! ''இது என்ன?'' ''அவமானம்! அவமானம்!'' ''இதைத்தானா தமிழகத்துக்குப் பெருமை என்று சொன்னாய். சத்ருக்னா!'' என்று தலைக்குத் தலை கூவினார்கள்.

''மன்னிக்க வேண்டும். கொஞ்சம் பொறுத்துக் கொண்டு மீதியையும் கேளுங்கள். சிவகாமி அம்மை ஒரு பெருங் கும்பலுக்கு மத்தியில் நின்று ஆடுவதைப் பார்த்ததும் எனக்கும் சொல்ல முடியாத அவமானம் உண்டாயிற்று. கோபமும் ஆத்திரமும் பொங்கிக் கொண்டு வந்தன. கூட்டத்தில் நின்ற வாதாபி மக்கள் கொச்சையான பாஷையில் பேசிக் கொண்ட அருவருப்பான வார்த்தைகளைக் கேட்டதும் என் காதுகள் கொப்பளித்தன; ஓடிப் பாய்ந்து அம்மையின் முன் சென்று, 'நிறுத்துங்கள் இந்த அவமானத்தை!' என்று கூவ வேண்டும் என்பதாக ஆத்திரம் உண்டாயிற்று. நல்லவேளையாக அந்தச் சமயத்தில் நடனமாடிய அம்மைக்குப் பின்னால் நின்றவர்கள் மீது என் பார்வை விழுந்தது. ஆகா! அதை எப்படிச் சொல்வேன்? தமிழகத்தைச் சேர்ந்த ஸ்திரீ புருஷர்கள் பலரை அங்கே கையைப் பின்னால் சேர்த்துக் கட்டி நிறுத்தியிருந்தார்கள். அவர்களுக்கிடையே கையில் சாட்டை பிடித்த யமகிங்கரர் போன்ற மனிதர்கள் சிலர் நின்று கொண்டிருந்தார்கள். அந்தக் காட்சியைக் கண்டதும் பிரமித்து நின்றுவிட்டேன். பிரமை நீங்கிய பிறகு கூட்டத்திலிருந்தவர்களின் பேச்சுக்களை ஒற்றுக் கேட்டும்,



''சத்ருக்னா! ஏன் இப்படி வளைத்து வளைத்துப் பேசிக் கொண்டிருக்கிறாய்? சிவகாமி என்ன காரியம் செய்து கொண்டிருப்பதைப் பார்த்தாய்?''



''பிரபு! சொல்லி விடுகிறேன்.
வாதாபி நகரின் நாற்சந்தியில்
சிவகாமி அம்மை நடனம் ஆடிக்
கொண்டிருந்தார்...!''



அருள்வாக்கு!

யோகிக்கு அடையாளம் என்ன! பரமாத்மாவிடம் சேர்ந்து விட்ட அவனது மனசு வேறு எதையுமே சேர்த்துக் கொள்ள நினைக்காது.



மனசு அதற்கப்புறம் ஓடவே முடியக் கூடாது. அப்படி ஆகி விட்டால் தான் அதற்கப்புறம் இப்போது இந்த மனசினால் நமக்கு உண்டாகியிருக்கிற அத்தனை தொந்தரவுகளும் தொலைந்து போகும். அந்த நிலையைப் பெறுவதற்கு எதைச் சேர வேண்டும்? மனசு எதிலிருந்து உற்பத்தியாயிற்றோ அதைத் தான் சேர வேண்டும். மனசு அதன் மூலத்தில் சேர்ந்து விட்டால், அங்கே அப்படியே கரைந்து போய்விடும். அப்புறம் ஓடாது. அதுவே சகல தொந்தரவுகளிலிருந்தும் விடுபட்ட நிலை. நதி இருக்கிறது. அதன் மூலம் -உண்டான இடம் - என்ன? சமுத்திரம். சமுத்திர ஜலம்தான் ஆவியாகப் போய் வேறொரு இடத்திலிருந்து நதியாக ரூபம் எடுக்கிறது. அந்த ஆறு ஓடாத ஓட்டமில்லை. இப்படி ஓடி ஓடிக் கடைசியில் தன் மூலமான சமுத்திரத்தில் வந்து விழுகிறது. அப்புறம் அதற்குத் தனி ரூபம் உண்டா? ஓட்டம் உண்டா? ஒன்றும் இல்லை. இப்படி நதிகளுக்கெல்லாம் மூலமாக இருந்து முடிவில் அவற்றைத் தன்னிலேயே சேர்த்துக் கொள்கிற சமுத்திரம் மாதிரி, நம் மனசுகளை எல்லாம் முடிவான சேர்க்கையில், யோகத்தில் தன்னோடு கரைத்துக் கொள்கிற ஒன்று இருக்கிறதா என்றால், இருக்கிறது. சமாதி நிலையில் ஞானிகள், யோகிகள் தங்கள் தனி மனசைக் கரைத்து விட்டு வெளிப் பிரக்ஞையே இல்லாமல் இருக்கும் போது இந்த வஸ்துவிடம்தான் சேர்ந்திருக்கிறார்கள். சமாதி நிலைக்கு அப்புறம் ஒரு யோகி அந்த வஸ்துவை விட்டு விட்ட மாதிரி நமக்குத் தோன்றினால் கூட உண்மையில் இது நீங்காத சேர்க்கைதான். உள்ளூர அவருக்கு அந்தச் சேர்க்கையின் அநுபவமேதான் இருந்து கொண்டிருக்கும். அதனால்தான் அவர் வெளிப் பிரக்ஞையோடு இருக்கிற மாதிரி நமக்குத் தோன்றுகிறபோது கூட, அதை அடைய வேண்டும், இதை அடைய வேண்டும், என்கிற ஆசை எதுவுமே அவருக்கு இல்லை. ஏதாவது ஒன்று தனக்கு வேண்டுமென்று கொஞ்சம் கொஞ்சம் ஒருத்தனுக்குத் தோன்றி விட்டால் கூட அவன் யோகியில்லை. அவன் ஸ்வாமியைச் சேரவில்லை என்றுதான் அர்த்தம்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்.

சந்தேகம் தோன்றாதபடி விசாரித்தும், மேற்படி அதிசயக் காட்சியின் காரணத்தை நன்கறிந்து கொண்டேன்...!''

பிறகு சத்ருக்னன், சிவகாமி அம்மை நாற்சந்தியில் நடனமாட நேர்ந்தது ஏன் என்னும் காரணத்தைத்தான் தெரிந்து கொண்டபடி அவர்களுக்குக் கூறினான். "தமிழகத்து ஆடவர் பெண்டிரைக் கொடுமையான சாட்டையடித் தண்டனையிலிருந்து காப்பாற்றுவதற்காகவே சிவகாமி நடனமாடுகிறாள்'' என்று தெரிந்ததும் மாமல்லர் முதலியவர்களுக்குத் தேகத்தில் புளகாங்கிதம் உண்டாயிற்று.

மேலே நடந்ததைப் பற்றி ஆவலுடன் கேட்டார்கள்.

''இனிய கானத்தைக் கேட்ட நாகசர்ப்பத்தைப் போல் நான் சிவகாமி அம்மையின் நடனத்தைப் பார்த்துக் கொண்டு பிரமித்து நின்றேன். அம்மை நடனத்தை முடித்துச் சற்று ஆசுவாசப்படுத்திக் கொண்டு திரும்பினார். திரும்பியதும் சில கண நேரம் அவருடைய கண்களில் சொல்ல முடியாத வியப்பும் திகைப்பும் காணப்பட்டன.

''அவர் பார்த்த திசையை நானும் நோக்கினேன்; அங்கே யார் நின்றது என்று நினைக்கிறீர்கள்...?''

"யார்? யார்?'' "புலிகேசியா?'' என்று கேள்விகள் எழுந்தன.

"இல்லை நம் சிநேகிதர் நாகநந்திதான்!'' என்றான் சத்ருக்னன்.

(தொடரும்)

முகத்தில் அறையும் காற்றினூடே
பேருந்தின் ஜன்னல் வழியாய்
வெளி பார்த்து மகிழ்கிறது மனசு.

என் வீட்டு ஜன்னலைவிட
எப்போதும் அழகாகத் தெரிகிறது
எதிர்வீட்டு ஜன்னல்.

எட்டாவது மாடியிலுள்ள
அலுவலக ஜன்னல்
மாநகரத்தை விரிக்கிறது கண்களில்.

ஜன்னல் ரசிப்பிலேயே மிதந்து
தட்ட வேண்டிய கதவுகளை
மறந்து விடுகிறது வாழ்வு!



ஜன்னல்

கோவி.லெனின்

ஆலமரத்தடியில்



நீண்டு வளர்ந்து
விரிந்து, பரந்து
கம்பீரமாய் நின்று
கிளைகளொடு உறவாடி
பாதையில் வருவோரை
வாவென்று அழைக்கும்
தாய்ப்பாச ஆலமரம்,

தூங்காமல் தொங்கும்
விழுதுக் குழந்தைகளை
பூமகளின் பாதம் தொட்டு
சென்ற காலச் சேவைக்கு
நன்றிபல கூறி வணங்க
ஆணையிட்டுக் கொண்டிருக்க,

உடைமைக்கு உறவு
கடமைக்கு யாரோ!
உணராத பிள்ளையால்
உருக்குலைந்த தந்தை.

எண்பதையும் எட்டி
உண்பதற்கும் வழியின்றி
நோயும் முதுமையும்
சேர்ந்து மிகவாட்ட

நடை தளர நிழலமர்ந்து
அண்ணாந்து பார்த்தார்
ஆலமரப் பெருவாழ்வை!

கண்களில் வழிந்த நீர்
மண்ணில் வீழ்ந்து
நிலமகளை நனைத்தது!

கு.சிவசுப்ரமணியன்



வெள்ளை ரோஜா

புன்னகை சேது

எல்லையென்ற
கோடுகளால்
எதிரியான தோழனே...

இரத்தத்தின் சுவை தேடும்
துப்பாக்கிகளை
ஓரம் வைத்து விட்டு...

உன் பதுங்கு குழியிலிருந்து
புன்னகையோடு...
எழுந்து வா...!

இருவரும்
ஆளுக்கொரு கைபிடித்து
பூச்செடி நட்டுவிட்டு...

வழக்கம் போல
சுட்டுக் கொள்வோம்
அல்லது கொல்வோம்....

நாளையாவது
மலரட்டும்
போர்க்களத்திலொரு
வெள்ளை ரோஜா

காதல் குறிப்புகள்



எனது
கூடாரம் அருகே

மெல்லிய
சிறகொலியாகவேனும்

உனது
காலடியோசை கேளாதாயென


வறண்ட நிலத்தின் நாவுகள்
மேகத்துளிகளை எதிர்நோக்கி
நீண்டிருப்பது போல்

காத்திருக்கிறேனெனினும்
இப்பொழுது மட்டும்
வந்து விடாதே

சின்னஞ்சிறிய ஓசை கேட்பினும்
பறந்து விடக் கூடும்
கூடார வாயிலில்
தானியம் கொத்தும் குருவிகள்!

ப்ரணா

போதுண்டா பேராண்டி!



"பாட்டி! உன்னோட எழுபதாவது பிறந்த நாளுக்கு ஐயாயிரம் ரூபாய்ல பட்டுப் புடைவை எடுக்கலாம்னு இருக்கேன்!"

"இந்த வயசான கட்டைக்கு எதுக்குப்பா ஐயாயிரம் ரூபா புடைவை... மலிவு விலை சுடிதாராமே.... அதை வாங்கிக் கொடு போதும்!"

— நெய்வேலி கொளஞ்சி



''கடுமையான போட்டிக்கு மத்தியில எப்படி உங்களுக்கு வேலை கெடைச்சுது!''

''எனக்கு எலிக் கதை... பூனைக் கதை... இளவரசன் கதை... ராஜா கதை... இப்படிப் பல கதைகள் தெரியும்னு சொன்னேன்... செலக்ட் பண்ணிட்டாங்க!''

— ஜி. வினோத்

"என்னடா பரீட்சைக்குப் படிக்காம பக்கத்து வீட்டு சுந்தர்க்கு டீ, போட்டு எடுத்துட்டுப் போறே?"

"பக்கத்து சீட்காரன் ஒழுங்காப் படிச்சா தானே நான் நல்லா எழுதி பாஸ் பண்ண முடியும்!"

— ஆசுரா





''தலைவர் சிறுவர் பத்திரிகைகளா படிக்கறாரே... ஏன்?''

''மீட்டிங்ல குட்டிக் கதைகளாச் சொல்ல வேண்டி இருக்குதாம்!''

''ஊருக்குள்ள தலைகாட்ட முடியல!''

''ஏன் அவ்வளவு விரோதிங்களைச் சம்பாதிச்சுட்டியா...?''

''ஊஹூம்... இருக்கிற நாலு சலூன்லயும் பாக்கி வைச்சுருக்கேன்!''

— அம்பை தேவா





நாளைய நாட்களை சற்றும் பிசகாது அறிந்திட

ஜோதிடப்பயிற்சி

(தபால் வழி போதனா முறை)

அன்றைய அறிஞர்கள் ஆய்ந்தறிந்து ஆராய்வு வழியாக அவரவர் அவதரித்த நேரம் கொண்டு அவர்கள் வாழ்வை சற்றும் பிசகாது அளவை செய்து — அவரவரது ஆற்றலை அவதரித்த நாளிலேயே கண்டு அவர்கள் பெற்றோர் அறிந்திடக்கூறி ஆச்சரியத்தில் ஆழ்த்தினர் — அத்தனை வியப்பிற்குகந்த கிரக ஆராய்ச்சி வழியை முழுமையாக அறிய வைப்பதுதான் **ஜோதிடக்கலை.**

இத்தனை விஞ்ஞானங்கள் வளர்ந்த நாளிலுங்கூட மனிதரது வாழ்வை அச்சு மாறாது அளவை செய்யும் ஒரு மாற்று வழி தோன்றவில்லை. பிறந்த நேரத்தை சற்றும் தவறாது கண்டெடுத்து சூழ்நிலை வாயிலாக அந்த நேரம் சரிதானாவெனவும் ஆய்வு செய்து லக்கினம் அமைக்கப்பட்டுவிடுமாயின் - ஜோதிட சாஸ்திரம் சற்றும் மாறாது உற்ற பலன்களை உரியபடி கூறிவிடும்.

படிப்பானா, பதவி ஏற்பானா, தொழில் வழி மன்னனா, அனைவருக்கும் நலம் செய்யும் தியாகியா, இனிய இல்லறம் காண்பானா - கனிவான மக்களைப் பெறுவானா, பெற்றோரை பெருமையுறக் காப்பானா? தேக திடம் உள்ளவனா, ஆற்றல் அறிவுமிக்க ஞானியா? கடன் வழித் தொல்லைகளை சுமப்பானா? மாட மாளிகை கூட கோபுரம் ஏற்பானா? எந்த வயது வரை இனிது உயிர் வாழ்வான்? என்ற அவன் சரிதத்தை அப்படியே இம்மியும் பிசகாமல் சொல்லும் வல்லமையை 63 பாடங்களில் போதிக்கின்றோம். இதுவரை எவரும் கூறி இராதபடி பலன் சொல்லும் வழிமுறைகளை 250 உதாரண ஜாதகமிட்டு விவரித்திருக்கின்றோம்.

இது காறும் 40 ஆண்டுகளாக பயில்வித்து வரும் எம்மிடத்தில் பயின்றவர்கள் தமிழினத்தார் எங்கெங்கு இருக்கின்றனரோ அங்கெல்லாம் பெரிய ஜோதிடர்களாக பெரும் புகழ் சேர வாழ்கின்றனர். படித்து முடித்தார்க்கு 'ஜோதிடக்கலைஞர்' என்ற பட்டமும் சான்றிதழும் தருகின்றோம்.

எள்ளளவும் பிசகின்றி ஜாதகம் கணிக்கும் வழிமுறைகள், வாழ்வில் என்ன என்ன இன்பநிலை அடைவார் - என்ன என்ன இன்னலுக்கு ஈடாவார் என்று எள்ளளவும் பிசகாது எடுத்துப் பலன் சொல்லும் பக்குவம் பாங்காக விளக்கப்பட்ட பாடங்கள். முழுமையாக ஜோதிடத்தை அறிந்து கொள்ள அரிதான வாய்ப்பு இது.

> இதனை முழுமையாக கற்றுத்தேறி மற்றவர் வாழ்விலும் நலம் சேர்ப்போர் நிச்சயமாக மதுபானம் செய்வது, புகை பிடிப்பது புகையிலை, பொடி போடும் தீய பழக்கமற்றவராக இருப்பின் நிச்சயமாக இக்கலை வழியாக எவரது வாழ்வையும் எள்ளளவும் பிசகின்றி கூறிவிடும் கடவுள் அருள் பெறுவார்.

எனவே இத்தீய பழக்கமற்ற நல்லியல்புடையோர் 15.05.2003 தேதி மாலைக்குள் ஜாதக நகலுடன் அரிய ஜோதிடக்கலையை கற்றுத் தேற விரும்புகின்றேன் என்று எழுதி அனுப்பிடுங்கள். கிடைத்தவுடன் உரிய விபர படிவம் அனுப்புகின்றோம். கொடுத்த தேதிக்குள் மனுச் செய்க. எமது ஆசிகள்.

பிரபல ஜோதிடர், ஜோதிட ஆசிரியர்

ஸ்ரீமத் ஜெய வீர தேவா, யோகி

இராஜயோக பயிற்சியாளர்

(0452)
2533412
2650576

பிளாட் எண்: 204, அண்ணாநகர், மதுரை - 625 020 தமிழ்நாடு

''உடம்பை செக்கப் பண்ணிப் பார்த்துட்டு இன்னும் பத்து வருஷத்துக்குக் கவலையே இல்லைன்னு டாக்டர் சொல்லிட்டாரு''
''யாருக்கு... உனக்கா இல்லே அவருக்கா...?''

- ஜி. விநோத்



"ஸ்வாமின்னு யாராவது பேரு வைச்சுப்பாங்களா ராமு?" என்று அவள் கேட்டபோது அதை முதலில் ஏதோ பொதுஅறிவுக் கேள்வி போலத்தான் எண்ணினான். சாமிநாதன், சாமிக்கண்ணு என்று தங்கள் கிராமத்தைச் சேர்ந்தவர்களே இருக்கிறார்களே!

சொன்னதும் அவள் மறுத்தாள். 'சாமி இல்ல, ஸ்வாமி' என்றாள்.

தனக்கு நினைவில் வந்த தேநீர்ப்பார்ட்டி புகழ் மனிதரின் பெயரைக் கூறியபோதும் மறுத்தாள். "அரசியல்வாதிங்க இல்ல. நமக்குத் தெரிஞ்சவங்களில் யாராவது இருக்காங்களா?"

யாரும் நினைவுக்கு வரவில்லை. அப்போதுதான் நான் கேட்டிருக்க வேண்டிய ஒரு கேள்வியை இன்னமும் கேட்காதது நினைவுக்கு வந்தது. எதற்காக இப்போது அவளிடமிருந்து இந்தக் கேள்வி?

"என்னை நேத்திக்குப் பொண்ணு பாக்க வந்தவரோட பேரு ஸ்வாமியாம்."

இரண்டே நாட்கள் ஊரில் இல்லை. அதற்குள் இந்தப் படலமா? சென்னைக்குப் போய்வர வேண்டிய கட்டாயம். வேறென்ன

முள் படுக்கை

அருண் சரண்யா

செய்ய, நேர்முகத் தேர்வை அங்கேதானே நடத்துகிறார்கள். நம்பிக்கை தந்திருக்கிறார்கள். அடுத்த மாதம் அந்த வேலை கிடைக்கக்கூடும். அதற்குள் இந்தக் கூத்து! ஒருவேளை தங்களது காதல் தெரிந்துபோய்தான் இந்த அவசர ஏற்பாடோ?

"இல்ல ராமு. நம்ம விஷயம் எங்க வீட்டுக்குத் தெரியாது" என்றவள் அரை நிமிடத் தயக்கத்திற்குப் பிறகு "அவருக்கும் அவங்க வீட்டாருக்கும் என்னைப் பிடிச்சுப் போச்சாம் ராமு" என்றாள். அவள் குரலில் நடுக்கம் எட்டிப் பார்த்தது.

ராமுவுக்கு அவளை எண்ணிக் கவலை ஏற்பட்டது. அவளது கண்கள் இடுங்கிப் போயிருந்தன. ராத்திரி முழுதும் உறங்காமலிருந்திருக்க வேண்டும். அதையும் மீறி அவள் முகத்தில் ஒரு தீர்மானமும் புலப்பட்டது போலிருந்தது. ஊரைவிட்டுப் போய்விடலாம் என்பாளா அல்லது அவனே வந்து அவள்



பெற்றோரிடம் உடனடியாகப் பேச வேண்டும் என்பாளா? தன்னைத் தயார் செய்து கொள்ள அவன் முயற்சித்தபோதுதான் அவள் அப்படிக் கூறினாள்.

"வீட்ல மாறி மாறி உபதேசம் ராமு. அந்தாளு நல்ல வேலையில இருக்காரு. காலேஜில பெரிய படிப்பு படிச்சிருக்காரு. என் அழகுல மயங்கிட்டாராம். அதுதான் பொண்ணு பாக்க விருட்டுனு வந்துட்டாராம். எனக்கு ரொம்ப அதிர்ஷ்டமாம். நான் தயங்குவதிலே அர்த்தமேயில்லைன்னு மாறி மாறி லெக்சர். வெறுப்பா இருந்தது."

எனக்கு வருங்காலத்தில்தான் வேலை. கடந்த காலத்தில் கல்லூரி வாசனை கொஞ்சம்தான். நானும்தான் இவனிடம் மயங்கியிருக்கிறேன். நல்லவேளையாக

இவள் என்னிடம்தான் மயங்கியிருக்கிறாள்.

"எங்கம்மாவைப் பார்த்தாதான் பாவமா இருக்குது. அடுத்த ஊர் மாப்பிள்ளைன்றதாலே அடிக்கடி நாங்க உன்னை வந்து பாக்கலாம். நீயும் வரலாம்னு ஆசை ஆசையா சொன்னாங்க."

ராமு புன்னகைத்தான். தாங்கள் கல்யாணம் செய்துகொண்டால் அந்த அளவு கூடப் பயணம் செய்ய வேண்டாம். ஒரே ஊர் மாப்பிள்ளை.

"ஆனா நாம வெவ்வேறு ஜாதியாச்சே ராமு. அப்பாவுக்கு இதிலயெல்லாம் ரொம்ப நம்பிக்கை உண்டு. அவரை மீறி அம்மா ஒண்ணும் செய்ய மாட்டாங்க." அவள் கண்களில் நீர் எட்டிப் பார்த்தது.

பாவம் வளர்ந்த குழந்தை இவள். உலகின் நியதியை விளக்க ஆரம்பித்தான். காதல் ஜோடிகளுக்குப் பெற்றோர் உடனடி அங்கீகாரம் தருவதில்லைதான். ஆனால் ஒரு குழந்தை பிறந்தபின், தாத்தா பாட்டிகளின் மனம் மாறிவிடுகிறது. 'குழந்தைக்காக உங்களை மன்னித்து விட்டோம்' என்கிற போர்வையில், விலகியிருந்த பந்தத்தை இழுத்துப் பிடித்து விடுவார்கள்.

மேலும் சமாதானங்களை அள்ளிவிடுவதற்கு முன், வலப்புறமாகச் சற்றுத் தள்ளியிருந்த மரத்தினருகே ஒரு நிழல் தென்பட்டது. 'ஆரு?' என்று ராமு குரல் கொடுப்பதற்குள் அந்த உருவம் நகர்ந்து வந்தது. அண்ணன்!

அவன் வெகுவேகமாகத் தன் வீட்டுப் பக்கம் கால்களைச் செலுத்தத் தொடங்கினான். அண்ணனும் தம்பியுமாக தங்கள் இருப்பிடத்தை நோக்கி நடக்கத் தொடங்கினர். தனது காதலைப் பற்றி இப்போது அண்ணனுக்குத் தெரிந்து விட்டது. ஆனால் ஏன் வியப்பையோ கோபத்தையோ காட்டாமலிருக்கிறார்?

வீடு நெருங்கியது. திடீரென்று "அவ உறுதியா இருக்காளா?' என்று சட்டென்று கேட்டார். பின் தனது அறைக்குள் சென்று விட்டார்.

இரவு அம்மா உணவு பரிமாறியபோது கூட சகோதரர்கள் பேசிக் கொள்ளவில்லை. "என்னடா ரெண்டு பேரும் வாயிலயும் ரொம்ப நேரம் கொழுக்கட்டை?" என்று அம்மா கேட்டாள். அண்ணனைப் பார்த்து "கமலாவுக்கு வந்தது பொய் வலியாக இருக்குண்டா. அடுத்த மாசம் சுகப் பிரசவம் தான் நடக்கும். கோவிந்தசாமிப் பெருமாளுக்கு முடிஞ்சி வச்சிருக்கேன். அதனாலே உன் பெண்டாட்டியின் பிரசவத்தை நினைச்சு மனசைத் தளரவிடாதே" என்றாள். பிறகு ராமுவைப் பார்த்து "வேலை கிடைக்குண்டா, கிடைக்காம எங்க போயிரும்?" என்றாள்.

ராமுவின் மனத்தில் அண்ணன் கேட்ட கேள்வி சுழன்று கொண்டேயிருந்தது. அவள் தன் மீது கொண்ட காதல் உறுதியானதா என்பதில் அண்ணனுக்கு ஏன் சந்தேகம் ஏற்பட வேண்டும்? எவனோ பெண் பார்த்ததைக்கூட அவள் எவ்வளவு விசனத்தோடு குறிப்பிட்டாள்!

திடீரென்று ராமுவின் மனத்தில் ஒரு முடிச்சு விழுந்தது. ஒருவேளை பெற்றோரின் கட்டாயம் மற்றும் மகிழ்ச்சிக்காக அந்த ஸ்வாமியைத் திருமணம் செய்து கொள்ள ஒப்புக் கொண்டு விடுவாளோ?

"மன்னிச்சுக்க ராமு. எனக்கு உன்னைக் கல்யாணம் பண்ணிக்கணும்னுதான் இருந்தது. ஆனா யோசிச்சுப் பாத்தப்போ அந்த ஸ்வாமிக்கு கழுத்தை நீட்டினா பிரச்னை இருக்காதுன்னு தோணுது" என்று கூறி விடுவாளோ? இப்படி எந்தவித எண்ணமும் அவளுக்கு இல்லையென்றால், இன்று ஏன் அவள் தனது காதலை அழுத்தமாக வெளிப்படுத்தவில்லை? "சீக்கிரமே நம்ம கல்யாணம் நடந்துடணும் ராமு" என்பது போல் ஏன் கூறவில்லை? "எனக்கு என் வீட்டாரைவிட நீதான் முக்கியம் ராமு" என்று ஏன் தன்னிடம் உறுதி கூறவில்லை?


ராமுவுக்கு உடனடியாக அவள் கழுத்தைப் பிடித்து நெறிக்க வேண்டும் போலிருந்

189 வருட கம்பீரம்

தஞ்சைப் பெரிய கோவிலில் 189 ஆண்டுகளுக்குப் பிறகு, கொடி மரம் சிதிலம் அடைந்து கீழே விழும் நிலையில் இருந்தது சமீபத்தில் தெரிய வந்தது.

உடனடியாகக் கொடி மரத்தை அகற்றி விட்டுப் புதிய கொடி மரம் நடுவதற்கு தஞ்சை அரண்மனை தேவஸ்தானம் முடிவு செய்தது.

இதற்காக தஞ்சையை அடுத்த கல்யாணபுரத்திலிருந்து தேக்கு மரம் விலைக்கு வாங்கப்பட்டு, தயார் செய்யும்



நிலையில் அதில் துவாரம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அதற்குப் பதிலாக நைஜீரியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட தேக்கு மரத்தில் புதிய கொடிமரம் தயார் செய்யப்பட்டது.

கொடி மரத்தை, தஞ்சையின் ஆஸ்தான ஸ்தபதி, சுவாமி மலை சிற்பி குபேரன் ஸ்தபதி, மோகன் ராஜ் ஸ்தபதி ஆகியோர் தலைமையில் சுமார் பதினைந்துக்கும் மேற்பட்டவர்கள் வடிவமைத்தார்கள்.

அந்தப் பணி முடிவடைந்து கொடி மரத்திற்குப் பூஜை செய்து நந்தி மண்டபத்துக்கு முன் கருங்கல் பீடத்தில் நிறுத்தினார்கள். கொடி மரத்திற்கு மேலே செப்புத் தகடுகள் பொருத்தும் பணி இரவு பகலாக நடை பெற்றது. அதில் நூறுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஈடுபட்டனர்.

- தஞ்சை யமுனா தேவி

தது. கூடவே அவள் காலில் விழுந்து என்னைக் கைவிட்டு விடாதே என்று கெஞ்ச வேண்டும் போலும் தோன்றியது. ஒருவேளை அவள் தன் அம்மாவின் கண்ணீரை நினைத்துத் தன் மனத்தை மாற்றிக் கொண்டு விடுவாளோ! அப்படியானால் அவளை மீண்டும் தன் வழிக்கு எப்படிக் கொண்டு வருவதாம்? அவளின்றி வாழ்வேது?

தெளிவாக விளக்கிச் சொல்ல வேண்டியிருக்கும். கணக்குப் பார்த்து வருவதல்ல காதல். ஒருவனைக் காதலித்தால் அவனை மணமுடிப்பதுதான் தமிழர் பண்பாடு. அந்த ஸ்வாமியைத் திருமணம் செய்துகொண்ட பிறகு, அவனுடன் அவளால் சந்தோஷமாக வாழ முடியுமா? ராமுவை எண்ணியே வாழ்க்கையை நரகமாக்கிக் கொள்ள மாட்டாளா அவள்? இதையெல்லாம் கூற வேண்டும்.

தொடர்ந்து ஒரு பட்டியலையும் வெளியிட வேண்டும். படர்ந்து பம்மென்றிருந்த தன் தலைமுடியை அவளுக்காகப் படிய வாரி விட்டுக் கொண்டதை, அம்மாவின் விருப்பத்தையும் மீறி அவன் வளர்த்த குறுந்தாடியை அவளுக்காகத் தியாகம் செய்ததை. ரேஷன் கடையில் கொஞ்ச நேரம் வரிசையில் நிற்க வேண்டும் என்றால்கூட, அடுத்த நாள் வாங்கிக் கொள்ளலாம் என்று திரும்பிவிடும் தான், அவளுக்காக மாந்தோப்பிலும் ஆற்றங்கரையிலும் மணிக்கணக்கில் காத்திருந்ததை. அவள் தலையிலிருந்து விழுந்த பூவை தான் சேமித்து வைத்திருப்பதை. அவனோடு திருமணம் என்று பேசுகையிலேயே அவள் மனது இலேசாகிப் போனதை. முக்கியமாக இதே பேச்சின்போது அவள் முகமும் ஒளி சிந்தியதை...

நள்ளிரவு தாண்டியும் உறக்கம் வரவில்லை. மூன்று நான்கு முறை தண்ணீர் குடித்தான். அப்போது அண்ணன் அறையிலும் விளக்கு எரிந்து கொண்டிருந்தது தெரிந்தது.

ராமுவுக்குக் கொதிப்பு ஏற்பட்டது. தலைக்குள் வேகமாக ரத்தம் பாய்வது போலிருந்தது. யாருக்கு வேண்டும் அவளுடைய நல்லாசிகள். காதலை வேண்டிக் கருணையைப் பெறுவது போன்ற ஓர் அவலம் எவனுக்கும் வாய்க்க வேண்டாம். குலத்தைப் பற்றிப் பேசுகிறாள். நற்குடும்பத்தில் பிறந்தவள் நல்லொழுக்கத்தோடு இருக்க வேண்டாமா? ஒருவனிடம் மனத்தைப் பறி கொடுத்து பின் மற்றொருவனை மணந்து கொள்வதற்குப் பேர்கூட விபச்சாரம்தான்.

காலையில் தன்னைப் பார்த்தபோது அண்ணனின் கண்கள் சிவந்திருந்தது ராமுவுக்குப் புரிந்தது. பாவம்! அண்ணனின் கையைப் பற்றியபடி "கவலைப்படாதேண்ணா. அண்ணிக்கு சுகப் பிரசவமாகும்" என்றான் ராமு.

அண்ணன் ராமுவையே சிறிது நேரம் உற்றுப் பார்த்தான். 'நீயும் கவலைப்படாதே. உன் விஷயமும் குறைப் பிரசவமாயிடாது" என்றான். பிறகு ஒரு பெருமூச்சோடு "இந்த ஈடுபாட்டிலயும் தவிப்புலயும் பத்துலே ஒரு பங்கு பாடத்திலயும் இருந்தா, அரியர்ஸை முடிச்சு ஒரு வேலையில எப்பவோ சேந்திருப்பியேடா" என்றான்.

அறுபத்தொன்பதாவது ஆசார்யர்

"**நா**ன் இனிமேல் பாடசாலைக்குப் போக மாட்டேன்...! அழுது கொண்டே சொன்ன சிறுவன் சுப்ரமண்யனைப் பார்த்தார் மகாபெரியவர்.

"நீ இப்படிச் சொல்லலாமா! நல்ல



• விழா மேடையில்...

பிள்ளையாச்சே. நன்றாகப் படிப்பாயே..." என்றார் பெரியவர்.

திருவிடைமருதூர் வேத பாடசாலையில் பயின்று வந்த அந்தச் சிறுவன் தனக்கு ஏற்பட்ட அனுபவத்தைப் பெரியவரிடம் விவரித்தான்:

அன்று ஆசிரியர் வகுப்புக்கு வரவில்லை மாணவர்களிடையே ஏதோ வாக்குவாதம் ஏற்பட்டு சண்டையாக முற்றிவிட்டது. திடீரென்று ஆசிரியர் வந்து சேர்ந்தார். எல்லாப் பிள்ளைகளும் ஓடிவிட, மாட்டிக் கொண்டான் சுப்ரமண்யன். முன்னுடைய குச்சியால் அவனை விளாசித் தள்ளிவிட்டார் ஆசிரியர். சிறுவன் அழுது கொண்டே வீடு சென்று அப்பாவிடம் புகார் செய்தான். 'நீ தப்பு செய்திராவிட்டால் நிச்சயம் அடித்திருக்க மாட்டார். அடிக்கிற அளவுக்கு ஏதோ செய்திருக்கிறாய்" என்று கூறிவிட்டார். அப்பா, மறுநாள், தாய்மாமனை அழைத்துக் கொண்டு போய் மகா பெரியவரிடம் புகார் செய்தபோதுதான் அவர் பரிவோடு விசாரித்து சமாதானப் படுத்தினார்.

இதற்கிடையே பாட சாலையில் சுப்ரமண்யனைக் காணோமே என்று கலங்கிப் போனார் அவனை அடித்த ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள். இவர் மகா பெரியவாளின் பூர்வாசிரம சகோதரர்.

பெரியவர் முகாமிட்டிருந்த விழுப்புரத்துக்கு ஓடினார் சாஸ்திரிகள். அங்கே பார்த்தால்,



சிறுவன் சுப்ரமண்யன் அழுது கொண்டு நிற்கிறான்!

"இவனை ஏன் அடித்தாய்? பீடத்துக்கு அடுத்த வாரிசாக இவனைத்தான் நியமிக்க

இருக்கிறேன்" என்றார் மகாபெரியவர்.

கற்றியிருந்தவர்களுக்கு இனிய ஆச்சர்யம். தமது உள்ளத்தில் இருந்த நீண்ட நாளைய திட்டத்தை அன்று வெளியிட்டிருந்தார் மகாபெரியவர்.

தஞ்சை மாவட்டம் இருள்நீக்கி கிராமம். அதில் மிராசுதாரர் ராம தீர்த்த சாஸ்திரி. அவர் தமது மகள் சரஸ்வதிக்கு வரன் தேடினார். மன்னார்குடியில் ரயில்வேயில் பணியாற்றிய மகாதேவ அய்யர் உகந்த வரன் என்று சொன்னார்கள். முதல் தாரத்தை இழந்து சிறு குழந்தையை வளர்க்க வகையறியாது மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார் அவர். எந்தத் தயக்கமும் இன்றி சரஸ்வதி அவரை மணக்கச் சம்மதித்தார். மகாதேவ அய்யர் சரஸ்வதி தம்பதிக்குப் பிறந்த மூத்த மகன்தான் சுப்ரமணியன். அவனுக்குப் பிறகு இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்தனர்.



• பொன் விழா நாயகன்



வைதீகமான குடும்பம். அடிக்கடி காஞ்சி மடம் சென்று மகா பெரியவர்களைத் தரிசிப்பார் மகாதேவ அய்யர். 'ஒரு ஆண் குழந்தைக்கு மேல் உள்ள குடும்பங்களிலிருந்து ஒரு பிள்ளையை வேத பாட சாலையில் பயிற்சி பெற அனுப்புங்கள்' என்று ஒரு முறை மகாபெரியவர் பேசக் கேட்டார். சுப்ரமண்யனை, திருவிடைமருதூர் வேத பாடசாலையில் சேர்த்தார்.

ரிக் வேதத்தை நன்கு கற்றுத் தேர்ந்தான் சுப்ரமண்யன். அவன் ருத்ரம், சமகம் சொல்லும் ஸ்பஷ்டமும் பாங்கும் ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளைக் கவர்ந்தன.

குறும்புக்குப் பெயர் போனவனாகவும் இருந்தான் சுப்ரமணியன். பதினெட்டாம் பெருக்கிற்குக் காவிரிக் கரையில் போய் நீராட வேண்டும் என்று கோரி சக மாணவர்களையும் உண்ணாவிரதமிருக்கத் தூண்டினான்.

திருவிடைமருதூரில் மகாபெரியவர் அடிக்கடி முகாமிடுவதுண்டு. சுப்ரமண்யனின் பேரில் அவர் பார்வை விழுந்தது. ஒரு முறை போதேந்திரர் சமாதிக்கு சுப்ரமண்யனையும் அழைத்துப் போனார் மகாபெரியவர். தோழமையோடு ஏதேதோ பேசி வந்தவர், 'என்னோடு வந்து விடுகிறாயா?' என்று கேட்க, 'இப்போது உங்களோடுதானே இருக்கிறேன்' என்று பதில் சொன்னான் சிறுவன்!

'நான் அதைச் சொல்லவில்லை. மடத்துக்கு வருகிறாயா? எனக்குப் பிறகு ஆசார்ய ஸ்தானம் ஏற்கிறாயா?' என்று அவர் கேட்க, "அப்பாவைக் கேட்டுச் சொல்கிறேன்" என்றான் சிறுவன்.

விஷயம் தெரிந்ததும் மகாதேவ அய்யர் ஒரு நிமிடம் கலங்கினார். பிறகு "பெரியவர்

அன்பால் வெற்றி கொள்வோம்!

— ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்

● ஒருவன் தனக்காகவும் தன் குடும்பத்துக்காகவும் மட்டும் கடவுளை வேண்டிக் கொள்ளக் கூடாது. உலக க்ஷேமத்துக்காகக் கண்டிப்பாக பிரார்த்தனை செய்ய வேண்டும். நம் சனாதன தர்மமும் அதைத் தான் சொல்கிறது. "சர்வே ஜனோ சுகினோபவந்து."

● ஒருவர் பொருளாதாரக் காரணங்களுக்காக மட்டுமே மதம் மாறுவாரேயானால், அதற்கும் கடவுளுக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. பொருளாதாரம் என்பது உடல் சம்பந்தப்பட்டது. (சுய) தர்மம் என்பது ஆத்மா சம்பந்தப்பட்டது.

● தாழ்த்தப்பட்டவர்கள் இந்து மக்களின் ஒரு பிரிவினர் தான் - ஆனால் சிலர் மித்ர பேதம் உண்டாக்கி நம்மைப் பிரிக்கப் பார்க்கிறார்கள். மூன்று ஆச்சார்யர்களான சங்கரர், மத்வர், ராமானுஜர் ஆகியோர் தாங்கள் வாழ்ந்த காலகட்டம் முழுவதும், இந்தப் பிரிவினரை மற்றவர்களுடன் இணைத்து, கலந்து வாழ வைக்கும் முயற்சிகளில் தான் ஈடுபட்டிருந்தார்கள்.

● பஸ் நிலையத்திலோ அல்லது ஒரு சினிமா தியேட்டரிலோ மக்கள் அசௌகரியத்துக்குள்ளாகிக் கஷ்டப்படுவதில்லையா? அதைச் சகித்துக் கொள்ளும் நாம், கோயில்களில் நமக்கேற்படும் சிரமங்களைப் பெரிய அளவில் எடுத்துக் கொள்ளக் கூடாது. கோயில் குருக்களும், பட்டர்களும், பூஜாரிகளும் மனிதர்கள்தான். அவர்களுடைய கஷ்டங்களைப் புரிந்து கொண்டு உதவினால் நமக்கும் திருப்தி உண்டாகும்.

● வரதட்சணைக் கொடுமை, இத்தனைப் பிரசாரங்களுக்கு அப்புறமும் சமுதாயத்தில் இருக்கத்தான் செய்கிறது. இதை ஒழிக்க பெண் சமுதாயத்தால் மட்டும் தான் முடியும். மகனுக்கு வரதட்சனை கேட்க முனையும் பெண்மணி, தனது பெற்றோர் கஷ்டப்பட்டதை ஒரு நிமிடம் எண்ணிப் பார்த்தாலே போதும்.

● நமக்குப் பிடித்திருந்தாலும் பிடிக்காவிட்டாலும் அரசு ஆணைக்கு அடங்கி நடக்க வேண்டும். மதிப்புக் கொடுத்து நடக்கும் அதே சமயத்தில், அந்த ஆணையில் உள்ள தீய அம்சங்களை அகற்றுவதற்கும் முயற்சி செய்ய வேண்டும்.

● இந்த உலகத்தில் யுத்தமும் ஆக்ரமிப்புகளும் வேண்டாம். அமைதியும் சமாதானமும் நிலவட்டும். அன்பால் அனைவரையும் வெற்றி கொள்வோம்.

சொல்லிட்டார், எங்க குடும்பத்துக்கே பெருமை" என்று சம்மதித்தார்.

இதற்கிடையே மகாதேவ அய்யருக்குத் திருச்சிக்கு மாற்றல் ஆயிற்று. சுப்ரமண்யன், திருவானைக்கோவில் வேத பாடசாலையில் பயிற்சியைத் தொடர்ந்தான். சக மாணாக்கர்களுடன் இனிமையாகப் பழகினான். 'கிங்கரன்', 'சங்கர கிங்கரன்' போன்ற புனை பெயர்களில் பத்திரிகைகளுக்குக் குட்டிக் கதை, துணுக்குகள் எழுதினான். சன்மானமாக வந்த பணத்தை தர்ம காரியங்களுக்குச் செலவழித்தான். பதினெட்டு வயதுவரை வேத -உபநிஷதங்கள் பயின்றான். ஆங்கிலத்தில் எழுதிப் பேசவும் பயிற்சி அளிக்கப்பட்டது.




• டாக்டர் சுதா சேஷய்யன்

1954-ஆம் ஆண்டு மார்ச் மாதத் துவக்கம். மகனை காஞ்சிக்கு அழைத்து வரும்படி மகாதேவ அய்யருக்குக் கடிதம் வந்தது.

தமக்குப் பிறகு பீடத்துக்கு வாரிசாக சுப்ரமண்யனை நியமிப்பதாக மகாபெரியவர் அறிவித்தார்.

• எஸ்.வி.சேகர்



மார்ச் 22ம் தேதியன்று காஞ்சிபுரம் ஸ்ரீ காமகோடி சங்கர மடத்தின் 69வது ஆசார்யராகப் பொறுப்பேற்றான் சுப்ரமண்யன். ஜெய வருஷத்தில் வாரிசாக நியமிக்கப்பட்டதால் ஜெயேந்திரர் என்ற

திருப்பெயரும் புதிதாகப் பொறுப்புக்கு வந்ததால் 'புதுப் பெரியவர்' என்ற அழைப்புப் பெயரும் அமைந்தன.

பட்டமேற்ற பதினைந்தாவது நாளே மடத்தின் முழுப் பொறுப்பையும் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளிடம் ஒப்படைத்து விட்டார் மகாபெரியவர்.

இன்று, ஐம்பதாண்டுகள் நிறைந்த நிலையில் பல சாதனைகளுக்கும் சேவைகளுக்கும் காரணகர்த்தாவாகி பீடாதிபதியாகத் தொடரும் அவரை வந்தனம் செய்வோம்.

— ப்ரியன்

பீடாரோஹண பொன் விழா

படங்கள்: சௌரா



• டி.எஸ்.ராகவன்



• ஏ.கே.மூர்த்தி

பக்தர்கள் பார்வையில்...

டாக்டர் சுதா சேஷய்யன்

மடத்துக்குப் போய் தரிசனம் செய்த பின் அங்கே வந்திருக்கும் புத்தகங்களை வாசிப்பதற்காகக் கேட்பேன். பெரியவர் உடனே நான்கைந்து நூல்களைக் கொண்டு கொடுத்துவிட்டு அவற்றைப் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பு தருவார். மறுமுறை செல்லும் போது புத்தகங்களைத் திருப்பித் தருவேன். அப்போது ஒரு சில கேள்விகள் கேட்டு, நாம் புத்தகங்களைப் படித்தோமா என்று சோதித்துப் பார்த்துவிடுவார்!

ஏ.கே.மூர்த்தி - மத்திய இணை அமைச்சர்:

அவர் செய்துள்ள மருத்துவ நலப் பணிகள் பிரமிக்க வைக்கின்றன. இன்று, நம் நாட்டின் வடகிழக்குப் பகுதிகளிலெல்லாம் சங்கர மடத்தின் மருத்துவ சேவை நடக்கிறது. இமயச் சாரலிலும் விரிவடைந்திருக்கிறது. எவ்வளவோ பயணம் செய்துள்ள பெரியவர் பீடம் ஏற்ற பிறகு ரயிலேறவில்லை என்பது வியப்பான செய்தி.

டி.எஸ்.ராகவன் - முன்னாள் தலைவர், இந்தியன் வங்கி:

மூன்று பெரியவர்களும் கர்னூலில் முகாமிட்டிருந்தார்கள். தம்மை வந்து சந்திக்கும்படி ஸ்ரீ ஜெயேந்திரர் எனக்குச் செய்தி அனுப்பினார். கல்கத்தாவிலிருந்து விமானம் மூலம் சென்றேன். கர்நூலை அடையும் போது பலத்த மழை. என்னைப் பார்த்ததும் "என்ன மெட்ராஸ் போகிற யோசனை இல்லையா?" என்றார் சுவாமிகள். தரிசனம் முடித்து நான் வீடு திரும்பியபோது செய்தி காத்திருந்தது: எனக்கு சென்னைக்கு மாற்றலாகியிருந்தது!

கக்கன் விஸ்வநாதன் (முன்னாள் அமைச்சர் கக்கனின் சகோதரர்):

குடியாத்தம் நகரில் தீண்டாமை ஒழிப்பு மாநாடு. ஸ்ரீ ஜெயேந்திரரும் பங்கேற்றார். மாநாடு முடிந்து ஒரு ஆதி திராவிடர் குடியிருப்புக்குள் சென்றோம். ஃபுல்லாகக் குடித்துவிட்டு வந்த ஒருவரைப் பார்த்து எனக்குக் கோபம் வர, கையை ஓங்கிவிட்டேன். உடனே பெரியவர் சைகையால் என்னைத் தடுத்து நிறுத்தினார். குடித்துவிட்டு வந்தவனை கருணையுடன் பார்த்தார். அவன் ஓரமாக ஒதுங்கி, அடங்கி உட்கார்ந்து விட்டான். எங்கள் சொந்த கிராமம் தும்பைப்பட்டி - அங்கு வீர காளியம்மன் கோயில் பூசாரி தீபாராதனை காட்டி விபூதி கொடுத்த போது அதைப் பெற்றுக் கொண்டு உடனே நெற்றியிலும் இட்டுக் கொண்டார்.

எஸ்.வி.சேகர்:

சகோதரர் தினகரன் ஒருமுறை பெரியவரைப் பார்த்துச் சில விளக்கங்கள் கேட்க விரும்பினார். ஆனால் அவரால் நீண்ட நேரம் நிற்கவோ தரையில் உட்காரவோ முடியாதபடி உடல்நலக் குறைவு. பெரியவரிடம் எடுத்துச் சொன்னேன். 'அதற்கென்ன, நாற்காலி போட்டு அவரை உட்கார வைத்து விட்டால் போயிற்று' என்று கூறி சந்திப்புக்கு நேரமும் ஒதுக்கித் தந்தார். சகோதரர் தினகரனின் கேள்விகளுக்குப் பதிலும் சொன்னார்.

— கௌசி

வட்டமேஜை

யோசிக்க வைத்த வைரம்!

✉ ருக்மிணி தேவியின் நூற்றாண்டையொட்டி சிறப்பிதழ் வெளியிட்ட பெருமையை, 'கல்கி' இதழ் செவ்வனே பெற்றிருப்பது பாராட்டுக்குரியது.
பெங்களூர் - 72, ப.மூர்த்தி

✉ 'அத்தை: ஓர் அழகிய சகாப்தம்' கட்டுரையில் வெளியான புகைப்படங்கள் காணக் கிடைக்காத பொக்கிஷம்!
மொரட்டுப்பாளையம், இரா.வி.சௌந்தர்யா

✉ நூறு வருட பிம்பத்தை கண் முன் காட்டியது இலவச இணைப்பு. ருக்மிணி தேவியின் வியத்தகு ஆடல்கள் - அபிலாஷைகள் அனைத்தும் அவரை ஓர் அழகிய சகாப்தமாக மட்டுமல்ல, அதிசய சகாப்தமாக நிலை நிறுத்தின.
காங்கயம், சேலம் செல்வக்குமார்









✉ "தர்மம் இருப்பதால்தான் அ.தி.மு.கவுக்கு வெற்றி கிடைக்கிறது" என்ற ஜெயலலிதாவின் பேச்சுக்கு 'தராசு' தந்த விளக்கம் ரொம்ப கரெக்ட்!
சென்னை - 5, கே. கணேசன்

✉ கல்லூரி (மாணவிகள்) ரோஜாக் கூட்டத்துடன் ரோஜாக் கூட்டம் ஸ்ரீகாந்த்தை சந்திக்க வைத்து அசத்தி விட்டீர்கள். கல்லூரி மாணவிகள் புரட்சி மணம் கமழ கேள்விப் பூக்களைத் தொடுத்து ஸ்ரீகாந்தை திணறடித்து விட்டார்கள். சுவையான சந்திப்பு!
அயன்புரம், த. சத்தியநாராயணன்

✉ புயல்வீசிய பட்டிமன்றம் படித்தேன். "'பெண் திருமணத்திற்காக மட்டுமே படைக்கப்படுகிறாள்' என்ற எண்ணம் சமூகத்திலிருந்து விலக வேண்டும்!" என்ற நடுவர் சுதா சேஷய்யனின் வைர வரி பல முறை யோசிக்க வைத்தது.
திருச்செங்கோடு - 11, டி.ஏ.சி. பிரகாஷ்

✉ கடல் கடந்து சாதனை புரியும் சோமலெ சோமசுந்தரம் தமிழ் வளர்ச்சிக்காகவும் பாடுபடுவது பெருமை சேர்க்கும் விஷயம்!
ஸ்ரீரங்கம், எஸ். கௌரிலக்ஷ்மி

✉ ஆதம்ஸ் பாலம், அனுமன் பாலம் என்றெல்லாம் சொன்னாலும் இரண்டுக்குமிடையே ஏதோ ஒன்று இருப்பது பெரிய ஆச்சரியம்தான்!
மயிலாடுதுறை, ஜெ. ரஜினி ராம்கி

✉ சரபேஸ்வர(ர்) மகிமை கட்டுரை அற்புதமாய் இருந்தது. மயிலை வெள்ளீஸ்வரர் கோவிலில் உறைந்திருப்பவரை இதுவரை மிஸ் செய்த நான், மற்றவர்களும் மிஸ் செய்யக் கூடாது என்பதற்காக எழுதுகிறேன்: சென்னை மாடம்பாக்கம் தேனு புரீஸ்வரர் ஆலயத்திலும், சென்னை கோயம்பேடு குறுங்காலீஸ்வரர் ஆலயத்திலும் மற்றும் மதுரை, சிதம்பரம், திரிசூலம் ஆகிய ஊர்களிலும் தூண்களில் ஆவாஹனம் செய்யப்பட்டுள்ளார் சரபேஸ்வரர் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.
சென்னை - 92, கிருஷ்ணராஜ் கோபால்





* பைனியல் விருத



வெளிச்சம் தந்த 'லைட்'

"என் அப்பாவுக்கு நான் ஓவியக் கல்லூரியில் சேர்ந்தது கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை. எனக்கோ ஓவியனாக வேண்டுமென்ற வெறி. முதல் வருடம் வைத்த பரீட்சையில் மூன்றாம் வகுப்பில் தான் தேர்வு பெற்றேன். 'ஏற்கெனவே ஆர்ட், அதிலும் தேர்ட் க்ளாஸா' என அப்பா இரைந்தார். ஆனால் விடா முயற்சியுடன் பிடிவாதத்துடன் ஓவியம் பயின்றேன். இந்தத் துறையில் பொறுமை தேவை. நம் அடையாளம் வெளி உலகுக்குத் தெரிய பல வருடங்கள் பிடிக்கும். சுமார் இருபது வருடங்களாக, தவம் மாதிரி ஓவியங்கள் வரைகிறேன். இப்போது நிஜமாகவே ஒரு திருப்தியும் சந்தோஷமும் கிட்டியிருக்கிறது" என்கிறார் பெங்களூரிலிருக்கும் முன்னணி ஓவியர் எம்.எஸ்.மூர்த்தி.

மூர்த்தி சந்தோஷப்படுவதற்குக் காரணம் இருக்கிறது. மிகச் சமீபத்தில், இவரது ஓவியப் படைப்பான 'தி லைட்' சர்வதேச பைனியல் (BIENNIAL) விருது பெற்றிருக்கிறது. இரான் அரசின் அகாடமி ஆஃப் ஆர்ட் உலகெங்கிலுமுள்ள ஆர்ட்டிஸ்ட்களுக்குப் போட்டி வைத்திருந்தது. சுமார் இருபத்து மூன்று நாடுகளிலிருந்து ஓவியர்கள் பங்கு பெற்றதில் மூர்த்தியின் 'லைட்' வெற்றி பெற்று, அவரை வெளிச்சம் போட்டுக் காண்பித்திருக்கிறது.

மூர்த்திக்குப் பல கீர்த்திகள். ஓவியர், சிற்பி, கவிஞர், பத்திரிகையாளர், ஹிந்துஸ்தானி இசைப்பாடகர், சிதார் கலைஞர் என பன்முக மூர்த்தியாக இருக்கிறார்.

இரான் அரசு, மூர்த்தியை தன் நாட்டிற்கு வரச் சொல்லி அன்பு அழைப்பு விடுத்திருக்கிறது. பரிசுச் சான்றிதழும் கூடவே தரும்ஸ்டைலில் முப்பத்திரண்டு பொற்காசுகளும் (நமக்கில்ல, நமக்கில்ல, என சக ஓவியர்கள்!) ஆனால் மூர்த்தி போகப் போகவதில்லை.


"இத்தனைப் பெரிய விருதும் அங்கீகாரமும் பரிசும் கிடைத்திருக்கிறதே அப்பாவின் ரியாக்ஷன் என்ன?" என்று கேட்டால் "அவர் சமீபத்தில் தான் இறந்து போனார். 'காரியம்' பண்ணணும். அதனால்தான் இரான் போகவில்லை" என்றார்.

- லதா சேகர்

தகவல் : **சியாமளா நாராயண்**







யார் அந்த தாம்தூம் விஐபி!

ஒவ்வொரு குறிப்பும் உணர்த்தும் விடையை எதிரே உள்ள கோடுகளில் நிரப்புங்கள். வட்டத்துக்குள் உள்ள எழுத்துக்களை மட்டும் ஒழுங்குபடுத்தினால் விடைப் பகுதியில் உள்ள குறிப்பு உணர்த்துவது கிடைத்து விடும்.

1. பிரபல மிருதங்க வித்வான் சிவராமனின் முன் ஒட்டிக் கொண்டுள்ள ஊர் ○ _ _ _ _ _ _ ○

2. எலிசபெத் மூலம் தன் படத்தை ஆஸ்கார் பரிந்துரை வரை எட்டிய இயக்குநர் ○ _ _ _ _ _

3. பிரபல வயலின் கலைஞர் வைத்யநாதனின் முன் ஒட்டிக் கொண்டுள்ள ஊர் _ ○ _ _ _ _ _

4. மகாராஜபுரம் என்றதும் நினைவுக்கு வரும் கர்நாடக இசைக் கலைஞர் ○ _ _ _ _

5. நாகேஸ்வரராவ் முதல் ஷாருக்கான் வரை தாங்கிய வேடம் _ _ ○ _

இப்போதெல்லாம் தினமும் செய்திகளில் இடம் பெறும் வி.ஐ.பி

○ ○ ○ ○ ○ ○

- ஜி.எஸ்.எஸ்

விடைகள்:
1. உமையாள்புரம் 2. சேகர் கபூர்
3. குன்னக்குடி 4. சந்தானம்
5. தேவதாஸ்
'சதாம் உசேன்'

உங்களை அறிந்து கொள்ளுங்கள்

கோவிந்தன் திடீரென்று தன் வீட்டைக் காலி செய்ய வேண்டியிருந்தது. தான் கேள்விப் பட்ட வேறொரு வீட்டு உடைமையாளரிடம் போய், காலி யாக இருக்கும் அவுட்ஹவுஸில் குடியிருக்கச் சம்மதிக்கும்படி கேட்டுக் கொண்டார். உடைமையாளர் யோசித்தார். 'இவன் எப்படிப்பட்டவனோ? வாடகை ஒழுங்காகத் தருவானோ? இடத்தை எப்படி வைத்துக் கொள்ளுவானோ? நடத்தை எப்படியோ...? பிறகு, "சரி, அவுட்ஹவுஸ் கதவைத் திறக்கிறேன். பாருங்கள். ஏராளமான தட்டு முட்டுச் சாமான்களை, தேவை இல்லாமல் போட்டு அடைத்திருக்கிறேன். பார்த்து விட்டு, மாலை வந்து என்னைப் பாருங்கள்!" என்றார். கோவிந்தன் அவுட் ஹவுஸின் உள்ளே போனதும், உபயோகமில்லாத பொருட்களை எல்லாம் தரம் பிரித்து, வகைப் படுத்தி, காயலான் கடையில் போட வேண்டியதைப் போட்டு, ஒதுக்கிட வேண்டிய இரும்புச் சாமான்களைச் சீராக்கி, ஷெல்ஃப், மர பீரோ போன்றவற்றைத் தகுந்த இடத்தில் வைத்து, மாலையில் உடைமையாளர் வந்ததும் அவரிடம் கிடைத்த பணத்தைக் கொடுத்துவிட்டு அவர் பதிலை எதிர்பார்த்து நின்றார். கோவிந்தனுடைய திறமை, அக்கறை, பொறுப்புணர்ச்சி, நாணயம் எல்லாவற்றையும் கண்ட உடை மையாளர், அந்தச் சிறிய அவுட்ஹவுஸை அவருக்கு வாடகை இல்லாமலே வசித்து வர, மகிழ்ச்சியுடன் கொடுத்து விட்டார். கோவிந்தன் தன் திறமையை உணர்ந்திருந்தார். அவரால் அதை நிரூபிக்க முடிந்தது. தன்னைச் சரியாக எடை போட்டிருந்தார். தன்னுடைய குணத்தை வெளிப்படுத்துகிற மாதிரி நடந்து கொண்டார். தமது மதிப்பீடுகள் என்ன என்று காண்பித்து விட்டார்.

தன்னைத் தானே புரிந்து கொள்வது என்பது எளிதல்ல. அப்படிப் புரிந்து கொள்ள முயலுவது சுவாரசியமானது அல்ல! ஆனால் ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் அது முக்கியமான அம்சம். நம் எதிர்காலத்தைத் திட்டமிடவும், நமக்கு ஏற்றதைத் தேர்வு செய்யவும், எதிர்காலச் சந்தர்ப்ப சூழ்நிலைகளில் நாம் எப்படி நடந்து கொள்ளுவோம்



"கார்த்தாலேர்ந்து.. ஹச்சு.. ஒரே ஹச்சு.. அடுக்குத் தும்மலா ..ஹச்சு.. இருக்குப்பா.."
"ஆபீஸுக்கு வந்ததும் வராததுமா மானேஜர் ரூம்ல போய் நிக்காதே, அவர் பொடி வைச்சுத்தான் பேசுவார்னு சொன்னேனே, கேட்டியா!"

- ஒழுவெட்டி பாரதி பிரியன்



• படம்: டிஜிட்டல் சண்முகம்

ஏறு-நூறு 6

ஆர். கண்ணன்

என்பதை எதிர்நோக்கிச் செயல்படும் குணமும், நமக்கு இருக்க வேண்டும். இதுவே நம்மைப் பற்றி நாமே அறிந்து கொள்ள உதவும் பிராக்டிகல் வழிகாட்டி. நம்மைப் பற்றி நாமே கற்பனையாக ஏதேதோ நினைத்துக் கொண்டிருப்பது நிச்சயம் உதவாது!

உங்களுக்கு எது தேவை என்று துல்லியமாக அறிய, உங்களை நீங்கள் நன்றாகப் புரிந்து கொண்டிருக்க வேண்டும்.

'அட, எனக்கே என்னைத் தெரியாதா!' என்று நினைக்க வேண்டாம். கேரியர் பிளானிங்கில் உங்களையே எடை போட்டும் பார்த்துக் கொள்ளுவது முக்கிய அம்சமாகக் கருதப்படுகிறது. உங்களை நீங்களே சரியாக எடை போட்டிருந்தால், அதுவே உங்கள் கேரியரைத் தேர்ந்தெடுக்க உதவும் முதல்படியாக அமையும். நம்மை அறியாமல் நமக்குள்ளே மறைந்து கிடக்கும் எண்ணங்களையும், கருத்துக்களையும் அப்போதுதான் அறிய வாய்ப்புக் கிடைக்கிறது. பெரும்பாலும், நம்மை நாமே எடை போடும்போது, சில உண்மைகள் தெரிய வரும் என்பது பெரிதல்ல, செயல்படத் தூண்டும் வகையில் சில சிந்தனைகளைச் செய்ய அது வாய்ப்பு அளிக்கிறது என்பதே முக்கியம்.

நாம் அடிக்கடி 'இப்படிச் செய்ய வேண்டும், அப்படிச் செய்ய வேண்டும்' என்று நினைத்துக் கொண்டிருப்போமே தவிர, செயல்படத் தூண்டக்கூடிய அளவுக்கு அவற்றை உருவாக்கி, அதற்கான சிந்தனையைச் செய்ய முடிவதில்லை. நாம் எப்போதுமே வருங்காலத்தைப் பற்றிச் சில நம்பிக்கைகளையும், எண்ணங்களையும் சுமந்து கொண்டுதான் இருக்கிறோம். ஆனால் அவற்றை முறைப்படுத்தி, ஒரு டயரியில் குறித்து வைத்து, அதன்படி செயல்படுகிறோமா? இல்லையே! அவற்றை



''நீங்க நடிச்ச சீரியலைப் பார்த்து நீங்களே அழறீங்களே...ஏன்?''

''சம்பளப் பாக்கியை நினைச்சுக் கிட்டேன்!''

- அம்பை தேவா

எப்போது நாம் சிந்தித்து ஒரு செயல் வடிவம் கொடுக்கிறோமோ, அப்போதுதான் அவற்றைச் செய்து காட்ட முடிகிறது.

என்னைப் பற்றி நான் என்ன தெரிந்து கொள்ள வேண்டும்?

இந்த எளிதான நான்கு கேள்விகளை உங்களையே கேட்டுக் கொள்ளுங்கள்:

● எதை நான் மகிழ்ச்சியுடன் விரும்பிச் செய்கிறேன்?

- இதில் உங்கள் அக்கறை, விருப்பம் தெரிய வரும்.

● எதையெதை நான் சிறப்பாகச் செய்வேன்?

- இதில் உங்கள் திறனும், சாமர்த்தியமும் வெளிப்படும்

● என்னை எப்படி வர்ணிப்பது? என் தனிப்பட்ட குணாதிசயங்கள் என்ன?

- இதில் உங்கள் பெர்சனாலிடி ஆளுமை - தெரிந்துவிடும்.

● எதை எல்லாம் நான் மதிக்கிறேன்.

- இதில் உங்கள் மதிப்பீடுகள் வெளிப்பட்டு விடும்.

முதலில் அக்கறையை எடுத்துக் கொள்ளுவோம். ஒருவரது கேரியரைத் தேர்ந்தெடுக்கும்போது, இந்த அம்சத்துக்குத்தான் அதிக பட்ச இடம் தர வேண்டும். மன இயல் அறிஞர்கள் பல ஆராய்ச்சிகளுக்குப் பின் ஒரு முக்கிய விஷயத்தைக் கண்டறிந்திருக்கிறார்கள். 'ஒரு தனிப்பட்ட நபரின் ஆளுமையில், அவர் விருப்பம் காண்பிக்கும் அம்சங்கள் நீண்ட காலத்துக்கு மாற்றம் ஏதும் இல்லாமல் அப்படியே இருக்கின்றன'.

உங்கள் எதிர்காலத்தில் பெரும் பகுதியை நீங்கள் உங்கள் கேரியரில்தான் செலவிடப் போகிறீர்கள். அப்படி இருக்கையில், நீங்கள் விரும்பி நேசிக்கிற கேரியரைத் தேர்ந்தெடுப்பதுதான் புத்திசாலித்தனமாக இருக்கும். ஒரு புதிய வேலையில் சேருவது அப்போதைக்குப் புதுமையான உணர்வு தரலாம். ஆனால் அது கொஞ்ச நாளைக்குத்தான் இருக்கும். அப்புறம் அந்த வேலையில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளும் அளவுக்கு, அந்த வேலையில் உள்ள பிற அம்சங்களே நீங்கள் அந்த வேலையில் தொடர்ந்து இருப்பீர்களா மாட்டீர்களா என்பதை நிச்சயிக்கும்.

'எனக்கு அக்கறை இருக்கிற வேலைக்கான திறமை என்னிடம் இல்லையே?' என்ற கேள்வி எழலாம். அக்கறையும், ஆசையும் திறமைக்குச் சம்பந்தமில்லாமல் இருந்தாலும், ஆசை இருக்கிற பட்சத்தில், அதற்கான திறமைகளை வளர்த்துக் கொள்ள அதிக காலம் பிடிக்காது. பல உண்மைச் சம்பவங்கள் இதை நிரூபித்திருக்கின்றன. நீங்கள் எதையாவது செய்ய வேண்டும் என்ற துடிப்பு உங்களுக்குள் இருந்தால், நீங்கள் உண்மையிலேயே அதற்கான நேரத்தை ஒதுக்கி, அதைச் செயல்படுத்த, இயற்கையாகவே ஓர் உந்துதல் உங்களுக்குள் பிறக்கும். நீங்கள் எந்தப் பணியை அதிகம் விரும்பி நேசிக்கிறீர்களோ, அதையும் உங்கள் திறமையையும் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள். உங்கள் கேரியரைத் தேர்ந்தெடுக்க அது நிச்சயம் உதவும்.

அக்கறையும் விருப்பமும் மட்டுமே கேரியரைத் தீர்மானிக்கப் போதா. அவற்றோடு உங்கள் திறனும் சேர வேண்டும். எந்தெந்த வேலைகளில் நீங்கள் கெட்டிக்காரராக இருக்கிறீர்கள் என்பதும், ஹாபி போன்ற பொழுதுபோக்கு அம்சங்களில் திறமை இருக்கிறதா என்பதையும் நினைத்துப் பாருங்கள். உங்கள் பணியோடு இவற்றை இணைக்கும் ஒரு மெல்லிய சரடு இருப்பதை உணர்வீர்கள்.

(அடுத்த வாரம்: வெளியே இருக்கும் வேலைகள் உலகம்)

உங்கள் கேள்விகளையும், சந்தேகங்களையும் kalki@careersindia.comக்கு அனுப்புங்கள்.

படம்: யோகா

AJANTHA SCHOOL OF ARTS

No. 6, M.M. Muthu Nagar, (Near Sundar Thirumana Mandapam) Poonamallee, Chennai - 600 056. *Ph : 044 - 26490363*


தபால் மூலம்
ஓவிய ஆசிரியர் பயிற்சி

வீடு தேடி வரும் வசந்தம்

வரும் நவம்பரில் தமிழ்நாடு அரசுத் தொழில் நுட்பத்தேர்வு (Free hand Outline and Model Drawing - Higher Grade) எழுதி நீங்களும் ஓவிய ஆசிரியர் ஆகலாம். அரசு மற்றும் தனியார், உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றலாம். அடிப்படைச் சம்பளம் ரூ. 4500/- இதர படிகள் சேர்த்து ரூ.7000/- வரை மாதச் சம்பளம். கல்வித் தகுதி SSLC, +2 தேறிய, தவறிய ஆண்களும், பெண்களும். நேர்முகப் பயிற்சியும் உண்டு.

உங்கள் முகவரியை ஒரு தபால்கார்டில் எழுதி அனுப்புங்கள். அல்லது தொலைபேசியில் தெரிவியுங்கள்.

இலவச விவரப்புத்தகம் உங்கள் வீடுதேடி வரும்.



வேத சாஸ்திர ரக்ஷணத்திற்கு ஓர் வேண்டுகோள்.

அத்வைத வித்யாசார்ய மஹாராஜா ஸாஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்யஸ்மரண ஸமிதி (Regd)
89, (பு.எண் 42) காமாக்ஷி ஜோஸியர் தெரு, கும்பகோணம்-612 001.

☎ : (0435)
Off : 425948
Fax : 423777
Patasala : 422866

E-mail : vedagdps@sancharnet.in - Website : www.geocities.com/gdpskmu

"வேதாத்யயனம் செய்யும் பாக்யமில்லாதவர்கள், வேதாத்யயனம் செய்துவரும் குழந்தைகளை போஷித்து ரக்ஷிப்பதன் மூலம் ஓரளவாவது தனது கடமையை நிறைவேற்ற முடியும். ஒரு வேதக் குழந்தையின் படிப்பு, பராமரிப்பு செலவை ஒரு குடும்பம் எடுத்துக்கொண்டால், பேருபகாரமாக இருக்ககும்" என்று காஞ்சி ஸ்ரீ மஹாஸ்வாமிகள் உபதேசித்துள்ளார்கள். அவரின் மூதாதயர்களான ஸ்ரீ நாகமாம்பா ஸமேத பகவான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் அவர்களால் கி.பி. 1542-ல் ஸ்தாபிக்கப்பட்டு தொடர்ந்து 460 ஆண்டுகளாக நடந்துவரும் ராஜா வேத காவ்ய பாடசாலையை மேற்படி ஸமிதியானது தாய்போல் இயங்கி காப்பாற்றி வருகிறது. தற்பொழுது 120 மாணவர்களுக்கு 12 வேத, சாஸ்திர அத்யாபகர்கள், புராதனமான குருகுல முறைப்படி ரிக் வேதம், கிருஷ்ண, சுக்ல யஜுர் வேதம், ஸாம வேதத்தை போதித்து வருகிறார்கள். இப்புனித பாடசாலையை ரக்ஷிக்க கீழ்கண்ட திட்டங்களில் அனைவரும் பங்குகொண்டு ஸ்ரீ வேத மாதாவின் அனுக்ரஹத்தால் ஸகல ஸ்ரேயஸ்களையும் அடைய வேண்டுகிறோம். *புதிய பாடசாலை கட்டிட நிர்மாணப்பணி துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. நன்கொடை வரவேற்கப்படுகிறது.*

தங்கள் நன்கொடைக்கு U/S 80-G பிரிவின்படி வருமான வரி விலக்கு உண்டு திட்ட விபரங்கள்	ஒரு முறைக்கான நன்கொடை தொகை (One Time)	நிரந்தர வைப்பு நிதி 'Corpus Fund'
ஒரு வேளை ஸமாராதனைக்கு (பகுதி தொகை)	Rs. 500	Rs. 5000
அமாவாஸ்யை (or) பௌர்ணமி (or) க்ருஷ்ண (or) சுக்ல பக்ஷ த்வாதசி ஸமாராதனைக்கு (Please choose one specific (the above said) day of a particular month in a year for Samaradhana)	Rs. 1,500	Rs.15,000
ஒரு வேதம் பயிலும் மாணவனின் பராமரிப்பு ஒரு மாத செலவு ரூ.1000/-	Rs. 12,000 P.A	Rs. 1 Lakh

Cross செய்யப்பட்ட D.D.-ஐ A.V.M.S.G.D.P.S. Samithi என்ற பெயரில் அனுப்பக் கோருகிறோம்.



ராதிகா ரொம்ப எச்சரிக்கையான சித்திதான்!

சன் டீ.வியில் 'அண்ணாமலை' தரிசனத்துக்கு, அடிக்ட் ஆகிப் போன விசுவாசமிக்க நேயர்கள், அடுத்த அரை மணிநேரத்துக்கு மற்ற சேனல்களுக்குத் தாவி விடும் அபாயம் இருப்பதை உணர்ந்தோ என்னவோ, அடுத்த ஸ்லாட்டையும் நைஸாக வளைத்துப் போட்டு 'உதயம்' ஆரம்பித்து விட்டார்.



'உதயம்' மெகா சீரியலின் இயக்குநர் தேவேந்திரன். கதை, திரைக்கதை, வசனம் பாம்பே சாணக்யா. 'காதல் பகடை', 'பிரேமி', 'ஜன்னல்' என்று மின்பிம்பங்களின் ஆஸ்தான எழுத்தாளராக இருந்தவர், சின்ன மாறுதலுக்காக கேம்பஸ் மாறியிருக்கிறார்.

"ஒரே அழுகையும், மாமியார் மருமகள் சவடாலுமாக, பர்டிக்குலர் பேட்டர்ன்லேயே போய்க் கொண்டிருக்கிறது டீ.வி. தொடர்கள். அதைக் கொஞ்சம் மாற்றியிருக்கிறோம். மூன்று குடும்பங்களின் கதையைப் பின்னியிருக்கும் லாகவத்தில் ஒரு புதுமை தெரியும். குறிப்பாக, பூவிலங்கு மோகன் - ரேணுகா - ஷர்மிளா சம்பந்தப்பட்ட கதை ஓட்டத்தில் வித்தியாசமான அணுகுமுறை இருக்கும்'' என்றார் பாம்பே சாணக்யா.

ஆனால் கதையைக் கேட்டால் அப்படித் தெரியவில்லை. நாசூக்காக மூக்கு உறிஞ்சும் சப்தமும், அதைத் தொடர்ந்து சில 'ச்சொ...ச்சொ'க்களும் கலந்த அனுதாப அலைகளை, பெண்களிடையே உருவாக்கும் போலத்தான் தெரிகிறது.

பூவிலங்கு மோகனின் மனைவி ரேணுகா. கர்நாடகப் பாடகியான இவர் இறந்து விட்டதாக நம்பி, முறைப் பெண்ணான ஷர்மிளாவை மறுமணம் செய்து கொள்கிறார் பூவிலங்கு மோகன். மெகா சீரியலாச்சே! நாட்கள் நடந்தோடுகின்றன. ஒரு கால கட்டத்தில், முதல் மனைவி, கணவனிடமே

''படம் முடியப் போகுது'னு எப்படிச் சொல்றீங்க?''
''இவ்வளவு நேரம் மாடர்ன் உடையில் வந்த கதாநாயகி புடவை கட்டி வருகிறாளே, அதான்!''
— எஸ். ஏ. தாஹிர்









• ரேணுகா

உஷார் ராதிகா!

வந்து சேர்கிறார். அதுவும் எப்படி? அம்னீஷியாவால் பாதிக்கப்பட்டு, பழசெல்லாம் மறந்துவிட்ட நிலையில்...

ஷர்மிளாவுக்கு டென்ஷனாகி விடுகிறது. ஏற்கெனவே ரொம்ப பொஸஸிவ் டைப் வேறு... ரேணுகாவை, வேலைக்காரியைவிட கேவலமாக நடத்தத் தொடங்குகிறார். என்ன தான் படுத்தினாலும், ரேணுகா முகம் சுளிக்காமல், அன்பு காட்டுகிறார். ரேணுகா - ஷர்மிளா உறவு பற்றித் தெரியாமலே குழந்தைகள், பாசம் காட்டிப் பழகுகின்றன... இப்படிப் போகிறதாம் கதை!

"பேருக்காக 'க்ரியேடிவ் ஹெட்'என்று டைட்டிலில் போட்டுக் கொண்டு விட்டு, ஷூட்டிங் பக்கமே தலை வைத்துப் படுக்காதவர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். ஆனால் ராதிகா அப்படியல்ல. டிஸ்கஷனிலிருந்து, ப்ரோமோ வரை ஈடுபாட்டுடன் உழைக்கிறார். நிறைய யோசனைகள் தருகிறார்" என்று உதயபூர்வமாகப் புகழ்ந்தார் பாம்பே சாணக்யா.

பாப்கார்ன் இயந்திரத்திலிட்ட சோளம் போல படபடவென்று பேசும் ரேணுகாவுக்கு இதில் மென்மையான வேடம்!

சகுனி மாமாவின் லேட்டஸ்ட் குளோனிங் போன்ற வேடங்களிலேயே பழகிவிட்டவாசு விக்ரமுக்கு, மகா உத்தம வேஷம்! பெயரும் தர்மராஜன்.

'ஜென்டில்மேன்' அஜய்ரத்னம் இதில் டபுள் கேம் ஆசாமி!

அப்புறம் இன்னொரு சங்கதியும் காற்று வாக்கில்... ரேணுகாவின் பெயர் சிந்து; ஷர்மிளாவின் பெயர் பைரவி என்பதால் 'சிந்து பைரவி' என்று பெயர் வைக்க இருந்தார்களாம். அதே பெயரில் இன்னொரு சீரியல் வெளிவரவிருப்பது தெரியவந்ததும், உஷாராகி 'உதயம்' ஆக்கிவிட்டாராம் ராதிகா.

அட! ஆரம்ப வரியை வைத்தே கட்டுரையை முடிக்கலாம் போலிருக்கிறதே!

பேட்டி: அனு

கலாம் மொழிகள் - ரெங்கநாயகி பதிப்பக ஆசிரியர் குழு



கல்வி, அறிவு, அனுபவம், வளர்த்துக் கொண்ட திறமை, இவற்றால் பாரத ரத்னா, பத்மபூஷண் விருதுகளைப் பெற்று, இன்று நாட்டின் முதல் குடிமகனாக உயர்ந்திருக்கும் அப்துல் கலாமின் சிந்தனைகள், கருத்துகள், அறிவுரைகளின் தொகுப்பு. மாணவ சமுதாயத்திற்கு உதவும் கடின உழைப்பின் கருவூலப் பெட்டகம். நூலின் மதிப்பும் பதிப்பும் உயர் தரம்.

ரெங்கநாயகி பதிப்பகம், 81/47, ஆற்காடு சாலை, சென்னை-600 024. விலை ரூ.35/-

கணினி கலைச் சொற்கள் - மா. ஆண்டோ பீட்டர்



தமிழில் தொழிற்கல்வி குறித்து, அதிலும் கணினி இயல் குறித்த கலைச் சொற்கள் பெருக வேண்டுமென்பது தமிழறிஞர்களின் நீண்ட கால முயற்சி. அந்த முயற்சியில் இந்நூல் ஒரு மைல் கல் எனலாம். இணைய தளங்கள் அமைக்கவும், புதுப்புது கலைச் சொற்களை அறியவும் கணினி இயலை தமிழில் கற்பவருக்குப் பெரிதும் உதவும்.

கற்பகம் புத்தகாலயம், 50/18, ராஜா பாதர் தெரு, தி.நகர், சென்னை - 600 017. விலை ரூ.65/-


சங்கீத ரத்ன மாலா - பால பாடங்கள் - கே. ரமேஷ்



ஸாம வேதத்தின் உப வேதமே சங்கீதம். ஸங்கீதத்தின் அடிப்படைப் பாடங்களைத் தொகுத்து ஸரளி, ஜண்டை, தாட்டு வரிசைகளும் அலங்காரமும் மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளன. சங்கீதம் பயில்வோருக்கும், ஆசிரியர்களுக்கும் பயனுள்ள நூல். தமிழில் சங்கீதம் போதிக்கும் இந்நூலில் தமிழ்க் கீதங்களையும் சேர்த்தளித்திருக்கலாம்.

அகஸ்தியர் பதிப்பகம், 9-ஏ, கிளைவ்ஸ் பில்டிங், 33, நந்திகோவில் தெரு, தெப்பக்குளம், திருச்சி - 620 002. விலை ரூ.35/-.

உயரங்களின் ரசிகன் - ரமேஷ் வைத்யா



நோக்கமற்று எழுதிய கவிதைகள் என்று கூறினாலும் உணர்ச்சிகளின் கோவையை வார்த்தைகளில் செதுக்கியிருக்கும் விதம் ரசிக்க வைக்கிறது. அர்த்தமுள்ள, அர்த்தமற்ற, இயல்பான, எளிமையான ரசனைகளில் வடித்த கவிதைகளின் தொகுப்பு.

மதி நிலையம், 4 (39) தணிகாசலம் தெரு, தி.நகர், சென்னை - 600 017. விலை ரூ.25/-

சிபிகள் - மேலாண்மை பொன்னுச்சாமி



மனித நேயமும் அன்பும் நிறைந்து கிடக்கும் ஒரு மனத்திலிருந்துதான் இத்தகைய எழுத்து வெளிவர இயலும். உடன் வாழ்கிற எளிய கிராம மக்களின் வாழ்க்கையை, அவர்கள் சந்திக்கும் யதார்த்த அவலங்களை, வெகு உருக்கமாக, உருகிப் போய் வடித்திருக்கும் தொகுப்பு.

கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை-17. விலை ரூ.30/-

டால்ஸ்டாய் - மெர்வின்



உலகப் புகழ் பெற்ற ரஷ்ய எழுத்தாளர் லியோ டால்ஸ்டாயின் வாழ்க்கை வரலாறு. நல்லவற்றிலும் அல்லவற்றிலும் அடிபட்டு, அனுபவித்து, பண்பட்ட ஒரு மாமனிதரின் வாழ்வை, அவர் சாதித்தவற்றை, சாதிக்க உதவிய சந்தர்ப்பங்களை, படித்துப் பயன்பெற வடித்த நூல்.

சுவாமிமலை பதிப்பகம், 3, முத்து கிருஷ்ணன் தெரு, தி.நகர், சென்னை - 600 017. விலை ரூ.40/-.

சீனா: புதிய தலைவர்கள்: புதிய பொறுப்புகள்!

சீனாவின் ஆறாவது குடியரசுத் தலைவராக ஹூ ஜிண்டாவ் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இதுவரை தலைவராக இருந்த ஜியாங் ஜெமின் கீழ் இவர் துணைத் தலைவராக இருந்து வந்தார்.

தேசிய மக்கள் காங்கிரஸ் எனப்படும் சீன நாடாளுமன்ற உறுப்பினர்கள் மின்னணு வோட்டுப் பதிவு இயந்திரம் மூலம் இவரைத் தேர்ந்தெடுத்தனர். வெகு சிலரே இவருக்கு எதிராக வோட்டளித்தனர்.

இவரைத் தொடர்ந்து, பிரதமராக இருந்த ஜூ ரோங்ஜியின் பதவிக்கு வென் ஜியாபோ தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

இந்த மாற்றங்கள் அதிரடியாக இல்லாமல் அமைதியாக நிகழ்ந்திருக்கின்றன. சென்ற நவம்பர் மாதம் நடந்த பதினாறாவது கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவை ஒட்டியே இந்த மாற்றங்கள்.



• வென் ஜியாபோ



• ஹூ ஜிண்டாவ்

“இதுவரை பிரதமராக இருந்த ஜூ ரோங்ஜியும் தலைவராக இருந்த ஜியாஸ் ஜெமினும்தாம் சந்தைப் பொருளாதாரம் சார்ந்த சோஷலிஸ அமைப்பு சீனாவில் உருவாகக் காரணம்” என்கிறார் சீனாவில் பல வருடங்களாக வசித்து வரும் தொழில்துறை ஆலோசகர் ‘கோபி’ கோபாலன்.

“புதிய தலைவர்கள் ஹூ ஜிண்டாவ், வென் ஜியாபோ இருவருமே பொறியியல் நிபுணர்கள். எனவே தொழில் துறை வளர்ச்சியில் சீனா அதிக அக்கறை காண்பிக்க வாய்ப்புகள் இன்னும் பெருகும்!” என்கிறார் ‘கோபி’ கோபாலன். “தலைவர் ஹூவுக்கும், பிரதமர் வென்னிக்கும் சீனாவின் பொருளாதாரத்தைத் தொடர்ந்து மேம்படுத்தும் பொறுப்பு இருக்கிறது. அதனால் இதுவரை இருந்து வந்த தலைமை, தனியார் துறை வளர்ச்சிக்குக் கொடுத்து வந்த முக்கியத்துவத்தைத் தொடர்ந்து அளித்து வரும். அப்போதுதான் சர்வதேச அளவில் தொழில் துறையிலும், பொருளாதார முன்னேற்றத்திலும் அவர்களால் போட்டியிட முடியும்!” என்கிறார்.

புதிய தலைவரும் பிரதமரும், தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் பொருளாதாரக் கொள்கைகளால் ஏற்பட்டிருக்கும் பாதிப்பை ஈடுகட்ட, புதிய சமூகப் பாதுகாப்புத் திட்டம் ஒன்றை அறிவித்திருக்கிறார்கள்.

“நாட்டின் பொருளாதார சீர்திருத்தத்தைக் கைவிட்டு விடாமல், அதேசமயம் பெரும்பான்மை மக்களை அதிருப்திக்கு உள்ளாக்காமல் செயல்படுத்துவதில் நான்காம் தலைமுறையைச் சேர்ந்த இந்தப் புதிய தலைவர்கள் இருவருக்குமே இருக்கும் அக்கறை குறிப்பிடத்தக்கது!” என்கிறார் கோபாலன்.

வென் ஜியாபோ சீன கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலாளராகவும் செயல்படுவார்.

நாட்டின் தலைவராக இதுவரை பதவி வகித்த ஜியாஸ் ஜெமின், தலைவர் பதவியில் இல்லாவிட்டாலும், இராணுவ விவகாரப் பொறுப்பில் தொடர்ந்து தலைமை வகிப்பார். அத்துடன், சர்வதேச விவகாரங்களிலும் இவர் சிந்தனைகளுக்கும் கருத்துக்குமே மதிப்புத் தரப்படுமாம்.

\- சித்தார்த்

'**ஹா**லிடே ஆடுதுறை' என்று ஆங்கிலத்தில் இருந்ததை ஆர்த்தியும், அதிதியும் அமெரிக்க உச்சரிப்பில் வழவழ வென்றும், கோணா மாணா என்றும் இழுத்துப் படித்தனர்; சிரித்தனர்.

'காண்ட் யு ஸே ஆடுதுறை?' என்றான் வினய். அவன் பேச்சிலேயே அமெரிக்க ஆங்கில மணம் வீசியது.

'நோ...'இட்ஸ்' டிஃபிகல்ட்...' என்றனர் பெண்கள் இருவரும். வினய் அருகில் ஃடிதாரில் அமர்ந்திருந்த மனைவி ஸ்மிதாவை யும், வாளிப்பாக இருக்கும் தனது பதினான்கு, பத்து வயது பெண்களையும் பெருமை பொங்கப் பார்த்தான்.

அவர்கள் சென்று கொண்டிருந்த 'க்வாலிஸ்' கார் வெளியில் உள்ள தமிழ்நாட்டின் புழுதியை உள்ளே செலுத்தா வண்ணம்

நாமும் ஒரு கனவோ!

'ஏர்கண்டிஷன்' செய்யப்பட்டிருந்தது. அமெரிக்காவிலிருந்து விடுமுறைக்கு இந்தியா வந்து செல்லும் பல 'இங்கு வாழா இந்தியர்' களின் குடும்பங்களில் ஒன்று வினய்யுடையது. வினய்யின் அப்பாவே தில்லி வாசி. வினய்யின் தாத்தாதான் தமிழ் நாட்டுக்காரர். வினய்யின் தமிழ்நாட்டுப் பரிச்சயம் கூட மிகக் கொஞ்சம்தான். அவனுக்கே தமிழ் கொஞ்சமாகத்தான் பேச வரும். ஏனெனில் அவன் அம்மா மராத்தி. ஏதோ பத்து வயதில் பெற்றோருடன் தாத்தா வீடு என்று கும்பகோணத்திற்கு அருகே ஒரு முறை வந்து கோவில்களைச் சுற்றி விட்டுப் போனான். அவனுக்கு தாத்தா – பாட்டி என்றால் அதிகம் தெரிந்தது மராத்தி அம்மா ரஜனியின் பெற்றோர்தான். இந்த அப்பா வழி தாத்தாவும் பாட்டியும் அவனைப் பொறுத்தவரை வேறு உலகப் பிரஜைகள். தாத்தா சிவப்பாகப் பளபளவென்று வேஷ்டி கட்டிக் கொண்டு, விபூதி பூசிக் கொண்டு, கர்நாடக மாக இருப்பார். பாட்டியும் அப்படித்தான். பாட்டி கட்டி யிருக்கும் புடைவையே குழப்பமாக இருக்கும். கொஞ்சம் பெரியவனான போதுதான் தெரிந்தது வினய்க்கு, தன் தந்தை அவர் அப்பாவின் விருப்பத்திற்கு மாறாகக் காதல் கல்யாணம் செய்து கொண்டவர் என்று.

எப்படியோ கிராமத்தில் இருந்த அவர்களும் தில்லி

''நாளைக்கு எங்க அம்மா ஊர்லேர்ந்து வராங்க விமலா!''

''நேற்றே சொல்லித் தொலைச்சிருந்தா வேலைக்காரிக்கு லீவு கொடுத்து அனுப்பி இருப்பேன்ல!''

– மதுரை ஆர்.திருமால்





வந்ததில்லை. அப்பா ராமகிருஷ்ணனும் தமிழ்நாட்டு மண்ணை ரொம்பவும் மதிக்கவுமில்லை, மிதிக்கவுமில்லை.

தில்லியில் வளர்ந்து பிலானியில் இஞ்சினீயரிங் பயின்று, ஹ்யூஸ்டனில் மேற்படிப்புப் படித்து, இப்போது நியூ ஜெர்ஸியில் பணி புரிகிறான் வினய். அவன் மனைவி ஸ்மிதாவுக்கு முன்னோர் கேரளத்தைச் சேர்ந்தவர்களாம். ஆர்த்தி, அதிதி இருவரும் அமெரிக்காவில் பிறந்த குழந்தைகளே. வினய்யின் பெற்றோர் விமான விபத்து ஒன்றில் அகால மரணம் அடைந்ததும் இந்தியாவுக்கு வரும் தேவையே இல்லாமல் போனது. 'பாம்பாட்டிகளின் நாடு, பஞ்சப் பிரதேசம், யானைகள் உள்ள காடு' என்ற சமாசாரங்களிலிருந்தெல்லாம் அவர்கள் சற்று விடுபட்டது நியூஜெர்ஸி வந்த இந்த நான்கு ஆண்டுகளில்தான்.

இந்த வருஷம் ஹாலிடே எங்கு போவது என்ற பேச்சு எழுந்தபோது வினய்யின் மனைவி ஸ்மிதாதான் 'இந்தியா போகலாமே வினு..!' என்றாள். குழந்தைகளும் 'சரி' என்றதால் பயணம் நிச்சயமானது. நியுஜெர்ஸி இந்தியக் கும்பலில் ஸ்மிதாவுக்கு மிக நெருக்கமான தோழி கும்பகோணத்தைச் சேர்ந்த மைதிலி. 'ஹாலிடே ஆடுதுறை'யைச் சிபாரிசு செய்தவள். 'இந்தியாவில் குறிப்பாகத் தென் இந்தியாவில் வந்திருக்கும் புது கான்ஸெப்ட். அந்தப் பகுதியின் கலாசாரத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்ட காட்டேஜ் போன்ற வீடுகள். ஆனால் எல்லா நவீன வசதிகளும் செய்யப்பட்டிருக்கும். தவிர தென்னிந்தி

யாவின் ஸ்பெஷாலிடி கோவில்கள்தான். கும்பகோணத்திற்கு அருகில் ஏராளமான கோவில்கள் உண்டு... அவர்களே உங்கள் டிராவல் வசதிகளுக்கும் ஏற்பாடு செய்வார்கள்... ரொம்ப நன்றாக இருக்கும் ஸ்மிதா... கட்டாயம் நீங்கள் 'என்ஜாய்' பண்ணுவீர்கள்' என்றான்.

திடீரென சாலையின் இருபுறங்களிலும் பசுமை படர ஆரம்பித்தது. தென்னை மரங்கள், வாழைத் தோப்பு, ஆலமரம் என்று படர்ந்து விரிந்து இருந்தன. சில இடங்களில் சாலைக்கே குடை பிடித்தது போல் மரங்கள் இரண்டு பக்கங்களிலிருந்தும் உயர்ந்து விரிந்திருந்தன.

"இன்னும் எவ்வளவு நேரமாகும் டிரைவர்...?" என்று கேட்டான் வினய். தன்னுடைய அரைகுறைத் தமிழில்.

'இதோ வந்தாச்சு... அஞ்சு நிமிஷம்..' என்ற டிரைவர் 'அதோ பாருங்க... ஒரு கோபுரம் தெரியுதில்ல... அங்கதான் திரும்பணும்...' என்றான். கார் கிட்டத்தட்ட அதை நெருங்கியது.

பழைய கோவில். புதுப்பிக்கப்படவில்லை; ஆனால், சுத்தமாக்கப்பட்டிருந்தது. சுவரில் நாமம் பெரிதாகப் பெருமாள் கோவில் என்பதை உணர்த்தியது.

அது ஒரு அக்கிரகாரம். அதற்குள் க்வாலிஸ் நுழைந்தது. அந்தி சாயும் நேரமாதலால் இவர்கள் உள்ளே நுழையவும் குப்பென்று நேர்க்கோடாக இருமருங்கிலும் வீடுகள் இருந்த அந்த அக்கிரகாரத்தின் தெருவில் சோடியம் வேப்பர் லாம்புகள் பூத்திருப்பது தெரிந்தது. ஓடுகள் வேய்ந்து தாழ இறங்கிய முன் வாசலும், திண்ணையுமாக இருந்தது ஒவ்வொரு வீடும்.

கார் சென்று ஒரு வீட்டின் முன் நின்றது. இவர்கள் கதவைத் திறந்து கீழே இறங்கவும், பளீரென்று வெள்ளை வேட்டி, சட்டை அணிந்த ஓர் இளைஞன் புன்னகை முகத்துடன் கை கூப்பி இவர்களை வரவேற்றான்.

'ஐ'ம் ராம்..' என்று புன்னகையுடன் கூறி 'வெல்கம் டு ஹாலிடே ஆடுதுறை..' என்றான்.

'இதுதான் உங்கள் விடுமுறை இல்லம்..' என்று கூறிய ராம் தாழ்வாகச் சரிந்த ஓட்டுத் திண்ணையையும், அதில் உள்ள கோலங்கள் மின்னும் தூண்களையும் காட்டி, 'இது தென்னிந்தியாவின் தனிக் கலாசாரம் தெரியும் வீடு..' என்று நீண்டு சென்ற ரேழி வழியாக உள்ளே அழைத்துச் சென்றான்.

அழியாத அடையாளம்!

✉ மரணங்களால் சிலர் வாழ்கிறார்கள் என்று சொல்வதுண்டு. கோதை கதாபாத்திரம் மிகவும் அழகாக வார்த்து எடுக்கப்பட்டுள்ளது. சுப்ர.பாலன் சிறந்த குடும்பத்தொடர் ஆசிரியர் என்பதை 'அடையாளங்கள்' நிரூபித்தது.

சென்னை - 61, ஆர். நாகராஜன்

✉ மனைவியின் மௌன மொழிக்குச் செவி சாய்த்த கதாநாயகனின் முடிவு வெகு நேர்த்தி. கொண்ட கொள்கையில் மாறத்

மல்லிகைக் கொடிகள் படர்ந்திருக்கும் பெரிய முற்றமும், சுற்றி ஓடிய தாழ்வாரமும், கூடமும், அதிகம் அலங்கார ஒளி சிந்தாத விளக்குகளில் இயற்கை எழிலும் கொஞ்சியது. ஹாலின் நடுவில் ஒரே ஒரு தஞ்சாவூர் பெயின்டிங் – வெண்ணெய்த் தாழி கண்ணன் மிகப் பெரிதாக வைக்கப்பட்டிருந்தது.

'இதுதான் ஹால்... மற்றும் முற்றம்... இரண்டு புறமும் இரு படுக்கை அறைகள்..' என்று மிக அழகாக, ஆனால் கிராமிய மணம் தவழ மூங்கில்களால் அமைக்கப்பட்டிருந்த இரு படுக்கையறைகளைக் காட்டினான்.

கூடத்தில் இருந்த ஊஞ்சல் பளபளவென்ற சங்கிலிகளில் ஆடிக் கொண்டிருந்தது.

"வாவ்... திஸ் ஸ்விங் ஈஸ் ப்யூட்டிஃபுல்..' என்று ஆர்த்தியும் அதிதியும் ஊஞ்சலை நோக்கி ஓடினர்.

ஆனால் வினய்க்கு மட்டும் இந்த வீட்டை முன்பே பார்த்திருப்பது போல் மங்கலாக மனசில் ஏதோ தோன்றியது. இரவுச் சாப்பாடு முற்றத்தில் திடீரென்று முளைத்த மேசையில் பரிமாறப்பட்டது.

சேவை, சூடான இட்லி, ஆப்பம், தேங்காய்ப்பால், தோசை, சட்னி, சாம்பார், காரக் குழம்பு, தயிர் என்று பல அய்ட்டங்கள். நல்ல பசியில் இருந்த அனைவரும் உணவை விரும்பி உண்டனர். ராமுவும், அவனுடன் வந்த மற்றொரு இளைஞனும் வினய்யின் தேவைகளை கவனித்த பின் 'நாளைக் காலை நீங்கள் சுவாமி மலைக்குச் செல்கிறீர்கள்... எட்டுமணி போல் தயாராக இருங்கள், குட் நைட்' என்று விடை பெற்றனர்.

தான் ரேஸ் ஓடியவன் தன்னிறைவு பெற்றதென்னவோ மனைவியின் மேல் கொண்ட அபார பிரேமையில் எனும் விதமாக அமைந்த கதைப் பாங்கு வெகு அற்புதம்.
குட்டலாடம்பட்டி, கொ.மூர்த்தி

✉ சுத்தமங்கலம் கிராமத்துச் செயல் தொண்டன், மனைவியின் பிரிவை மனத்திலேயே புதைத்துக் கொண்டு மரிக்கும்போது அதைக் காட்டிச் சென்றது மனத்தை விட்டு அழியாது.
தஞ்சாவூர் - 12, ஜி. ராமதாஸ்



ஏர்கண்டிஷன் அமைதியாக வேலை செய்யும் ஒரு படுக்கை அறையில் வினய்யும், ரம்யாவும், மற்றொரு அறையில் குழந்தைகளும் உறங்கச் சென்றனர்.

சிவப்பாகப் பளபளப்பாக வேஷ்டி கட்டிக் கொண்டு விபூதி குங்குமம் நெற்றியில் துலங்க, அந்தப் பெரியவர் அந்தக் கூடத்தில் ஊஞ்சலில் உட்கார்ந்து மெதுவாக ஆடிக் கொண்டிருக்கிறார். எதிரே சமையலறை போன்ற ஓர் அறையின் வாசலில் குழப்பமாகப் புடைவை கட்டிக் கொண்டு ஒரு பெண்மணி பிழியப் பிழிய அழுகிறாள். அந்த சிவந்த பெரியவர், 'கல்யாணம்னா சந்தோஷம்னா படணும்? நீ ஏன் விசாலம் அழறே...?' என்கிறார்.

அந்தப் பெண்மணியின் அழுகை அதிகமானது.

'நம்ம பிள்ளை அப்ப நமக்கு இல்லன்னு ஆயிட்டானா?' என்கிறாள் விக்கலுக்கும், விம்மலுக்கும் நடுவே.

அந்தப் பெரியவர் மெல்லச் சிரிக்கிறார்.

"அசடு மாதிரி பேசறயே... எங்கேயோ நம் குழந்தை சந்தோஷமா இருந்தா சரி... நீ கண்ணீர் விட்டா அது அவாளத்தான் பாதிக்கும்... அழாதே..." என்று கூறி ஊஞ்சலிலிருந்து எழுந்து போகிறார். ஊஞ்சல் கிரீச் சென்று கத்தியபடி அசைகிறது. திடீரென அது புயல் வேகத்தில் ஆடுவது போல் தோன்றுகிறது. அதில் உட்கார்ந்து எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கும் வினய்க்கு, டிஸ்னி லாண்ட் ஜெயண்ட் வீலில் உட்கார்ந்திருப்பது போல் பிரமை ஏற்படுகிறது.

'சட்'டென்று கனவு கலைந்து, உடல் ஏர்கண்டிஷன் குளிரையும் மீறி வியர்க்கிறது.

வினய் திடுக்குற்று எழுந்து உட்காருகிறான்.

'இது என்ன அசாதாரணக் கனவு...? யார் இவர்கள்...?' என்று மனம் குழம்புகிறது.

மறுநாள் காலை குளித்து சிற்றுண்டி அருந்தியபின் சுவாமிமலை, வைத்தீஸ்வரன் கோவில் என்று க்வாலிஸ் கிளம்புகிறது. ராம் உடன் வருகிறான். அழகான ஆங்கிலத்தில் எல்லா இடங்களையும் பற்றிய குறிப்புகள் தருகிறான்.

அன்று இரவும் வினய்க்கு ஒரு கனவு வருகிறது. அதே பெரியவர். அதே குழப்பமாக உடை அணிந்த பெண்மணி. அவள் மடியில் வினய் சிறு பையனாக ஊஞ்சலில் உட்கார்ந்திருக்கிறான். அந்தப் பெண்மணி முகம் மலர குழந்தையை முத்தமிடுகிறாள். நீ எங்க கூட இங்கேயே இருக்கியா ராஜா...' என்று கேட்கிறாள் அந்தப் பெண்மணி.

'நை... முஜே தில்லி ஜானா ஹை... முஜே தில்லி ஜானா ஹை... சோட் தோ முஜே..." என்று சொல்ல ஆரம்பிக்கிறான் வினய். திடீரென வினய் வளர்வது போலவும் அந்தப் பெண்மணி அவனை இறுக அணைத்துக் கொண்டு 'போகாதேடா...' என்று கெஞ்சுவது போலவும் தோன்றுகிறது.

'நை...முஜே தில்லி ஜானா ஹை...சோட்...'

வினய்...வினய்...வாட்ஸ் திஸ்...? ஸ்மிதா வினய்யை உலுக்கி எழுப்புகிறாள்.

மறுநாள் ஊர் சுற்ற திருவையாறு செல்கின்றனர். காவிரிப் படித் துறையும், பஞ்சநதீசுவர் கோவிலும் பிரயாணத்தில் இருக்கிறது.

பிரம்மாண்டமாக இருந்தாலும் விட்ட இடம் - தொட்ட இடம் தெரியாமல் பரந்து விரிந்து கிடக்கும் கோவில் வினய்க்கு வியப்பை விட அச்சத்தைத் தருகிறது.

அந்தக் கனவுகள்தான் காரணமோ என்று தோன்றுகிறது. ராமிடம் தனியாக வந்து அமர்கிறான். குளக் கரையில் ரம்யா குழந்தைகள் ஓடி விளையாடுவதைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

'ராம், நான் ஒன்று கேட்டால் தப்பாக நினைக்க மாட்டீர்களே...?' என்று பீடிகை போடுகிறான் வினய்.

'என்ன சொல்லுங்கள்..!' என்கிறான் ராம் புன்னகையுடன்.

"இந்த வீடுகள் எல்லாம் ரொம்பப் பழைய வீடுகள்தானே..?"

"யெஸ்.."



— சீர்காழி வி. ரேவதி

"ஆர்தே ஹான்ட்டட்...?"

ராமின் புருவங்கள் சுருங்குகின்றன.

"வொய்...?"

"எனக்கு ஒரு மாதிரியான கனவுகள் வருகின்றன..." என்கிறான்.

"பயமுறுத்தும் வகையிலா...?"

"நாட் எக்ஸாக்ட்லி... பட், அந்த பிம்பங்கள் என்னவோ எனக்குப் பழக்கமானவை போல் தோன்றுகிறது...."

ராம் ஆதரவாகப் பேசுகிறான்.

"தப்பாக நினைக்காதீர்கள் வினய்.... உங்களுக்கு அலைச்சல் மற்றும் கிளைமேட் மாற்றம்... இவை சற்று பிரச்னை செய்யலாம்... இந்த வீடு மிக நல்ல மனிதரின் வீடு..."

வினய்யும் சோகையாகச் சிரிக்கிறான்.

'மஸ்ட் பி..' என்று முழுக்கிறான். பின்னர் 'முடிந்தால் இந்த வீட்டைப் பற்றியும் அதன் சொந்தக்காரர்கள் பற்றியும் விசாரியுங்கள்..' என்கிறான்.

"ஜஸ்ட் க்யூரியாஸிட்டி..." என்கிறான் புன்னகை செய்தபடி.

'க்வாலிஸ்' கிளம்பத் தயாராக இருக்கிறது.

வீட்டை விட்டு வெளியே வரும்போது ஏனென்று சொல்லத் தெரியாமல் வினய்க்கு மனது கனத்துப் போகிறது. அந்த ஊஞ்சலையும், கூடத்தையும் பார்க்கிறான். ஏதோ இரண்டும் தூக்கத்தில் வந்தே அவனை ஆக்ரமித்துக் கொண்டது போல் ஒரு பிரமை உண்டாகிறது.

ராம், வினய்யின் கைகளைப் பற்றிக் குலுக்குகிறான்.

'க்வாலிஸ்' கிளம்ப இருக்கையில் திடீரென நினைத்துக் கொண்டவன் போல் வினய்யிடம் வருகிறான் ராம்.

"இந்த வீட்டைப் பற்றிக் கேட்கச் சொன்னீர்களே... விசாரித்தேன். இந்த வீட்டின் சொந்தக்காரராக நீண்ட நாட்கள் இருந்தார் சுப்ரமண்ய அய்யர் என்ற சம்ஸ்க்ருத பண்டிதராம்...."

"அப்படியா... அவருக்குப் பின்னர்...?" என்கிறான் வினய்.

உதட்டைப் பிதுக்குகிறான் ராம். "அவர் மகன் இந்த ஊரில் இல்லை. தில்லியிலோ பம்பாயிலோ போய் செட்டில் ஆகி விட்டதாகக் கேள்வி..."

'அவர் பெயர் என்னவென்று தெரியுமா?' என்கிறான் வினய்.

"ம்ஹூம்... தெரியவில்லை... ஆனால் வேறொரு விஷயம் மட்டும் கேள்விப் பட்டேன்...!"

"என்ன அது...?"

"அவரும் அவர் மனைவியும் விமான விபத்து ஒன்றில் இறந்து போனார்கள் என்று காற்றுவாக்கில் ஒரு செய்தி வந்ததாகக் கேள்விப்பட்டேன். நிஜமோ பொய்யோ... எனவே ஃபர்கெட் இட்... கம் டு இண்டியா எகெய்ன்..' என்று கை அசைத்து விடை கொடுக்கிறான் ராம்.


'க்வாலிஸ்' புறப்பட்டு வேகம் பிடிக்கிறது. 'ஹாலிடே ஆடுதுறை' புள்ளிகளாகி மறைகின்றன.




இரண்டு பெண்டாட்டிக்காரனின் அவஸ்தைக் கதையா? - எஸ் மேடம்
சிரிப்புப் படமா? - எஸ் மேடம்
சிரிப்பு வருகிறதா? - எஸ் மேடம்
அபத்தம் ஃப்ரீயா? - நோ மேடம்
காமா - சோமா கிளைமாக்ஸா? - எஸ் மேடம்
'ஸ்பீடு - பிரேக்கர்' ஸ்டைல் பாடல் காட்சிகளா? - எஸ் மேடம்
பிரபு டிரிம்மாக இருக்கிறாரா? - ஐயைய்யோ, நோ மேடம்
அளவுடன் நடிக்கிறாரா? - நோ மேடம்
இரண்டுமே ஓவரா? - எஸ் மேடம்
விஜி - விந்தியா ஓ.கே.வா? - எஸ் மேடம்
ஆச்சியின் குரல் வளம் இடிக்கிறதா? - எஸ் மேடம்
'ஜஸ்ட் - பாஸ்' படமா? - எஸ் மேடம்
பிரபுவுக்கு இது தேவையா? - நோ மேடம்

— கிருஷ்ணா சிதம்பரம்

நடக்குமென்பார்; நடக்கும்!




மேஷம்: குடும்ப சப்தமாதிபதியாகிய சுக்கிரனை குரு பார்க்கறதால சுபகாரிய முயற்சிகள் கூடி வரும். பூர்வீக சொத்து விவகாரம் அனுகூலமா இருக்கும். இதுவரை இருந்துவந்த விரோதம் மறைஞ்சு போகும். பெண்களுக்கு இது ஜாலி வாரம். கஷ்டங்கள் மறைஞ்சு, சந்தோஷ மனநிலை தேடி வரும். துணிவு, தன்னம்பிக்கை, தெளிவு பிறக்கும். வேலை இல்லாம இருந்தவங் களுக்கு அதுக்கான வாய்ப்பு வரும். புது வேலை தேடுகிறவங் களுக்கு இது நல்ல நேரம்.



ரிஷபம்: தெய்வ பலம், தெய்வீக ஈடுபாடு அதிகமாகும். பயணங்கள்ல அனுகூலம் உண்டு. பணவசதி தாராளமா இருக்கும். புதியவங்க அறிமுகம் கிடைக்கும். அவங்களால நன்மை உண்டு. அலுவலகத்தில் உயரதிகாரிங்க அதிருப்திக்கு ஆளாக வாய்ப் பிருக்கு. 'பொறுத்தார் பூமியாள்வார்ங்'கற மாதிரி பொறுமையை கடைபிடிக்கறது நல்லது. 'அங்க ஒரு நல்ல வாய்ப்பு வருதே'ன்னு இருக்கறதை விட்டுட்டு இப்ப தாவ முயற்சி பண்ண வேண்டாம். எதிர்பார்த்த நல்ல தகவல் வந்து சேரும். இயந்திரவகை, கெமிக்கல்ஸ், கமிஷன் ஏஜென்ட் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு இது முன்னேற்றமான வாரம்.




மிதுனம்: இந்த வாரம் எல்லா விஷயத்திலும் அனுகூலம் ஏற்படும். பெரியவங்க ஆதரவு கிடைக்கும். அவங்களால சில நன்மைகள் உங்களை வந்து சேரலாம். அலுவலகத்தில் சுமுகமா பேசிப் பழகறது நல்லது. எதிலும் நிதானம் அவசியம். மறைமுக எதிரிகளால் சில பிரச்னைகள் வரலாம். குடும்பத்துல அமைதி நிலவும். குரு பலம் நிறைந்து இருக்கறதால பொன், பொருள், ஆபரணச் சேர்க்கை ஏற்படும். சினிமா, நாடகம், சங்கீதம் போன்ற கலைத்துறையைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றம் உண்டு. சிலர் புதிய வீடு கட்ட, வாங்க வாய்ப்பிருக்கிறது.



கடகம்: குடும்பத்துல இதுவரை இருந்து வந்த கருத்து வேறுபாடு மறையும். ஆறில் செவ்வாய் இருக்கறதால எந்தவித எதிர்ப்பு பற்றியும் கவலைப்படத் தேவையில்லை. மேலதிகாரிகள் ஆதரவா இருப்பாங்க. அரசியல்வாதிகள் மதிப்பு செல்வாக்கு உயரும். இயந்திரம், இன்டஸ்ட்ரீஸ், எலக்ட்ரானிக்ஸ், ஏற்றுமதி இறக்குமதி போன்ற துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு எதிர்பாராத வரவு உண்டு. வெளியூர்/வெளிநாடு செல்லும் பயணம் இட்டமிட்டபடி நடக்கும். பெண்களுக்கு இது உற்சாகமான வாரம்.



சிம்மம்: இந்த வாரம் வெற்றி உங்களைத் தேடிவரும். அலு வலகத்தில் உயரதிகாரிகள் ஆதரவும், பாராட்டும் கிடைக்கும். எவ்வளவு சிக்கலான காரியமானாலும் திறமையா செயல்பட்டு முடிப்பீங்க. எதிர்ப்புகள் மறையும். இதுவரை இருந்துவந்த தடைகள், குறுக்கீடுகள் மறையும். சுயமாகத் தொழில் பண்ற வங்களுக்கு பொருளாதார மேன்மை கிடைக்கும். குடும்பத்தில் கணவன் மனைவி உறவு இனிமையா இருக்கும். சுபகாரிய முயற்சிகள் நடக்க வாய்ப்பிருக்கு. முன்ன பின்ன தெரியாத வங்ககிட்ட அதிகமா பேச வேண்டாம்.




கன்னி: பெண்களுக்கு இது அதிர்ஷ்டமான வாரம். பொன், பொருள், ஆடைகள் வாங்க வாய்ப்பிருக்கு... (கணவன்மார்களே உஷார்! பர்ஸ் பத்திரம்! கல்யாணம் ஆகாதவங்களுக்கு அதுக்கான வாய்ப்பு தேடி வரும். சொத்து விவகாரத்தில் உங்களுக்குச் சாதகமான தீர்ப்பு வரும். பழைய கடன் தொல்லை தீரும். பண

அக்னி சர்மா பக்கம்


நடமாட்டம் தாராளமா இருக்கும். அலுவலகத்தில் உயரதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும். சிலர் வேலை விஷயமாக வெளியூர், வெளிநாடு போக வாய்ப்பிருக்கு.




ரிஷப ராசிக்காரரான இயக்குநர் சரணுக்கு நல்ல தகவல் வந்து சேரும்!



துலாம்: குடும்பத்துல கணவன் மனைவி உறவு நிலை சீரா இருக்கும். இரண்டாம் இடத்தை குரு பார்க்கறதால சுபமங்கள காரியங்கள் நடக்க வாய்ப்பு வரும். வழக்கு விவகாரங்கள்ல வெற்றிதான். சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்க ஏதாவது சாதனை படைப்பாங்க. புதியவங்க அறிமுகம் கிடைக்கும். அலுவலகத்தில் உற்சாகமான மனநிலை உண்டாகும். சிலருக்குப் பதவி உயர்வு, இடமாற்றம் கிடைக்கும். கலைத் துறையைச் சேர்ந்தவர்களுக்குப் பெயர் புகழ் கூடும்.



விருச்சிகம்: குருபலம் நிறைந்து இருக்கறதால நிறைய பொருள் சேர்க்கை உண்டு. கல்யாண முயற்சிகள் கைகூட வாய்ப்பிருக்கு. சொத்து சம்பந்தப்பட்ட சிக்கல்கள் விலகி அனுகூலம் ஏற்படும். சினிமா, சங்கீதம் போன்ற கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றம் உண்டு. எதிர்ப்புகள் காணாமப் போயிடும். இதுவரை இருந்து வந்த தடைகள், குறுக்கீடுகள் விலகும். எடுத்த காரியத்தில் வெற்றி உண்டு. புதிய வேலை முயற்சிகள் கைகூடும். சிலருக்கு வெளியூர்/வெளிநாடு போக வாய்ப்பிருக்கு.




தனுசு: இதுவரை தாமதமாகி வந்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலை நிலவும். சிறு சிறு பிரச்னைகள் கிளம்பி மறையும். புதிய முயற்சிகள் கைகூடும். புது சொத்து சேர்க்கை நிகழும். சிலர் புது வீடு, வாகனம் வாங்க வாய்ப்பிருக்கு. எலக்ட்ரானிக்ஸ், விஞ்ஞானம், கெமிக்கல்ஸ், மருத்துவம், அழகு சாதனங்கள், ஜவுளி ஆகிய துறைகள் ஆதாயம் தரும். சினிமா, நாடகம், நாட்டியம் போன்ற கலைத்துறையைச் சேர்ந்தவங்களுக்கு பெயர், புகழ் கூடும்.



மகரம்: வார முன் பகுதியில் சில தடைகள், தாமதம் ஏற்பட்டாலும், பின் பகுதியில் துணிவு, தன்னம்பிக்கை பிறக்கும். உங்க ராசியில் சுக்கிரன் அமர்ந்து குருபார்வையும் இருக்கிறதால எடுத்த காரியங்கள்ல வெற்றி உண்டு. அலுவலகத்தில் சிறு சிறு பிரச்னைகள் முளைக்கும். சக ஊழியர்களிடம் சுமுகமாக பேசிப் பழகுறது நல்லது. அரசியல்வாதிகள் மதிப்பு அந்தஸ்து உயரும். குடும்பத்தில், கல்யாணம் ஆகாதவங்களுக்கு அதுக்கான வாய்ப்பு வந்து சேரும். பிரிந்தவர்கள் ஒன்று சேருவாங்க... வழக்கு விவகாரம் உங்களுக்குச் சாதகமா அமைய வாய்ப்பிருக்கு.



கும்பம்: இதுவரை இருந்து வந்த தடைகள் குறுக்கீடுகள் யாவும் விலகும். விரோத மனப்பான்மையோடு இருந்தவங்க மனம் மாறி சுமுகமாகப் பழகுவாங்க. பணவசதி தாராளமா இருக்கும். புதிய முயற்சிகள் கை கூடும். வராமல் இழுத்தடித்துக் கொண்டிருந்த பணம் இப்ப வந்து சேரும். மனை, நிலம், ரியல் எஸ்டேட் பிஸினஸ் பண்றவங்களுக்கு ஆதாயம் உண்டு. சட்டம், காவல், இராணுவம் ஆகிய துறைகளைச் சேர்ந்தவங்க முன்னணிக்கு உயருவாங்க.



மீனம்: ஜென்ம ராசியில் சூரியன், புதனுடன் கூடி குரு பார்வையும் இருப்பதால் சகல காரியங்களிலும் வெற்றி உண்டு. அலுவலகத்தில் மேலதிகாரிகளின் ஆதரவும் அரவணைப்பும் கிடைக்கும். தனியார் துறையில் வேலை பார்க்கறவங்களுக்கு முன்னேற்றம் உண்டு. சிலருக்குப் பதவி உயர்வு, இடமாற்றம் கிடைக்கும். கடன்தொல்லை நீங்கி உங்களைச் சந்தோஷப்படுத்தும். புதிய தொழில்களில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும்.

ஏப்ரல் 2 முதல் 8 வரை



• லீலா சாம்ஸன்

காசியும்

மாலை நேரத்து மஞ்சள் வெயிலை, பசுமையான இலைகளின் வழியே, பசும் பொன்னொளியாய் வடிகட்டி வழங்கிக் கொண்டிருந்தன மரங்கள். கலாக்ஷேத்ரா வளாகத்து மரங்கள் என்பதாலோ என்னவோ, பாரம்பரிய பட்டுடையில் தங்க நகைகள் தகதகக்க, மொத்தமாய் நாட்டி யாஞ்சலி நிகழ்த்தத் தயாராகிவிட்ட மரங் களா, இல்லை மங்கைகளா என்கிற மயக்கம் எழுந்தது. மரங்களுக்கிடையில் கம்பீரமாய் எழுந்து நின்ற கூத்தம்பலத்துக்கு, முதல் முறையாக வருகிறவர்களுக்கு இது கோயிலா இல்லை கலையரங்கா, என்ற குழப்பம் கலந்த வியப்பு மேலிடும். ஆனால் அங்கே பரதம் பயிலும் மாணவ, மாணவியருக்கோ அது தான் கோயில். அத்தகைய கலைக் கோயிலில், கலாக்ஷேத்ராவை ஸ்தாபித்து வளர்த்த, அன்பு அத்தை ருக்மிணி தேவிக்கு நூற்றாண்டு நினைவு விழா என்றால் எப் படித் தவிர்க்க முடியும்? மாலை நான்கு மணிக்கே சாரிசாரியாய் ஸாரியில் வரத் தொடங்கிய கலாக்ஷேத்ரா மாணவிகள்



• கௌரவிக்கப்பட்ட ஜவர்- மணி, சேஷாத்திரி, பிரபு, விஜயலட்சுமி, ஷோபனா ஸ்வாமி

அரங்கத்தை நிறைத்தனர்.

கல்கி சதாசிவம் நினைவு அறக் கட்டளையின் சார்பில் நடை பெறும் நினைவஞ்சலியோடு, தமிழ் விளம்பரத்திற்கு விருது வழங்கும் விழாவும் இணைந்து கொண்டது. மாணவிகள் மேடைக்கு முன்பு விரிக் கப்பட்டிருந்த ஜமுக்காளத்தில் சம்மணமிட்டு அமர்ந்து கொண்டது, ஒரு குடும்ப விழாவை நினைவூட்டியது.

கண்களை உறுத்தாத மெல்லிய ஒளி தவழ்ந்து கொண்டிருந்த மேடையின்



• விருது வழங்கப்படுகிறது...

வலப்புறம், நாட்டியத்தின் அதிபதியான தில்லை நாதனின் திருவுருவம். அருகிலேயே ருக்மிணி தேவியின் வண்ணப் படமும்,


• பொன்மணி வைரமுத்து

இடப்புறம் கல்கி விநாயகர் திருவுருவின் அருகில் சதாசிவம் படமும் மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்ததில், பூஜையறை போலவே மாறிவிட்டிருந்தது மேடை. கலாக்ஷேத்ரா மரபுப்படி நடராஜப் பெருமானுக்கு பூஜையோடு தொடங்கிய விழாவைத் தெய்வாம்சமாய் நிறைத்தது சாய் சங்கர் குழுவின் கடவுள் வாழ்த்து.

ருக்மிணி தேவியைப் போற்றிய ராகமாலிகை பாடல்.


• சீதா ரவி


• சி.வி. சந்திரசேகர்


• எஸ்.ஆர். அய்யர்


• ஷங்கர்


• ஸ்ரீனிவாச கே. ஸ்வாமி

கலாக்ஷேத்ராவும்

சென்னை பூந்தமல்லி நெடுஞ்சாலையில் மிகப்பிரபலமாக இருந்தது எவரெஸ்ட் ஹோட்டல். அதன் விளம்பரத்தைப் பெற்று கல்கியில் வெளியிட முடிவு செய்தார் சதாசிவம். ஹோட்டலின் உரிமையாளரைச் சந்தித்து, ''விளம்பரத்தை நானே தயாரித்துத் தருகிறேன், அதைப் பார்த்துவிட்டு, திருப்தி இருந்தால் மட்டும் விளம்பரம் தாருங்கள்'' என்று சொன்னவர், செயலில் இறங்கினார். முதலில் ஹோட்டலின் வெளிப்புறத் தோற்றத்தைப் படமெடுக்கச் செய்தார். அடுத்து ஹோட்டலின் உரிமையாளரை தமது இரண்டு கைகளையும் அகல விரித்து நிற்கும்படி செய்து படமெடுத்தார். பிறகு ஹோட்டல் புகைப்படத்தை கட் அவுட் செய்து, கைகளை விரித்து நின்ற உரிமையாளரின் படத்தோடு இணைத்து, நிஜமாகவே உரிமையாளர் ஹோட்டலைத் தமது கைகளில் தாங்கிப் பிடித்திருப்பது போன்ற தோற்றத்தை உருவாக்கிக் காட்டினார். வியந்து போன ஹோட்டல் உரிமையாளர், கல்கியில் அந்த விளம்பரத்தை வெளியிட உடனடியாக இசைவு தெரிவித்தார். போட்டோஷாப் போன்ற கம்ப்யூட்டர் வசதிகள் இல்லாத காலத்திலேயே, இது போன்ற உத்திகளைக் கையாண்ட சதாசிவம் ஒன்மேன் ஏஜென்சி. அப்படிப்பட்டவர் நினைவாக, சமுதாய உணர்வோடு கலையுணர்வும் மிக்க தமிழ் விளம்பரத்துக்கு ஆண்டு தோறும் விருது வழங்கி வருகிறது கல்கி சதாசிவம் நினைவு அறக்கட்டளை'' என்று தமது வரவேற்புரையில் குறிப்பிட்டார் கல்கி ஆசிரியர் சீதா ரவி.

''விளம்பரங்களை உருவாக்குவதில் மட்டும் சதாசிவம் வித்தகர் அல்ல. கல்கியில் விளம்

• கல்கி நிர்வாக இயக்குனரால் கௌரவிக்கப்படும் லீலா சாம்ஸன்



பரங்களைத் தேர்வு செய்து வெளியிடு வதிலும் வியப்பூட்டியவர். நமது பண் பாட்டுக்கும், வாழ்க்கை முறைக்கும் மறை முகமாகவோ, நேரடியாகவோ ஊறு விளை விக்கக் கூடிய விளம்பரங்களை வெளியிட அடியோடு மறுத்தவர். அவரது உயர்ந்த கோட்பாடுகளைப் பின்பற்றி இன்று வரை மது, புகையிலை, சிகரெட் உள்ளிட்ட விளம் பரங்களை கல்கி வெளியிடுவதில்லை" என்று புகழாரம் சூட்டினார், விருதினை வழங்க வந்திருந்த விழா தலைவரும், ஓ அண்ட் எம் விளம்பர நிறுவனத்தின் முன்னாள் தலை வருமான எஸ்.ஆர்.அய்யர்.

'**வே**லை பிரஷர் தாங்க முடியாத போது எல்லாவற்றையும் புறக்கணியுங்கள். அமைதி தவழும் பாண்டிச்சேரிக்கு வாருங் கள். இங்கே நேரம் என்பதற்குப் பொருள் அமைதி என்பதே' என்ற சொற்றொடர் களோடு ஒரு குக்கரின் படம். அதில் நீராவி வெளியேறும் வால்வை பாண்டிச்சேரி யாகவும், குக்கரை மிகுதியான வேலைச் சுமையாகவும் உருவகப்படுத்தும் விளம்பரம் உட்பட, அமைதியும், ஆன்மிகமும் நிறைந் திருக்கும் பாண்டிச்சேரிக்கு, சுற்றுலா வரும் படி அழைப்பு விடுக்கும் மூன்று விளம்பரங் கள் விருதுக்குரியதாகத் தேர்வு செய்யப்பட்டன.

பொன்மணி வைரமுத்து, ஸ்ரீநிவாஸன் கே.ஸ்வாமி (ஆர்.கே.ஸ்வாமி நிறுவன நிர்வாக இயக்குனர்) இருவரை யும் நீதிபதிகளாகக் கொண்ட, அறங்காவலர்கள் உள்ளிட்ட தேர்வுக்குழு கடந்த ஆண்டு வெளிவந்த அனைத்து பத்திரிகை களையும் சலித்தெடுத்து, விருதுக் குரிய விளம்பரங்களைத் தேர்வு செய்திருந்தது. பாண்டிச்சேரி டூரிஸம் துறைக்காக இந்த விளம் பரங்களை உருவாக்கிய மெக்கான் எரிக்சன் நிறுவனம் இந்த விருதைத் தட்டிக் கொண்டு போவது இது இரண்டாவது முறை! மெக்கான் எரிக்சன் சார்பில் விளம் பரங்களை படைப்பாக்கம் செய்த மாதேஷ் மேடைக்கு வந்து விருது பெற்றுக் கொண் டார். ஆனால் விருதுடன் கூடவே பரிசுத் தொகையாக வழங்கப்படவிருந்த காசோ லையை அவர் வாங்காமலேயே சென்றுவிட, "மாதேஷ் கிரியேட்டிவ் துறையைச் சேர்ந் தவர். மார்கெட்டிங் துறையைச் சேர்ந்த வராக இருந்திருந்தால் காசோலையை மறந் திருக்க மாட்டார்'' என்று நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கிய கல்கி நிறுவன தலைமை நிர்வாகி ஷங்கர், அந்த தருணத்தைப் பயன் படுத்தி நகைச்சுவை வெடியைக் கொளுத்திப் போட்டதில் அரங்கமே கரவொலியில் அதிர்ந்தது.



• கலாக்ஷேத்ரா மாணவிகள்...




• பார்வையாளர்கள்...

பாண்டிச்சேரி சுற்றுலா மையம் சார்பில், அதன் இயக்குனர் நாகராஜனும் கலந்து கொண்டு கல்கியின் அணுகுமுறையைப் பாராட்டிய விழாவில், கல்கி சதாசிவம் அறக்கட்டளை சார்பில் இரண்டு மாணவி களுக்கு கல்வி உதவித் தொகைகள் வழங் கப்பட்டன. முதுகலையில் மாஸ் கம்யூனி கேஷன் பயின்று வரும் மாணவி ரத்னமாலா, தமது தந்தையுடன் திருநெல்வேலியிலிருந்து

சென்னை வந்து உதவி பெற்றுக் கொண்ட கணம் நெகிழ்ச்சியானது. இவர் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் படிப்பவர். மற்றொரு மாணவி, சென்னை எம்.ஓ.பி. வைஷ்ணவா கல்லூரியைச் சேர்ந்த சேத்னா.

இவற்றுக்கு அப்பால் எல்லோரையும் இளக வைத்தார் ருக்மிணி தேவி குறித்து சிறப்புரை நிகழ்த்திய அவருடைய முக்கிய சீடர்களில் ஒருவரான சி.வி. சந்திரசேகர். குடும்பத்தில் மூத்த ஒருவர், புனித யாத்திரை சென்று திரும்பி வந்து, தமது குழந்தைகளைக் கூட்டி அருகில் அமர்த்திக் கொண்டு, தமது பயண அனுபவங்களைச் சொல்வதுபோல, 'சந்துரு அண்ணா' என்று அன்னியோன்யமாய் அழைக்கப்படும் சந்திரசேகரின் உரையில் அத்தை ருக்மிணி தேவியை அனைவராலும் தரிசிக்க முடிந்தது.

"புண்ணியம் தேடி காசிக்குப் போவது நம் கலாசாரம். அது போன்றதுதான் கலைகளைத் தேடி கலாக்ஷேத்ரா வருவதும்" என்று கலாக்ஷேத்ராவின் தல மகிமையோடு ஆரம்பித்தவர், கலாசாரத்தை மீறிவிடாமல் புதிய பார்வையோடு பரதக் கலைக்கு


• விருது பெற்ற விளம்பரம்...

புத்துயிரூட்டிய ருக்மிணி தேவியிடம், தாம் கவனித்து வியந்தவற்றை பகிர்ந்து கொண்டார். அவரது நாட்டிய நாடகங்கள், பாத்திரங்களுக்குப் பொருத்தமான நடனக் கலைஞர் தேர்வு, மேடை, திரைச் சீலைகளில் அவர் கையாண்ட கண்ணை உறுத்தாத வண்ணங்கள், ஒளி அமைப்பு, பாத்திரப் பிரவேசத்தில் நளினம், பருத்தி உடைகள், நகைகள் என்று ஒவ்வொரு விஷயத்திலும் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் எளிமையும், கலைக்கு புத்துயிர் ஊட்டும் புதிய பார்வையும் இருந்ததை, ஓர் ஆராய்ச்சி மாணவரைப் போல அடுக்கிக் கொண்டே போனார். அவையோரை வியப்பில் ஆழ்த்திக் கொண்டேயிருந்தார்!

ருக்மிணிதேவியின் நூற்றாண்டு விழா முத்துக்கள் பதித்த கிரீடம் என்றால், அதில் வைரமாக ஜொலித்தது லீலா சாம்ஸனின் பரத நாட்டியம். கிட்டத்தட்ட இரண்டு மணிநேரம் நிகழ்ந்த இந்த நாட்டிய அர்ப்பணிப்பினிடையே, ஒருவர் கூட எழுந்து போகவில்லை. காரணம், கலை அர்ப்பண உணர்வு கொண்ட பார்வையாளர்கள் ஒருபுறம் என்றால், கல்கியும், கலாக்ஷேத்ராவும் கிட்டத்தட்ட ஒரே காலத்தில் தோன்றி, ஒரே நோக்கத்திற்காக, இரட்டைப் பிள்ளைகள் போல வளர்ந்து வந்திருப்பதை உணர்ந்திருந்த கல்கி வாசகர்களும் அங்கே நிறைந்திருந்தனர். இதை விடவும் ஒரு நிறைவான உணர்வு அங்கிருந்த எல்லோரையும் ஆட்கொண்டது. ருக்மிணி தேவியே மேடைக்கு வந்து விழா முடிகிற வரை இருந்துவிட்டுப் போனது போன்ற பாந்தமான உணர்வு அது.

— ஸ்ரீ

படங்கள்: வெங்கடேஷ்



''பத்து வருஷமா கள்ள நோட்டு அடிச்சுட்டு வர்றே, இப்ப திடீர்னு எப்படி மாட்டிகினே?''

''ஆர்வக் கோளாறு காரணமா நோட்டுல காந்திக்கு பதிலா நம்ம தலைவர் படத்தைப் போட்டு அடிச்சிட்டேன்..''

— மலர் சூர்யா

● ஜி.ஜி.சரவணன், மயிலாடுதுறை.

? உச்ச நீதிமன்றம் பாராளுமன்றத்துக்கு ஆலோசனை கூறலாம். ஆனால் உத்தரவிட முடியாது என்கிறாரே பிரமோத் மகாஜன்.

! உத்தரவிட முடியாது, உண்மைதான். ஆனால், நாடாளுமன்றம் தவறான சட்டம் இயற்றினால் அதை அரசியல் சாசனத்துக்கு விரோதமானது என்று காரணம் காட்டி, ரத்து செய்ய உச்ச நீதிமன்றத்தால் முடியும். அதற்கான முழு அதிகாரம் அதற்கு உண்டு. அடிப்படையில் நாட்டை ஆள்வது அரசியல் சாசனம்தான்.

● க.நா.இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்.

? 'மாயா மேடம்' என்று உ.பி. முதல்வர் மாயாவதியைப் பற்றி திரைப்படம் தயாரிக்கப் போகிறார்களாமே? அது எப்படியிருக்கும்?

!மாயைகளுக்கு அதில் குறைவிருக்காது.

● பா.அச்சுதன், வயலூர்.

? ஏப்ரல் ஒன்று முட்டாள்கள் தினமாக மாறியது ஏன்...?

! பதினாறாம் நூற்றாண்டில் ஏப்ரல் முதல் நாளை பிரான்சில் வருடப் பிறப்பாகக் கொண்டாடி வந்தார்கள். 1562ல் போப் கிரெகரி, ஜனவரி முதல் தேதியை வருடப் பிறப்பாக அறிவிக்க, இதை அறியாத சிலர் தொடர்ந்து ஏப்ரல் ஒன்றாம் தேதியையே கொண்டாட, அவர்களைப் பார்த்து, 'முட்டாள்தனமாக இப்படிக் கொண்டாடுகிறார்களே!' என்று சிலர் நக்கலடிக்க, இன்றுவரை தொடர்கிறது அந்த நக்கல்.

கோப்பை கை நழுவக் காரணம்?

● ரொசாரியோ ரவிச்சந்திரன், கிழக்கு தாம்பரம்.



• மோதிரக் குட்டு!

? உலகக் கோப்பை கிரிக்கெட்டில் இந்தியா தோல்வியைத் தழுவியதற்கான காரணத்தை வரிசைப் படுத்துங்களேன்?

! 1. ஆஸ்திரேலிய பாட்டிங் நம்முடையதைக் காட்டிலும் மேலானது. 2. ஆஸ்திரேலிய போலிங் நம்முடையதைக் காட்டிலும் சிறப்பானது. 3. ஆஸ்திரேலிய ஃபீல்டிங் நம்முடையதைக் காட்டிலும் உயர்வானது. ஆகமொத்தம் குட்டுப்

பட்டாலும் மோதிரக் கையால் குட்டுப்பட்ட திருப்தி உண்டு!

● கே. சண்முகம், ஆதமங்கலம்புதூர். ●

? தமக்கெதிராகத் தொடரப்பட்டுள்ள அவதூறு வழக்கில் தாமே முதல்வரை குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என்கிறாரே இளங்கோவன். நடக்கக் கூடியதா இது?

இதனால் கிடைக்கும் லாபம் என்ன...?

! அதிகாரிகள் அம்மாவுக்கு சல்யூட் அடித்து, பயத்தில் உளறுவதைக் கேட்டு முதல்வர் குலுங்கக் குலுங்கச் சிரிப்பதற்கு வாய்ப்பு. மக்களின் வரிப்பணம் வேஸ்ட்.



• ஆணவத்தின் உச்சம்!

• மாயப் படம்!

• சட்டப் பேச்சு!

தமக்குத் தாமே...!

• பட்ஜெட்...

• -- பாடம்!

! வக்கில் அமர்த்திக் கொள்ளாமல் தனக்குத் தானே வாதாடலாம். ஆனால், குறுக்கு விசாரணைக்கு முதல்வரை ஆஜர்படுத்துவது நீதிபதி சம்மதித்தால்தான் சாத்தியம். மறைமுகமாக முதல்வருக்கு இப்படி ஒரு சவால் விடுவது அரசியல் ஆதாயத்துக்குத் தான்.

● அ. ராஜாரஹ்மான், கம்பம்.

? தலைமைச் செயலகத்தில் இருந்தபடியே முதல்வர் ஜெயலலிதா, அனைத்து மாவட்ட கலெக்டர்களிடமும் டி.வி. திரையைப் பார்த்துப் பேசிக் கொள்ளும் வகையில் நெட்வொர்க் செய்யப்பட்டுள்ளதே,

● எஸ்.ராஜமழை, சின்னமனூர்.

? 'இந்தியைச் சாதாரணமாக விட்டுவிட முடியாது. தமிழை மட்டும் வைத்துக் கொண்டு எதுவும் செய்ய முடியாது' என்று திருச்சியில் நடந்த விழாவில் நீதிபதி லட்சுமணன் பேசியது குறித்து...?

! தவறான தீர்ப்பு!

● என். சுஜாதா, சென்னை - 61.

? பெரும்பாலான பொறியியல் கல்லூரிகள்

❑ ரூ. 100/- பரிசு பெறுபவர்:
சி. கார்த்திகேயன்,
ப்ரியா ஜெராக்ஸ்,
17, பட்டையன் செட்டி தெரு,
சாத்தூர் - 626 203.

* ரூ. 50/- பரிசு பெறுபவர்:
கே. சண்முகம்,
ஜெயசித்ரா ஸ்டோர்ஸ் - மளிகை
ஆதமங்கலம்புதூர் - 606 901.

பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் நடத்துபவை. அவர்களே இட ஒதுக்கீட்டைக் கடைப்பிடிக்க மாட்டோம் என்று சொன்னால் எப்படி?

! பணம் பண்ணுகிற வழியைப் பார்க்கறாங்க. பொறியியல் கல்லூரி ஆரம்பிக்கறதே அதுக்குத்தானே!

● **ஜோ.பன்னீர்செல்வம், சென்னை - 12.**

? சென்னையில் கேபிள் டி.விக்கு எதிராக சங்கம் தொடங்கப்பட்டுள்ளதே. இந்த அமைப்பு வெற்றி பெறுமா?

! பெறாது. கேபிள் டி.வி. தொடர்பு உபயோகிப்பாளர்கள் இணைந்து ஏற்படுத்தியுள்ள நுகர்வோர் அமைப்பு அதன் நோக்கத்தில் வெற்றி பெறும் வாய்ப்புகள் அதிகம்.

● **கே.வி.ராமன், சென்னை - 73.**

? டெலிஃபோன் வாடகையின்மேல் 12.5 சதவிகிதம் தமிழக அரசு பட்ஜெட்டில் வரி விதிப்பு செய்திருப்பது வாடிக்கையாளர்களை பாதிக்காதா?

! டெலிபோன் என்பது அடிப்படை வசதி. அதன் மீது போடப்படும் வரி, தமிழகத்தின் தொழில்துறை வளர்ச்சியை பாதிக்கும்.

● **மல்லிகை மன்னன், மதுரை.**

? எம்.எல்.ஏ. குமாரதாஸ் தமது தோழர்களுடன் அம்மா ஜோதியில் நிரந்தரமாக ஐக்கியமாகி விட்டாரே?

! எங்கே! பழக்க தோஷத்தினால் எதிர்க்கட்சி டயலாக் பேசி, அம்மாவிடம் குட்டு வாங்கி, அவசர அவசரமாக, சம்பந்தா சம்பந்தமின்றி கருணாநிதியைத் திட்டி (சட்டமன்றத்தில்) அம்மாவைத் திருப்தி படுத்த வேண்டியதாகி விட்டதே!

● **சி. கார்த்திகேயன், சாத்தூர். ❑**

? ஈராக் மீது போர் முடிந்ததும் அந்நாட்டைச் சீரமைப்புச் செய்து தருவோம் என்று புஷ் கூறியுள்ளது பற்றி...?

! ஆணவத்தின் உச்சம். 'உன் கை காலுக்கு எலும்பு முறிவு கட்டுப்போட்டு குணப்படுத்துவதற்காக, முதலில் அவற்றை முறித்துக் காட்டுகிறேன்' என்று கூறுவதற்கு ஒப்பானது.

● **வே.ஸ்ரீ. கோபால், சென்னை - 91.**

? சன்னியாசம் வாங்கி ஐம்பதாண்டுகள் முடிவுற்றதை, அரசியல் தலைவர்கள் போல் பேப்பரில் பக்கம் பக்கமாக விளம்பரப் படுத்திக் கொண்டாடுவது சரியா?

! 'அடுத்த பிரதமர் ஜெயேந்திரர்தான்' என்று சிலர் கிண்டலடிக்கும் அளவுக்கு அவரது அரசியல் பாணி துறவறம் வளர்ந்து கொண்டிருப்பது வருத்தத்துக்குரியது. இப்படிச் சொல்வதால் அந்தப் பீடத்தின் மீது நமக்குள்ள மதிப்பு இம்மியும் குறைவு பட்டு விடாது.

● **ஆர். ராமகப்பு, திருவாரூர்.**

? தமிழக மக்கள் அப்பாவிகளா?

! பொன்னையனும் ஜெயலலிதாவும் அப்படித்தான் நினைக்கிறார்கள் என்று பட்ஜெட் உணர்த்துகிறது.

● **லெ.நா.சிவகுமார், சென்னை - 23.**

? பெட்ரோல் விலை ஏறியும் டிராஃபிக் ஜாம் குறையவில்லையே?

! பெரும்பாலான வாகனங்கள், நிறுவனங்களுக்குச் சொந்தமானவை. அவை பெட்ரோல் விலை உயர்வைத் தங்கள் உற்பத்தி செலவில் கூட்டிக் கொண்டு, உற்பத்தி செய்யும் பொருளின் விலையை உயர்த்தி விடும். விலைவாசி ஏறும். மிடில்கிளாஸ் சம்பளக்காரர்கள்தான் திணறுவார்கள். டிராஃபிக் ஜாம்கள் தொடர்வதில் ஆச்சர்யம் என்ன!



''உன்னை டிரைவர் வேலைக்குச் சேர்த்துக்கிறேன்... ஸ்டார்டிங் சாலரி ஆயிரம் ரூபாய்...!''

''அப்போ டிரைவிங் சாலரி எவ்வளவு சார்?''

— பாலு

பாட்டில் மென்மை; பதிலில் வன்மை!

சிகாவில் சஞ்சய் சுப்ரமண்யன் கச்சேரிக்கு சுமார் அறுநூறு ரசிகர்கள் வந்திருந்தனர். (சவுத் இந்தியன் கல்சுரல் அசோசியேஷன் என்பதன் செல்லப் பெயர் சிகா) ஹைதராபாத் கூட்டமும் சென்னை ஆடியன்ஸைப் போல்தான் - கொஞ்சம் சலசலப்பு, கொஞ்சம் சள சளப்பு எல்லாம் இருந்தாலும், கவன மாய்க் காதைத் தீட்டிக் கொண்டு கேட் டார்கள்.

சுருத்தோடு அமைத்த ஒலிபெருக்கி யில் சுருதி சுத்தமாக சஞ்சய் பாட ஆரம்பிக்க, வயலின் வரதராஜன், மிருதங்கம் அருண்பிரகாஷ், கஞ்சிரா புருஷோத்தமன் என்று பழக்கப்பட்ட குழு இலகுவாக இணைந்து கொண்டது.

வர்ணத்தைத் தொடர்ந்து சஞ்சய் 'ஸனாதனா பரம பாவன' என்ற பலமஞ்சரி கீர்த்தனை யைப் பாடி, கற்பனை ஸ்வரங்கள் பொழிந்து விட்டு மலையமாருதம் ஆலாபனைக்கு முன் னேறினார். மாலை நேரத் துக்கு ஏற்ற ரம்மியம் 'கலிலோ ராஜஸ' என்ற வரியில் நிரவலிலும்



தொடர்ந்தது. ஒரு குழந்தையைத் தூக்கிக் கொஞ்சும் ஆதுரத்துடன் யதுகுலகாம்போதியில் 'நின்னு சேவிஞ்சின' பாடுகையில் அருண்பிர காஷும் புருஷோத்தமனும் அடக்கி வாசித்தனர்.

தோடியில் காணாமல் போன சஞ் சய்யின் சுருதி சுத்தமும் அகாரமும், தனியாவர்த்தனத்தைத் தொடர்ந்த நாட்டைக் குறிஞ்சி ராகம் - தானம் - பல்லவியில் மீண்டு விட்டன. ராக மாலிகையில் வராளி, ஹம்சானந்தி, நாட்டை, மாயாமாளவகௌளை என்று எதிர்பாராத சுதம்பம்!

'சின்னஞ்சிறு கிளியே' பாடுகையில் திரும்பவும் தாலாட்டின் மென்மை.

கேள்வி - பதில் நேரத்திலோ, சஞ்சய் வன்மையும் உறுதியும் வெளிப்படுத்தி னார். மாதிரிக்குச் சில:

கேள்வி: ராகமாலிகைக்கு முன் கூட்டியே இன்ன ராகங்கள் பாடுவ தென்று திட்டமிட்டுக் கொள்வீர்களா?

சஞ்சய் : இல்லவே இல்லை. முழுக்க முழுக்க அந்த க்ஷணத்தில் தோன்றுகிற படிதான் பாடுவேன்.

கேள்வி: சார்டர்ட் அகவுண்டன்ட் வேலை, சங் கீதம் இரண்டையும் எப்படிச் சமாளிக்கிறீர்கள்?

சஞ்சய்: பார்வையாளர் களிடையே சி.ஏக்கள் இருந் தால் தப்பாக நினைக்கக் கூடாது. ஆடிட்டிங் சுலபம்; சங்கீதம் ரொம்பக் கஷ்டம். என் அலுவலக சகாக்கள் ஒத் துழைக்கிறதாலேதான் இசைக் குப் போதுமான அளவு நேரம் ஒதுக்க முடிகிறது.

கேள்வி: புது ராகம் என்பது இயற்றப் படுகிறதா, கண்டு பிடிக்கப்படு கிறதா?

சஞ்சய்: இயற் றப்படுகிறது என்று தான் நான் சொல் வேன். ஸ்வர ஸ்தா னங்களும் அதன் ஒரு குறிப்பிட்ட காம்பினே ஷனும் ஏற்கனவே இருக்கலாம். ஆனால் அதை வளர்த்து அதற்கு ஒரு ஸ்வரூபம் - ஒரு பெர்ஸனாலிடி கொடுப் பதில்தான் விஷயமே இருக்கு. அதைச் செய்கிற போது புதுப்புது கண்டுபிடிப்பு கள் நிகழும்.

கல்கி - சிகா இணைந்து வழங்கிய இந்தக் கச்சேரி முடியும்போது இரவு மணி 9.45. அப்படியும் 300 பேர் காத்திருந்து கேள்வி - பதிலை ரசித்தனர்.

35



குறையொன்றுமில்லை

பகவான் பூலோகத்திலே இருக்கிறான். பீஷ்மாச்சார்யரும் இருக்கிறார். என்ன சொல்கிறான் பகவான்...? தானிருந்து பிரயோஜனமேயில்லை என்று சொல்லி விட்டான். தன்னை விளங்கச் செய்யக் கூடிய ஞானிகள் உலகத்திலே இருக்க வேண்டும். அவர்கள் போய்விட்டால் பகவானுடைய பிரபாவத்தை எடுத்துச் சொல்ல யாரால் முடியும்? அதனால்தான் ஸ்வாமி தேசிகன் சொல்கிறார், 'எம்பெருமான் பிரபாவத்தை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் நாம் இந்த உலகத்திலே இருக்கிறோம்' என்று.

'க்ஷேமத்தை உண்டு பண்ணுவதற்கு மகான்கள் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட மகான் பீஷ்மாச்சார்யர். அதனால்தான் தர்மபுத்திரர் பீஷ்மாச்சார்யாரிடம் போய்ப் பேசுகிறார். அவர் அவ்வாறு போய்ப் பேச வேண்டும் என்பதற்காகவும் கேட்க வேண்டும் என்பதற்காகவும் தான் பகவான் எல்லாவற்றையும் நடத்திக் கொடுக்கிறார்.

'துவமேவ பந்துஸ்ச, குரு துவமேவ' என்று எல்லா சாஸ்திரங்களிலும் ஆசார்யனாய் பரிமளிக்கப்பட்ட ஸ்ரீமன் நாராயணன், பிரும்மாவை சிருஷ்டித்து, பிரும்மாவுக்கடியிலே வேதங்களைக் கொடுத்து, அதைத் தொலைத்த போது மீட்டுக் கொடுத்து, புத்ரர்களான சனகஸனந்தன, சனத் குமார, சனத்சுஜாதர்கள்

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

மூலமாக சத்சாஸ்திரத்தை லோகத்திலே பிரவர்த்திக்கச் செய்து, அதுவும் போதாத பொழுது, ஹம்ஸ நாராயண, கீதாசார்ய அவதாரங்களிலே தானே வழி நின்று புருஷார்த்தங்களை வெளியிட்டு, அதுவும் போதாத போது, ககசனகாதி மஹரிஷிகளைக் கொண்டு அத்யாத்ம சம்பிரதாயங்கள் குறையாதபடி செய்து, அதுவும் போதாத பொழுது, பீஷ்மர் முதலான ஞானாதிகளை இட்டு உயர்ந்த தர்ம சாஸ்திரங்களை வெளிப்பட வைத்து, அதுவும் போதாத பொழுது, வியாஸாதிகளை அனுப்பிர வேசித்து பிரும்ம சூத்ராதிகளை வெளியிட்டு அதுவும் போதாதபொழுது, பாஞ்சராத்ர ஆகம சாஸ்திரத்தை வெளியிட்டு, அதுவும் போதாத பொழுது மேகங்கள் ஸாரமான உப்பு ஜலம் - அந்த சமுத்திர ஜலத்தை உட்கொண்டு சர்வோபஜீவ்யமான மழைத் தண்ணீராக எப்படிப் பொழியுமோ, அது போன்று வேதமாகிற கடலிலே மூழ்கி அதிலிருந்து எல்லோருக்கும் வேண்டிய உயர்ந்த விஷயங்களை வழங்குவதற்காக ஆசார்யர்களாகவும் ஆழ்வார்களாகவும் தானே அவதரித்து, – இந்தப் படுகுழியிலே விழுந்திருக்கக் கூடியவர்களை கை தூக்கி விடுவதற்காக, அவனே ஒரு காலத்தில் சஸ்திர பாணியாக கையிலே வில்லோடு வந்தான். இன்னொரு காலத்தில் சாஸ்திர பாணியாக வந்தான்! எல்லாமே பகவான்தான் பண்ணுகிறான். அவன் நம்மைப் பழக்குவதற்கு என்ன பாடு படுகிறான் பாருங்கள்!

வலையை விரித்து விட்டு வேடன் காத்திருக்கிற மாதிரி காத்திருக்கிறான் பகவான். வலைக்குக் கீழே தானிய வகைகள் இருக்கிறது. தான்யத்தில் பற்றுடைய பறவைகள் அதைக் கொத்த வருகிறபோது, வேடன் வந்து பிடித்துக் கொள்வது போல, உடனே வந்து நம்மைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்கிறான் பரமாத்மா. வேடனைப் போலவே, நாம் எப்போது வருவோம், எப்போது கிடைப்போம் என்று அவன் பார்த்துக் கொண்டேயிருக்கிறான். அதிலே உத்தமமான ஒருத்தர் கிடைத்துவிட்டால் பரம சந்தோஷம் அவனுக்கு.

பீஷ்மாச்சார்யரைப் போன்ற உத்தமர் உண்டா? அவர் எதிரிலே தர்மபுத்திரர் உட்கார்ந்து கொண்டு அழுகிறார்! "ஐயோ! மகா பாவி நான்! என்னால் அல்லவா இது ஏற்பட்டுப் போயிற்று! இப்படி ஒரு அம்புப் படுக்கையிலே, உடம்பெல்லாம் குத்தி, ரத்தம் கசிய இப்படிப் படுத்துக் கொண்டிருக்கிறீர்களே! இந்தப் பூமியிலே எனக்குப் பற்று இருந்ததனாலேதானே யுத்தம் நடந்து, இப்படி ஆயிற்று" என்று வருத்தப்பட்டார்.

உடனே பீஷ்மாச்சார்யார் கண்ணைத் திறந்து பார்க்கிறார். பார்த்துவிட்டுச் சொல்



கிறார், "வேறு யாராவது இப்படிப் பேசினால் நான் ஒப்புக் கொள்வேன். எல்லாம் தெரிந்த நீயே இப்படிச் சொல்லலாமா?" என்றார் தர்ம புத்திரரைப் பார்த்து.

"நீ யார் என்னைப் படுக்க வைக்க? நீ யார் என்னைப் படுக்க வைக்க! உன்னால் அந்தக் காரியம் முடியுமா? நீயல்ல காரணம்! நான் ஜன்மாந்தரத்தில் பண்ணின பாபம் படுக்க வைக்கிறது. அவரவர் பண்ணிய பாபப்படி தான் எல்லாம் நடக்கும்."

தர்மபுத்திரர் விடமாட்டேனென்கிறார். "நான்தான் காரணம். நான் மகாபாபி" என்கிறார்.

உடனே, பக்கத்திலே உட்கார்ந்துள்ள பகவான் வாசுதேவன் பேசுகிறான்: "தர்மபுத்ரா! நீ காரணமில்லை என்பதை நீ உணரவேண்டும்" என்கிறான்.

பீஷ்மாச்சார்யர் பேசுகிறார்: "இப்போது சொல்லப் போகிறது ஏதோ கல்பிதமாகக் கட்டிய கதை அல்ல; நிஜம். நடந்த நிகழ்ச்சி. தர்மபுத்ரா! நீயும் நானும் இப்போது வாழ்ந்து கொண்டிருப்பது துவாபர யுகத்திலே. இந்தக் கதை ரொம்ப நாள் முன்னாடி கிருத யுகத்திலே நடந்தது" என்று பிரமாணமாக ஒரு கதையைச் சொல்கிறார்:

கிருத யுகத்திலே பெரிய காடு. அதிலே கௌதமி என்று ஒரு பிராமண ஸ்த்ரீ அவளுக்குக் கல்யாணம் ஆயிற்று. ரொம்ப தவமாய்த் தவமிருந்து ஒரு பிள்ளையைப் பெற்றெடுத்தாள். அந்தக் குழந்தைக்குப் புண்யாகவசனம் ஆனவுடனே அதன் தந்தை இறந்து விட்டார். இவள் சின்ன குழந்தையைக் காப்பாற்றி அதை வளர்ப்பதிலேயே கணவனை இழந்த வருத்தத்தை மறந்தாள்.

அதற்கு நன்றாக ஸ்நானம் பண்ணி வைத்து, வேண்டிய ஆகாரங்களைக் கொடுத்துவிட்டு, நன்றாகத் தூங்கப் பண்ணினாள்.

இரண்டு மண் பாண்டங்களை எடுத்துக் கொண்டு, அருகிலேயிருந்த அருவியிலிருந்து தீர்த்தம் எடுத்துவரப் போனாள். அங்கேயிருந்து தீர்த்தத்தை எடுத்துக் கொண்டு வந்து குடிசையை அடைகிறாள்.

வந்து பார்த்தவள் நடுநடுங்கிப் போய்விட்டாள். இரண்டு மண் பாண்டங்களும் கையை விட்டுக் கீழே விழுந்து விட்டன. எந்தக் குழந்தையிடம் அவள் பஞ்ச பிராணனையும் வைத் திருக்கிறாளோ, அந்தக் குழந்தையை ஒரு கரு நாகம் தீண்டிவிட்டுச் செல்கிறது. — ஒரு கிருஷ்ண சர்ப்பம்!

அப்படியே அந்தக் குழந்தை கை — கால்களை உதைத்துக் கொள்கிறது. வாயிலேயிருந்து நுரை நுரையாக வருகிறது. கண்கள் குத்திட்டு நீலமாகி, பிராணனை விடுகிறது.

பாம்பு வேகமாக வெளியிலே போய் விட்டது.

என்ன நடந்தது என்பதைப் பார்த்துக் கொண்டிருந்த வேடன் அர்ஜுனகன் பாம்புப் புற்றுக்குப் போய் அதைப் பிடித்து வெளியே இழுத்தான். அதன் பற்களைப் பிடுங்கினான். கயிற்றால் அதைக் கட்டினான். கொண்டு போய் கௌதமிக்குப் பக்கத்திலே அதை விட்டான்.

"கௌதமி! உன் பிள்ளையைக் கடித்த பாம்பை இதோ கொண்டு வந்திருக்கிறேன். நீ சொன்னால் இந்தப் பாம்பை இங்கேயே இப்போதே வெட்டிக் குவித்து விடுகிறேன்" என்றான்.

கண்ணை மூடிக் கொண்டே கதை சொல்கிறார் பீஷ்மாச்சார்யர். தர்மபுத்ரர் கையைக் கூப்பிக் கொண்டே கேட்டுக் கொண்டிருக்கிறார். வாசுதேவன் பார்த்துக் கொண்டிருக்கிறான்.

தர்மபுத்ரரைப் பார்த்து "ஹே யுதிஷ்ட்டிரா!

"அந்த அதி.மு.க. பிரமுகர் ஒரு நாளைக்கு எட்டு தடவையாவது தேசிய கீதம் கேஸட் போட்டுக் கேட்காமல் விட மாட்டார்!"

"அவ்வளவு தேச பக்தியா!"

"ஊஹூம்... அதுலேதான் ஜெயஹே ஜெயஹே ஜெய ஜெய ஜெய ஜெய ஹேன்னு வருதாம்!"

— தஞ்சை தாமு

இது உனக்குப் புரிகிறதா?" என்றான் பகவான்!

கண்ணை மூடிக் கொண்டு மேலே கதையைச் சொல்கிறார் பீஷ்மாச்சார்யார்.

அவர் புரிகிறதா என்று கேட்டார். இவர் புரிகிறதே என்றார். ஆனால் நமக்குப் புரிய வேண்டுமல்லவா....?

கிருதயுகத்திலே தர்மம் எப்படி இருந்தது...?

சர்ப்ப ஜாதி என்பது க்ரூர ஜாதி. அதை அடிக்கலாம் என்றது சாஸ்திரம். பாம்பைக் கொல்வது குற்றமில்லையாயினும் பாம்பு யாரிடத்தில் அபசாரப்பட்டதோ, அவளுக்கு எதிரிலே வந்து அந்தப் பாம்பைக் கொல்ல அர்ஜுனகன் அனுமதி கேட்கிறான். அவன் வேட்டுவ ஜாதியினனான போதிலும் கேட்கிறான். அப்படியானால் அஹிம்ஸா தர்மம் கிருத யுகத்திலே எவ்வளவு தூரம் இருந்திருக்கும்!

கௌதமி அவனிடம் பதில் சொல்கிறாள்: "இந்தப் பாம்பை நீ கொன்றுவிட்டால் என் பிள்ளை உயிர்த்தெழுமா?"


அவன் பதிலுக்குக் கேட்கிறான்: "இந்தப் பாம்பைக் கொல்லாமல் விட்டால் மட்டும்

உயிர்த்தெழுவானா?''

"இந்தப் பாம்பைக் கொன்றால் உலகிலே பாம்பே இல்லாமல் போய்விடுமா?" என்கிறாள் கௌதமி.

அதற்கு அவன் சொல்கிறான்: ''பாம்பு எப்படி இல்லாமல் போகும்! சர்ப்பங்கள் எண்ணிக்கையிலே ஒன்றைக் குறைத்தவன் ஆவேன்.''

– இரண்டு பேரும் இப்படி சர்ச்சை பண்ணிக் கொண்டிருக்கிற போது பாம்பு பேசுகிறது! (அது கிருத யுகமல்லவா – அதனால் பாம்பு பேசுகிறது) ''ஹே மூடா! சற்று யோசனை பண்ணிப்பார்! நீயும் இருக்கிறாய் இக்காட்டிலே. அவனும் இருக்கிறான். குழந்தையும் இருந்தது. நானே கடிக்க வேண்டுமென்றால், உன்னையும் கடிக்கலாம், அவளையும் கடிக்கலாம். ஆனால் இதிலே என் பிரயத்தனம் என்ன இருக்கிறது. என்னை ம்ருத்யு தேவதை ஏவிற்று. அதனால் குழந்தையைக் கடித்தேன்.''



உடனே வேடன், ''ஓயம் ம்ருத்யுஹூ!'' என்று ம்ருத்யுவை அழைத்தான். ம்ருத்யு தேவதை பிரத்யக்ஷமாயிற்று.

"நீயா குழந்தை மரணத்துக்குக் காரணம்?" என்றான்.

"நானில்லை. என்னைக் காலன் ஏவினான்; நான் பாம்பை ஏவினேன், பாம்பு கடித்து விட்டது" என்றான் ம்ருத்யு.

"யாரடா அது காலன்?" என்றான் வேடன். உடனே யமன் பிரத்யக்ஷமானான்.

"நீயா?..."

"நானில்லை. என்னை பகவான் ஏவினான். நான் ம்ருத்யுவை ஏவினேன். ம்ருத்யு பாம்பை ஏவினான்..."

"யாரடா அது பகவான்?"

தோத்திரம் பண்ணினாலும் வராத பகவான், அர்ஜுனகன் மிரட்டியதும் எதிரே வந்து நிற்கிறான்!

"நீயா காரணம்?'' என்று பகவானையே கேட்கிறான் வேடன். ''நான் இல்லை'' என்கிறான் பகவான். "அந்தக் குழந்தையின் சரீரத்திலிருந்த ஆத்மாதான் காரணம். அது பண்ணிய பாவத்துக்குப் பாம்பு கடித்து மரணம் என்று தீர்ப்பு. அதை நடத்தி வைத்தவன் நான், அவ்வளவுதான்" என்றான்.

"எனக்கு நன்றாகத் தெரியும் இந்த சமாசாரம்!'' என்று வேடன் கோபப்பட்டான். "கண்ணுக்குத் தெரிந்த நீங்களெல்லாம் மரணத்துக்குக் காரணமில்லை. ஆனால் கண்ணுக்குத் தெரியாத ஆத்மா காரணம் என்று சொல்லி யாரை ஏமாற்றப் பார்க்கிறாய்...? இந்தப் பாம்பைக் கொன்றே தீருவேன்'' என்று தோளில் மாட்டிக் கொண்டிருந்த தோல் பைக்குள் கைவிட்டான் – அதற்குள்ளே இருந்த கத்தியை எடுப்பதற்கு.

அந்தப் பைக்குள்ளே எப்போது பாம்பு புகுந்து கொண்டதோ தெரியாது. அது உள்ளே சுருட்டிக் கொண்டு படுத்திருக்கிறது. உள்ளே கையை விட்டதும் அவனைக் கடித்து விட்டது! கடித்துவிட்டு வெளியே வரும் பாம்பை கௌதமி பார்த்து விட்டாள். வேடன், வாயில் நுரை தள்ள, கீழே விழுந்து விட்டான்.

கௌதமி கிடுகிடுவென்று ஓடினாள். ஒரு மலைத் தாழ்வரையிலிருந்து மூலிகை கொண்டு வந்து நன்றாகக் கசக்கி அவன் மூக்கிலே வைத்தாள். அதை இரண்டு தடவை சுவாசித்தவுடன் வேடனுக்கு விஷமெல்லாம் இறங்கி விட்டது. எழுந்து உட்கார்ந்து விட்டான்.


அவன் எழுந்து உட்கார்ந்ததும் பகவான் சிரிக்கிறான், காலன் சிரிக்கிறான், ம்ருத்யு தேவதை சிரிக்கிறது, பாம்பு சிரிக்கிறது!

"ஹே வேடனே, பார்த்தாயா! கௌதமி எப்படிப்பட்டவள்? மூலிகை ஞானம் அனைத்தும் உடையவள். அதிலே பூர்ண பாண்டித்யம் பெற்றவள். அப்படிப்பட்டவள் தன் குழந்தையைப் பாம்பு கடித்தபோது ஏன் ரக்ஷிக்கவில்லை... ஞானம் இருந்தும் ஏன் பண்ணவில்லை என்று கேட்டால், பாம்பு கடித்து அது மாளவேண்டும் என்று விதி! விதியிருந்தால் பாண்டித்யமெல்லாம் உபகாரமே பண்ணாது...'' என்று அந்த இடத்திலே பகவான் அர்ஜுனகனுக்கு விளக்கம் சொல்கிறார்!

இந்தக் கதையை பீஷ்மர் தர்மபுத்திரருக்குச் சொல்லி விதியின் நியமத்தை உணரச் செய்தார். தமது கடைசிக் காலத்திலும் அப்படி பரம வைராக்கிய நிதியாக விளங்கினார் பீஷ்மாச் சார்யார். ஆகையினாலேதான் அழகியசிங்கர் பீஷ்ம ஸ்துதியை நித்யானுஷ்டானத்திலே சேர்த்துக் கொண்டார். அப்பேர்ப்பட்ட ஆசார்யர் அருளிய சஹஸ்ரநாமம் அனுபவித்து மாளாதது.

(ஆறாம் பாகத்திலே தொடர்ந்து முக்கூர் சுவாமிகள் கூற அதனை அனுபவிப்போம்)

(ஐந்தாம் பாகம் நிறைந்தது)



ஜில்லு மல்லு
—கதிர்
யார்கூட பேசிக் கிட்டிருக்க இவ்வளவு நேரம்?
என் பாய்பிரண்ட் கூட!
பையனுக்கு என்ன நாலு வயசிருக்குமா?
எனக்குச் சிரிப்பு வரல.
அதான் கண்ட்ரோல் பண்ணிட்டியே.
என் 'பாய்' பிரண்ட்ஸ் லிஸ்ட் வேணும்னா டெலிபோன் டைரக்டரியே போடலாம்.
எனக்குத் தெரிஞ்சு 45 வயசுக்கு மேலதானே ஃபோனே வாங்கறாங்க
உனக்கு அந்த மாதிரி கேர்ல் பிரண்ட்ஸ் இல்லையேன்னு வயித்தெரிச்சல்
வாத்தியார் பையன் மக்கு. வைத்தியர் பையன் சிக்கு... நல்ல கேர்ள் பிரண்ட் கிடைக்கறது லக்குமா... லக்கு!
அப்படினு யார் சொன்னா?
நிச்சயமா வாத்தியார் பையனோ, வைத்தியர் பையனோ சொல்லலை!
மேட்டர் ஓவர்!


கல்கி
6.4.2003
இதழுடன்
இலவச இணைப்பு
ஜில்லுன்னு
ஜோரா!



வெயிலை எதிர்த்து பல்முனைத் தாக்குதல் நடத்த, மருத்துவர்கள், உணவு நிபுணர்கள், அழகுக் கலைஞர்கள், இல்லத்தரசிகள் கொண்ட அனுபவ டீமை அணுகினோம். 'ஜில்'என்று பொழிந்திருக்கும் டிப்ஸ் மழையில் குளிர குளிர நனைய உங்களையும் அழைக்கிறோம்!

கூல் டயட்!

'அந்த ஜமாய், இந்த மஜா, அப்படிக் கலாய்க்கலாம், தண்டான்னா இதுதான்..' இப்படி சூப்பர் ஸ்டார்களால் கவர்ச்சி யாக விளம்பரப்படுத்தப்படும் இரசாயனக்

குளிர்பானங்களைக் குடிப்பது ஒரு ஃபாஷனாகவே ஆகிவிட்டது. அதனால் ஏற்படும் தீய விளைவுகள் பற்றி யாரும் கண்டு கொள்வதேயில்லை.


இவற்றில் இருப்பதெல்லாம் அதிக பட்ச சாக்கரின், அமிலம், வேதிப் பொருட்களும் வண்ணங்களும்தான். மிகவும் குளிர்ந்த நிலையில் இப்பானங்கள் பருகப்படுவதால் உணவு சரியாக ஜீரணமாவதில்லை. மிகவும் குறைந்த வெப்ப நிலையில் குளிர் பானம் உறைந்து விடாமலிருக்க, அதில் எத்திலீன் கிளைக்கால் என்ற நச்சுப் பொருள் சேர்க்கப்படுகிறது. இது உடலில் சிறிது சிறிதாகச் சேரும்போது, எலும்பைக் கரைத்து, கல்லீரலைப் பாதித்து, கொழுப்பைக் கூட்டி... தீய விளைவுகள் நிறைய ஏற்படுத்துகிறது.



• டாக்டர் பி. திருஞான சம்பந்தம்

நம்ம ஊர் மூலிகைகளின் மகிமையை உணர்ந்து பேடண்ட் வாங்கி வளைத்துப் போட, வெளி நாட்டவர்கள் துடித்துக் கொண்டிருக்கும் போது, நாம் அவர்களுடைய இரசாயனக் கலவையைக் குடித்து 'ஆஹா... என்ஜாய்!' என்கிறோம்.

கோடைச் சிறப்பிதழுக்குப் பொருத்தமாக, சில மூலிகை பானங்கள் தயாரிப்பது பற்றி குறிப்புகள் தந்து உதவியிருக்கிறார்கள் ரோஹிணி மாற்று முறை மருத்துவ நிறுவனத்தார்.



ஆம்லா:

நெல்லிக்கனி, அதிமதுரம், இலந்தைப் பழம், சதாவரி எனப்படும் தண்ணீர் விட்டான் கிழங்கு, இவற்றைக் கொண்டு அருஞ்சுவையான பானம் தயாரிக்கலாம். நெல்லிக்கனியைக் கழுவி, மர உலக் கையால் இடித்து சாறு எடுக்கவும். இலந் தைப் பழத்தையும், அதே போல் நீர் விட்டு இடித்துச் சாறெடுக்கவும். அதிமதுரம், சதாவரியை நிழலில் காய வைத்துப் பொடிக்கவும். அனைத்தையும் சேர்த்துக் கலந்து வடிகட்டிக் கொள்ளவும்.

சர்க்கரைப்பாகு காய்ச்சி, மேலே சொல்லப்பட்ட சாறுடன் கலந்து உப யோகிக்கலாம். மேலும் சுவை தேவைப் படுபவர்கள், எலுமிச்சைச் சாறு கலந்து ருசிக்கலாம்.

பயன்கள்:

தாகம் தணியும். இரத்த சோகை போக்கும். நோய் எதிர்ப்பாற்றல் தரும். மூப்பு நெருங்காமல் 'ஸ்டே' வாங்கலாம். இளமையும் அழகும் பொங்கும். நுரை

யீரலுக்குப் பலமளிக்கும். மலச்சிக்கல் விடைபெறும். இருமல், சளி, பித்தம் குணமாகும்.



அஸ்வா:

அமுக்கிராங் கிழங்கு, உலர் திராட்சை, அதிமதுரம், ஜாதிப் பத்திரி, ஏலக்காய் மற்றும் பூமி சர்க்கரைக் கிழங்கின் சுவை மிக்க கூட்டணிதான் அஸ்வா!

மேலே கூறப்பட்ட பொருள்களை, நிழலில் காய வைத்து, அரைத்துக் கொண்டு, தேவையான தண்ணீர் சேர்த்து வடிகட்டிக் கொள்ளவும். சர்க்கரை அல்லது வெல்லப்பாகு தயாரித்து, மூலிகைத்தூளுடன் கலந்து குடிக்கலாம்.

பயன்கள்:

அஸ்வகந்தா என அழைக்கப்படும் அமுக்கிராங் கிழங்கு, அற்புதமான மூலிகை. 'அமுக்கிரா கொடுத்து வன்மை உண்டாக்கு' என்பது சித்தர் வாக்கு. நரம்பு சம்பந்தப்பட்ட பிணிகள், குடல் வியாதி,



வாத நோய், குழந்தைகளின் வளர்ச்சிக் குறைவு, பலவீனம் போன்றவை சட்டு புட்டென்று இடத்தைக் காலி செய்யும். இரத்த விருத்தி உண்டாவதால், உடல் வன்மை அடையும்.

உஷ்பா:

'உஷ்...அப்பாடா!' என்று சோர்ந்து போகும் போதெல்லாம், உஷ்பாவைக் கலந்து குடிங்க... 'உற்சாக பா' பாடத் தொங்கிவிடுவீங்க. நன்னாரி, இஞ்சி, அதிமதுரம், தாமரை, ஜாதிப்பத்திரி கலந்து செய்யப்படுவது உஷ்பா.

மேலே கூறப்பட்ட பொருள்கள் அனைத்தும் நாட்டு மருந்துக் கடைகளில் கிடைக்கும். இவற்றை நிழலில் காய வைத்து, அரைத்து, வெல்லப்பாகு அல்லது சர்க்கரைப் பாகுடன் கலக்க, குளுகுளு மூலிகை பானம் தயார்.


பயன்கள்:

உடலில் உள்ள தேவையற்ற உப்பு, அழுக்கு, விஷத்தன்மை எல்லாமே வெளியேறிவிடும். சிறு நீரகக் கற்கள் உருவாவதைத் தடுக்கும். பெண்களின் மாத

விடாய்க் கோளாறுகள் நீங்கும். 'நன்னாரி விரும்ப பொன்னாகும் மேனி' என்பது சித்தர் வாக்கு!

வில்வா:

வில்வப்பழம், ரோஜா, அதிமதுரம், ஏலக்காய் போன்றவற்றைக் கொண்டு தயாரிக்கப்படும் வில்வபானம் அனைவரும் அருந்தக் கூடிய அருமையான ருசி கொண்டது. மேலும் சுவை வேண்டுபவர்கள், சுத்தமான தேன் சேர்க்கலாம்.



* வில்வம்

பயன்கள்:

காயகல்ப கனியான வில்வம், உடலுக்குக் குளிர்ச்சியும் இதயத்துக்கும் மூளைக்கும் சிறந்த ஊட்டமும் தரக் கூடியது. ஜீரணத்துக்கு உதவும். மூல வியாதி குணமாகும். மலச்சிக்கல் என்ற பேச்சே இருக்காது.

மாதுரி:

மாதுளம் பழச் சாறு, செம்பருத்திப் பூ, தான்றிக்காய், ஜாதிப்பத்திரி, எலுமிச்சம்பழம், அதிமதுரம் கலந்து தயாரிக்கப்படும். உடல் வெம்மையைக் குறைக்க உதவும் இந்தப் பானம், குரலுக்கு இனிமை தருவதோடு, உடலுக்கு வனப்பையும் தரக் கூடியது. வளரும் குழந்தைகளுக்கும், பெண்களுக்கும் ஏற்ற இயற்கைபானம்.

மூலிகை மூலம் மனித குலத்தைக் காப்பதே எங்கள் ரூமி நிறுவனத்தின் நோக்கம். நெல்லிக்காய், வில்வம், நன்னாரி, வல்லாரை, அஸ்வ கந்தா, போன்ற அரிய மூலிகைகளை கொண்டு ஆரோக்கிய பானங்கள் தயாரிக்கலாம். இவற்றை முறைப்படி வீட்டில் தயாரிப்பது சற்று

* ஆவாரம்பூ



சிரமமான விஷயம் என்பதால், ரெடிமேடாகவே வாங்கிப் பயன்படுத்தலாம். இயற்கையுடன் இயைந்த பானங்கள் மட்டுமே பரிபூரண நலம் தரும் என்பதை உணருங்கள்" என்றார் ரூமியின் வர்த்தக இயக்குநர் டாக்டர். பி. திருஞானசம்பந்தம்.

அழகாய்ச் சமாளியுங்க!

கோடையைச் சமாளிக்க சில அழகு ஆலோசனைகள் தருகிறார்கள் மதி'ஸ் பியூட்டி சென்டர் கோமதி, விஷ்ணு.

முகம்:

தினமும் மூன்று முறையாவது குளிர்ந்த நீரில் முகம் கழுவ வேண்டும். வறண்ட சருமமாக இருந்தால் மாயிஸ்சரைஸர் உபயோகிக்கவும். வெயிலில் போக நேரும்

போது, கண்டிப்பாக, சன் பிளாக் க்ரீம்களை உபயோகிக்க வேண்டும்.

❖ லைட்டா ஒரு டீ அடிங்க! மிஞ்சிய டீ டிகாக்ஷனில் தண்ணீர் கலந்து முகம் கழுவினால், முகம் ட்யூப்லைட் போட்டது போல பளிச்சிடும்.

❖ தினமும் காலையில் இரண்டு ஸ்பூன் தயிரில், அரை மூடி எலுமிச்சம்பழம் பிழிந்து, அரை டீஸ்பூன் கடலை மாவு கலந்து, குழைத்து, முகம் முழுக்கத் தடவி, பதினைந்து நிமிடம் கழித்துக் கழுவினால் சூரியக்கதிரால் ஏற்பட்ட கருமை மறையும்.


❖ வெள்ளரிப் பிஞ்சை அரைத்து, தேன் கலந்து தடவி வந்தாலும், 'சன்-டேன்' மறைந்து, புதுப் பொலிவு கிடைக்கும்.



• கோமதி • விஷ்ணு

உடல் மற்றும் சருமம்:

வெயிலின் அக்கிரம டிகிரி ஏற, ஏற, வியர்க்குருப் படையை அனுப்பி, தாக்குப் பிடிக்க சருமம் முயற்சி செய்யும். வியர்க்குரு வந்தால் அரிப்பு, எரிச்சல் தாளாது. எனவே இரண்டு தடவை குளிர்ந்த நீரில் குளித்து சுத்தமான, காற்று புகும் பருத்தி ஆடைகளை அணிந்தாலே



வியர்க்குரு வராது. அதையும் மீறி வரும் சமயங்களில், 'கேலமைன்' தடவுங்கள். வியர்க்குரு தொல்லை நீங்கும். குளிக்கும் நீரில் வேப்பிலை, துளசி, ரோஜா இதழ் ஊறவைத்துக் குளித்தாலும், வியர்க்குரு மட்டுமல்ல, எந்தச் சரும நோயும் அண்டாது.

❖ டியோடரண்ட், பாடி ஸ்ப்ரே, ஆன்டி பெர்ஸ்பிரண்ட், ப்ரிக்லி ஹீட் பவுடர் போன்றவற்றை உபயோகிப்பதாலும் வியர்வை நாற்றம் கட்டுப்படும்.

❖ வெயில் காலத்தில் மேக்கப்புக்கு, பேக்கப் சொல்லி விடுவது உத்தமம். சோப்பை அடிக்கடி பயன்படுத்தக் கூடாது. பயத்தமாவு, கடலைமாவு, ஆரஞ்சுப்பழத் தோல், ரோஜா இதழ் சேர்த்து அரைத்த மாவை, சோப்புக்கு மாற்றாகப் பயன்படுத்தவும். இதனால் முகம் மேலும் அழகடையும்.

கண்கள்:

தொப்பி, குடை, சன் கிளாஸ் இல்லாமல் மத்தியான வெயிலில் அலைய வேண்டாம்.

இரவு தூங்கப் போவதற்கு முன் கண்களில் தூய்மையான விளக்கெண்ணெய் விட்டுக் கொள்ளலாம். நந்தியாவட்டை, கற்றாழை போன்றவை கொண்டு தயாரித்த கண் மை இட்டுக் கொண்டால் இன்னும் விசேஷம்.

வெள்ளரிக்காய், உருளைக் கிழங்கு போன்றவற்றைக் கூழாக்கி, சுத்தமான பஞ்சில் தோய்த்து, ஃபிரிஜ்ஜில் வைக்கவும். கண்கள் சோர்வுறும் போதெல்லாம் கண்களின் மீது வைத்துக் கொண்டு படுக்கவும். கருவளையமும், களைப்பும் காணாமல் போயிருக்கும்.



ஜில்லென்ற ஃப்ரெஷ்னெஸ் கிடைக்கும்.

கூந்தல்:

தூக்கிக் கட்டி, உச்சியில் கொண்டை போடுவது, இதமாக மட்டுமல்லாது, சம்மர் ஃபேஷனாகவும் இருக்கும். ஆண்கள் சம்மர் கட் செய்து கொள்வது சிறந்தது.

வெந்தயம் அல்லது கசகசாவை, புளித்த மோரில் ஊற வைத்து, தலைக்கும், உடம்புக்கும் தேய்த்துக் குளிக்கலாம். கூந்தலைப் பளபளக்க வைப்பதோடு, மேனிக்கும் குளிர்ச்சி.

❖ தவறாமல் நல்லெண்ணெய்க் குளியல் செய்யவும். வெயில் பட்டு, கூந்தல் நுனிகள் அதிகம் வெடித்தால், ட்ரிம் செய்ய வேண்டும். வாரம் இருமுறை ஹாட் ஆயில் மசாஜ் செய்யலாம். ஹென்னா கூந்தல் சிகிச்சை, ஃப்ரூட், வெஜ், ஃப்ளவர் ஃபேஷியல் போன்றவற்றை, தரமான பார்லரில் சென்று அனுபவியுங்கள்.

சத்துக்கு சத்தாக...

“கோடைக்கேற்ப, வீட்டில் சமைக்கும் உணவு வகையும் மாற வேண்டும். சர்க்கரைக்கு பதிலாக வெல்லம், தயிருக்கு பதிலாக மோர், புழுங்கல் அரிசிக்கு பதிலாக பச்சரிசி, மிளகாய்க்கு பதிலாக மிளகு பயன்படுத்துவது நன்மை தரும்” என்கிறார் மெனுராணி செல்லம்.



• மெனுராணி செல்லம்

பூசணிக்காய், சுரைக்காய், சௌசௌ, வாழைத்தண்டு போன்ற குளிர்ச்சியான காய்களை நிறைய பயன்படுத்துங்கள்.

காஃபி, டீயைக் குறைத்து, இயற்கை பானங்களை அருந்தலாம்.

பயத்தம் பருப்பு, கஸகஸா, தேங்காய், புதினா, கொத்துமல்லி, காய்கறிகள், கனிகள் நிறைய சாப்பிடுங்கள்.

உங்கள் சாப்பாட்டுத் தட்டைப் பாருங்கள். பச்சை, ஆரஞ்சு, மஞ்சள் போன்ற நிறங்கள் கொண்ட உணவு தென்பட்டால், ஓ.கே. ப்ரொஸீட்!

நிறைய கீரை, காய், கனி கொண்ட உணவுதான் சாப்பிடுகிறீர்கள்.

இதோ வெரைட்டிக்கு ஒன்றாக கோடை சமையல்

மிக்ஸட் சாலட்

தேவை:

வாழைப் பழத்துண்டுகள் - 1 கப்
ஆப்பிள் துண்டுகள் - 1 கப்
மாதுளை முத்துக்கள் - 1 கப்
உரித்த சாத்துக்குடி - 1 கப்
வேக வைத்த உருளைக் கிழங்கு - 1 கப்
பொடியாக நறுக்கிய வெங்காயம் - 1 கப்
பொடியாக நறுக்கிய தக்காளி - 1 கப்
பொடியாக நறுக்கிய குடைமிளகாய் - 1 கப்
காரட் துருவல் - 1 கப்
வெள்ளரித் துருவல் - 1 கப்



தயிர் - 1 கப்
ஃப்ரெஷ் க்ரீம் - ½ கப்
சர்க்கரை - சிறிது
உப்பு, மிளகுத்தூள் - ருசிக்கு

எப்படிச் செய்ய?

பழங்களையும், காய்களையும் ஃப்ரெஷ்ஷாகப் பார்த்து வாங்கவும்.


பட்டியலிலிருக்கும் காய்கனிகளில் ஒன்றிரண்டு குறைந்தால் கவலைப்படேல்!

பொடியாக நறுக்கிய எல்லாவற்றையும் சேர்த்து, தயிர், ஃப்ரெஷ் க்ரீம், சர்க்கரை, மிளகுத்தூள், உப்பு, சேர்த்து நன்றாகக் கலந்து, ஃபிரிஜ்ஜில் வைக்கவும்.

அரை மணி நேரம் கழித்து, ஜில்லென்று சாப்பிடவும்.

உடல் எடையைப் பற்றிக் கவலைப்படுபவர்கள், உருளைக் கிழங்கைத் தவிர்த்து விடலாம்.

சப்பாத்திக்கு, இதையே தொட்டுக் கொண்டு சாப்பிட, பரிபூரண உணவாக, போட்டியின்றி முழுமனதாகத் தேர்வு பெறும்.



கீரை மிளகூட்டல்

தேவை:

முளைக்கீரை - 1 கட்டு

வேக வைத்த துவரம் பருப்பு - 1 கிண்ணம்

பழுத்த மிளகாய் - 5

மிளகு - ½ டீஸ்பூன்

தேங்காய்த்துருவல் - 2 டேபிள் ஸ்பூன்

கடுகு - ½ டீஸ்பூன்

நாட்டுத் தக்காளிச் சாறு - 1 கப்

உப்பு - ருசிக்கு

பெருங்காயம் - சிட்டிகை

மஞ்சள் தூள், எண்ணெய் - தேவைக்கேற்ப



எப்படிச் செய்ய?

கீரையை ஆய்ந்து, பொடியாக நறுக்கி, மண்போக அலசி, வடிகட்டவும்.

மிளகாய், மிளகு, தேங்காய்த் துருவல் எல்லாவற்றையும் நைஸாக அரைக்கவும்.

கீரையை வேக விடவும். வேக வைத்த பருப்பில், உப்பு, தக்காளிச் சாறு சேர்க்கவும்.


நன்றாகக் கொதித்ததும் மிளகு பக்குவத்தைச் சேர்த்துக் கலக்கவும். கூட்டுப்பதம் வந்ததும் இறக்கி, கறிவேப்பிலை, பெருங்காயம் சேர்த்து தாளிக்கவும்.

அரைக்கீரை, சிறுகீரை போன்ற வற்றிலும், மிள கூட்டல் செய்யலாம். அபாரமான ருசியோடு, இன்னும் இரண்டு கரண்டி சாதம் உள்ளே போகும்.

அருநெல்லி ரசம்

தேவை:

அருநெல்லி - 15
பருப்புத் தண்ணீர் - 2 தம்ளர்
பச்சை மிளகாய் - 4
தக்காளிச் சாறு - 4 டேபிள் ஸ்பூன்
இஞ்சிச் சாறு - 1 டேபிள் ஸ்பூன்
மிளகு, ஜீரகப்பொடி - ½ டீஸ்பூன்
ரசப்பொடி - ½ டீஸ்பூன்
மஞ்சள் பொடி - ½ டீஸ்பூன்
கடுகு, நெய் - தாளிக்க
உப்பு, பெருங்காயம் - தேவைக்கேற்ப



எப்படிச் செய்ய?

அருநெல்லியின் கொட்டையை நீக்கி துண்டுகளாக்கி, நைஸாக அரைக்கவும். ஒரு கப் நீர் சேர்த்து, உப்பு, பச்சை மிளகாய், தக்காளி இஞ்சி சாறு சேர்த்து, பருப்பு ஜலம் விட்டு கொதிக்க விடவும். மஞ்சள் பொடி சேர்க்கவும்.

நன்றாக நுரைத்து வந்ததும் மிளகு, ஜீரகப் பொடி, ரசப்பொடி சேர்த்து இறக்கவும்.

நெய்யில் கடுகு, பெருங்காயம் சேர்த்துத் தாளிக்கவும். இறுதியாக கொத்தமல்லி, கறிவேப்பிலை சேர்க்கவும். வித்தியாசமான

ருசியுடன் இருக்கும்.

இந்த ரசம், மருத்துவ குணம் வாய்ந்ததும் கூட!

அருநெல்லி ரசம் செய்யும்போது, அக்கம் பக்கத்துக்காரர்கள், "என்னது கமகமனு ஆளைத் தூக்குதே!" என்று ஆஜராகி விடுவார்கள் என்பதால், இரண்டு கரண்டி கூடவே செய்து வையுங்கள். உங்களுக்கு இல்லாமல் போய்விடப் போகிறது!

பனை நுங்கு மில்க் ஷேக்


தேவை:

இளசான நுங்கு - 10
பால் - அரைலிட்டர்
நாட்டுச் சர்க்கரை - தேவைக்கு
ஏலத்தூள் - சிறிது

எப்படிச் செய்ய:

மில்க் ஷேக்கின் முழு வெற்றியும் இளசான நுங்கை, நீங்கள் தேர்ந்தெடுத்து உரிக்கும் சிறப்பான பணியில் அடங்கியுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொண்டு விடுகிறேன்.

கல்லு கல்லாக, பாதி கிழங் காயாகிப் போனதை எல்லாம்





கிட்டேயே சேர்க்காதீர்கள். தொட்டாலே வழுக்கும் இளசுதான் நமக்குத் தேவை.

இள நுங்கை, மேல் தோலுரித்து, மிக்ஸியில் இட்டு கூழாக்கவும். ஜில்லென்ற பாலுடன் நாட்டுச் சர்க்கரை சேர்த்து, ஏலம் கலந்து, இன்னொரு முறை மிக்ஸியில் இட்டு அடிக்கவும்.

இதைவிடச் சுவையான மில்க் ஷேக் குடித்ததாக யாராவது சத்தியம் செய்தால், பொய்யர்களைச் சும்மா விடாதீர்கள். நோண்டி நுங்கெடுத்து விடுங்கள்!

வெயிலை வெல்லுங்க!

"அழகு என்றாலே அது சரும அழகு தான். சருமம் ஆரோக்கியமாக, மாசு மரு வில்லாமல் இருந்தாலே, உடலில் எந்தக் கோளாறும் இல்லை என்று சொல்லி விட லாம்" என்கிறார்கள் இம்மார்டல் ப்யூட்டி பார்லர் அழகுக் கலைஞர்கள் அனு, லதா. இதோ சில வெயில் கால டிப்ஸ்!

சருமம் வறண்டு, சுருங்கி, கறுத்துப் போகும் பிரச்னையெல்லாம் பெரும்

பாலும் வெயில்காலங்களில்தான் ஏற்படுகின்றது என்பதால் சருமத்தை கவனமாகப் பாதுகாக்க வேண்டும்.

கோடைக் காலத்தில் சருமம் அழகு பெற என்ன செய்ய வேண்டும்? நிறைய தண்ணீர் குடிக்க வேண்டும். நீர் அதிகமாகக் குடித்தால் மலச்சிக்கலிருக்காது. உடல் கழிவுகள் சரிவர வெளியேறினால் சருமம் ஆரோக்கியமாக இருக்கும்.

ஆகவே... தினமும் எட்டு முதல் பத்து தம்ளர் வரை சுத்தமான நீர் அருந்த வேண்டும். 'பழையது' என்று சொல்லப்படும் நீச்சத் தண்ணீரில் சின்ன வெங்காயம், மோர், பெருங்காயம், உப்பு சேர்த்து, இரண்டு தம்ளர் அடிங்க! உடம்பே ஏ.ஸி. போட்டது போல ஜில்லென்று ஆகிவிடும்.

அடுத்தபடியாக கடைந்தெடுத்த இளம் மோரை நிறைய பருகலாம். கறிவேப்பிலை, பெருங்காயம், உப்பு, கொத்தமல்லித் தழை,



* அனு * லதா

ஜீரகம், ஒரே ஒரு மிளகாய் எல்லாவற்றையும் சேர்த்து அரைத்து, மோரில் கலக்கி ஃபிரிஜ்ஜில் வைத்துக் கொள்ளுங்கள். இதை அடிக்கடி பருகி வந்தால், கண் எரிச்சல் இருக்காது. உடம்பு இலகுவாக இருக்கும். நல்ல தூக்கம் வரும்.

இரண்டு சின்ன வெங்காயம், நாலு பல் பூண்டு, ஒரு கைப்பிடியளவு புதினா இலை,

சின்னத் துண்டு இஞ்சி, அரைத்து மோரில் கலக்கி, உப்பு சேர்த்துக் குடிக்க, ஆஹா... ருசியே தனி! ஸன் ஸ்ட்ரோக் வராது.



மூலச்சூடு தணியும். பெரியவர்கள் மோர் சாப்பிட்டால், குழந்தைகளுக்குத் தயிர் அல்லது லஸ்ஸி தரலாம்.


தயிரைக் கடைந்து, அதில் நாட்டுச் சர்க்கரை, தேன், சுக்குப்பொடி, மிளகுப் பொடி, ஜீரகப் பொடி கலந்து சாப்பிட்டால், நீர் தாகம் எடுக்காது. உடலும் புஷ்டி பெறும். பசி எடுக்கும்.

மோர், இளநீருக்கு அடுத்தபடியாக அனைவரும் பருகக் கூடிய பானம் தர்பூஸ் சாறுதான்! நார்ச்சத்து, குளுகோஸ், நீர்ச்சத்து, வைட்டமின் சி, தாது உப்புகள், அமிலச்சத்து எல்லாமே சரிவிகிதத்தில் அமைந்த பழம். சாறெடுத்து, தேன் கலந்து சாப்பிடலாம். கோடைக்கேற்ற மிகச் சிறந்த பானம்.

எலுமிச்சை, ஆரஞ்சு, மாதுளை, சாத்துக்குடி போன்ற பழவகையை அதிகம் சாப்பிடுங்கள். வெயிலை வெல்வதோடு, அழகும் ஆரோக்கியமும்

தாமாகவே சருமத்தில் வந்து குடியேறி விடும்.

கோடைக் காலத்தில் அதிகமாக வரக் கூடிய உபாதைகள் என்ன? அவை ஏன் வருகின்றன? எப்படிச் சமாளிக்கலாம்? பதில் சொல்கிறார் டாக்டர் ஆர். லோகநாதன் (வள்ளலார் கிளினிக்)



• டாக்டர் லோகநாதன்

சன் ஸ்ட்ரோக்:

உடலின் உஷ்ணக் கட்டுப்பாட்டு மையம் சீர் குலைந்து விடுவதால், நினைவிழப்பு, அதிக காய்ச்சல், வியர்வைச் சுரப்பு நின்று போவது போன்ற அறிகுறிகள் தோன்றும். ஆசனவாய் வழியாக உடலின் வெப்பநிலையைப் பார்த்தால், உஷ்ணம் 41° C அளவில் இருப்பதை அறியலாம். பலவீனமானவர்கள் வெப்ப நிலையைத் தாங்க முடியாமல் சில சமயம் இறந்து விடுவதும் உண்டு.

வெப்பத்தாக்குதலால் பாதிக்கப்பட்டவரின் உடல் உஷ்ணத்தைக் குறைக்க அதிரடி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். அவரது உடைகளை அகற்றி, குளிர்ந்த நீரைத் தெளித்து, காற்றோட்டமான இடத்தில் உட்கார வைக்கவும். தேவைப்பட்டால் ஆக்ஸிஜன் தரவேண்டும். உடலின் திரவ சத்துகளையும், எலெக்ட்ரோலைட்டுகளையும் ஈடு செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம். ஆசனவாய் வெப்பம் 39° C வரும்வரை, மருத்துவரின்

தீவிர கண்காணிப்பில் இருப்பது நல்லது. மைய சிரை மற்றும் நுரையீரல் தமனி அழுத்தங்களைப் பார்த்து அதற்குத் தக்கபடி, சிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.

அம்மை:

உடல் உஷ்ணத்தினால் உருவாகிறது என்று சொல்லப்பட்டாலும், உண்மையான காரணம் வைரஸ் தொற்றுதான். ஆரோக்கியமான உணவைச் சாப்பிட்டாலே, உடலில் வலுகூடி, நோய் எதிர்ப்பு சக்தி தந்து அம்மை வராமல் தடுக்கும்தான். அதையும் மீறி வந்து விட்டால், அம்மை வந்தவரை, தனியே பிரித்து வையுங்கள். அவருக்கு நிறைய ஓய்வு தேவை. பார்லி நீர், இளநீர், இளம்மோர், க்ளுகோஸ் போன்றவை தரலாம். உடம்பில் அரிப்பும் எரிச்சலும் குணமாக, வேப்பங்கொழுந்து, மஞ்சளை சமமாக அரைத்துப் பூசவும். சளி, ஜுரம், நுரையீரல் பாதிப்பு, வயிற்றுப் போக்கு ஏற்பட்டால், கண்டிப்பாக மருத்துவரை நாடவும்.



மஞ்சள் காமாலை:

பருவங்கள் மாறும்போது, ஆரோக்கியமான உடல், சீதோஷ்ணத்துக்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொள்வதில் சிரமப்படுவதில்லை. ஆனால் பலவீனங்களால் நலிந்திருப்பவர்களுக்கு

மஞ்சள் காமாலை தொற்று ஏற்பட்டு விடுகிறது. நீரின் தூய்மை குறைவது, தீங்கு விளைவிக்கும் உணவு சாப்பிடுவது, செரியாமை போன்றவற்றால் நோயின் கடுமை அதிகரிக்கிறது.


உணவுக் கட்டுப்பாடு, முறையான பரிசோதனை, தரமான சிகிச்சை, நல்ல ஓய்வு இருந்தாலே போதும். விரைவில் குணமாகிவிடும். என்றாலும் உணவில் கட்டுப்பாடு இருக்க வேண்டும். மது, அசைவம், பொரித்த உணவு வகைகள், மசாலா போன்றவற்றை ஒரு மாதமாவது தவிர்க்க வேண்டும். இல்லையெனில், மஞ்சள் காமாலை மீண்டும் வரலாம்.

வயிற்றுப் போக்கு:

சுகாதாரமற்ற பழக்கங்கள், மாசு மலிந்த குடிநீர், ஈ மொய்த்த பண்டங்கள், கெட்டுப் போன பழங்கள், அசுத்தமான கைவிரல்கள்... இவற்றால் வரும் நோய் இது.

காய்ச்சி வடிகட்டிய நீரை மட்டுமே அருந்தி, சுகாதாரம் காத்தாலே டயரியா

''வீட்டுல காத்து வசதி எப்படி?''
''எல்லா குழாயையும் திறந்துவிட்டா சூப்பரா காத்து வரும்!''



வராது. வருவது போலத் தோன்றினால், உப்பு, சர்க்கரை, எலுமிச்சை சாறு சேர்த்த நீரை நிறையக் குடியுங்கள். வயிற்று வலியும், சோர்வும் அதிகமாக இருந்தால், மருத்துவரை நாடுவதே சிறந்தது.



கோடையைக் கூலாக்குவோமா!

''சித்திரை வந்தாலே நித்திரை போச்சுன்னு சும்மாவா சொன்னாங்க... அனல் கட்டி, வியர்க்குரு, நமைச்சல், எரிச்சல்னு சருமம் படாத பாடு படும். கொஞ்சம் முன்னெச்சரிக்கையுடன் செயல்பட்டால், நீங்களும் உங்கள் குடும்பமும் குளுகுளுன்னு இருக்கலாம்'' என்கிறார் ராஜம் முரளி.

வெந்தய ஹேர்பேக்

புளித்த தயிர் - ½ லிட்டர்
வெந்தயம் - 150 கிராம்
துவரம் பருப்பு - 100 கிராம்.

தயார் பண்ணிக்கிட்டீங்களா?

இரவே ஒரு பாத்திரத்தில், தயிரைக் கடைந்து, இலேசாக நீர் ஊற்றி, வெந்தயம், துவரம் பருப்பு இரண்டையும் ஊற வைத்து விடுங்கள்.

மறுநாள் காலையில் மிக்ஸியிலிட்டு, வழுவழுப்பாக அரைத்து, தலையில் பூசவும். விரல்களின் நுனியால் மண்டையையும், மயிர்க் கால்களையும் இலேசாக மசாஜ் செய்து அரை மணி நேரம் கழித்துக் குளிக்கவும்.



* ராஜம் முரளி

இதற்கு சீயக்காய் தேய்க்க வேண்டிய தில்லை. புளித்தத் தயிரில் வெண்ணெய்ப் பசையும், கன்டீஷனிங் குணமும் இருக்கிறது. வெந்தயம் இதமான குளிர்ச்சி தந்து, வேர்க்கால்களைப் பலப்படுத்தும். துவரம் பருப்பு அழுக்கையும் பிசுபிசுப்பையும் எடுத்து விடும்.

பேன், பொடுகு தொல்லை இருப்பவர்கள் கைப்பிடியளவு துளசி, வேப்பிலை இரண்டையும் சேர்த்துக் கொள்வது நல்லது.

மகிழம் பூ வாசனைத் தூள்

மகிழம் பூ - 100 கிராம்
தவனம் - 100 கிராம்
தாமரைப் பூ - 100 கிராம்
ரோஜா இதழ் - 100 கிராம்
பூலாங் கிழங்கு - 100 கிராம்
வெட்டி வேர் - 100 கிராம்
சீயக்காய் - ¼ கிலோ

மேலே சொல்லப்பட்ட அனைத்துப் பொருள்களும் நாட்டு மருந்துக் கடையில் கிடைப்பவைதான்.



* படம் டிஜிட்டல் சண்முகம்

சுத்தம் செய்து நிழலில் உலர்த்தி, மிஷினில் கொடுத்து அரைத்து வைக்கவும். சுத்தமான பாட்டிலில் அடைத்து வைத்து, வீட்டில் உள்ள அனைவரும் தேய்த்துக் குளிக்கலாம்.

இந்த மகிழம்பூ சீயக்காய்த் தூளை, தொடர்ந்து பயன்படுத்தினால், உடல் வெப்பம் தணியும். கூந்தல் கமகம என்று இருப்பதோடு, ஆரோக்கியமாகவும் வளரும்.

சந்தன ஸ்நானத்தூள்

சிவப்பு சந்தனத் தூள் - ¼ கிலோ
கார்போக அரிசி - 100 கிராம்
கோரைக்கிழங்கு - 100 கிராம்
கடலைப்பருப்பு - 200 கிராம்
வெட்டி வேர் - 50 கிராம்

❖ கார் போக அரிசி, கோரைக் கிழங்கு, கடலைப் பருப்பு, வெட்டி வேர் நான்கையும் நிழலில் காய வைத்து மிஷினில்

அரைத்துக் கொள்ளவும்.

❖ அத்துடன் சிவப்பு சந்தனத் தூள் கலக்கவும்.

❖ ஸ்நானத்தூள் என்பதால் முகத்தில் மட்டுமல்லாது, உடம்பிலும் பூசிக் குளிக்கலாம். மேனி மினுமினுப்பு பெறும். சுருக்கம் மறையும். புத்துணர்ச்சி கிடைக்கும்.

❖ வியர்வை, முகப்பரு, அரிப்பு, எண்ணெய் சருமம், சொறி, சிரங்கு, என சகல சருமப் பிரச்னைக்கு ஏற்றது இந்தக் குளியல் தூள்!



மிளகு எண்ணெய் குளியல்

நல்லெண்ணெய் - ¼ கிலோ
ஆமணக்கு எண்ணெய் - 100 மில்லி
மிளகு - 5 கிராம்
வெந்தயம் - 10 கிராம்

❖ மிளகு, வெந்தயம் இரண்டையும் மிக்ஸியிலிட்டு பொடி செய்யவும்.

❖ இரும்பு வாணலியில் நல்லெண்ணெய் ஊற்றி, புகைந்து வரும்போது, மிளகு, வெந்தயப் பொடியைப் போட்டு, தணலை நிறுத்தி விடவும்.


❖ எண்ணெய் நன்றாக ஆறியதும், ஆமணக்கு எண்ணெய் விட்டு, கலந்து, பயன்படுத்தலாம்.

❖ சூடு தணிக்கும் இந்த எண்ணெயை, வீட்டில் உள்ள அனைவரும் உபயோகிக்கலாம். ஸகேல்ப் பிரச்னை வராது. வியர்க்குரு அரிப்பிலிருந்தும், பொடுகிலிருந்தும் கூட நிவாரணம் கிடைக்கும்.

❖ "ஆயில் பாத்தா... எடுடா ஓட்டம்" என்று அலறும் சைனஸ் அலர்ஜிக்காரர்களுக்கு இந்த ஹெர்பல் ஆயில் பாதுகாப்பாகவே இருக்கும்.

கோடையைக் குளுமையாக்க, சில எளிய சித்த வைத்தியக் குறிப்புகள்

தந்து உதவியிருக்கிறார் மருத்துவ மாமணி டாக்டர் ஆ. நடராசன்



• டாக்டர் ஆ. நடராசன்

❖ திருநீற்றுப் பச்சிலையின் சாற்றைப் பிழிந்து, கண் கட்டியின் மீது தடவுங்கள். வெயில் காலத்தில் கண்ணை உறுத்தும் கட்டிகள் குணமாகும்.

❖ சாதத்தை வடித்தெடுத்தவுடன், அந்தச் சாதத்துடன் கெட்டியான பசுந்தயிரை ஊற்றிப் பிசைந்து சாப்பிட்டால் உடல் உஷ்ணத்தால் ஏற்பட்ட பேதி நின்று விடும்.

❖ வெள்ளைப் பூசணிச் சாற்றை, தினமும் ஐம்பது மில்லி அளவில் பருகி வந்தால் உஷ்ண மூலச் சூடு கட்டுப்படும்.

❖ இலந்தைப் பூக்களை சுத்தம் செய்து,


அம்மியில் வைத்து விழுதாக அரைத்தெடுத்து, உடல் முழுவதும் தேய்த்துக் குளிக்க, வெயிலில் அலைந்த எரிச்சல் நீங்கும்.



❖ மருதோன்றிப் பூக்களை, தலையணையின் கீழ் வைத்துப் படுத்துக் கொண்டால், கோடை அசதி நீங்கி, நல்ல தூக்கம் வரும்.

❖ தேங்காய்ப்பால், சீமை அகத்திச் சாறு இரண்டையும் சமமாகக் கலந்து பூசிவர, சரும நோய்கள் வராது.

❖ வெயில் அதிகமாகும் போது, சூட்டுக் கொப்பளங்கள் கிளம்பும். ஒரு கைப்பிடி அளவு சீரகத்தை, அம்மியில் வைத்து, சிறிது தேங்காய்ப்பால் ஊற்றி அரைத்தெடுத்து, கொப்பளங்களின் மீது தடவி வந்தால், மூன்றே நாளில் குணம் தெரியும்.



❖ பனை நுங்கை அரைத்து பூசிக் குளித்தால், வியர்க்குரு மறையும்.

❖ ஆவாரம் பூக்களைக் கழுவி சுத்தம் செய்து, அத்துடன் ஒரு கைப்பிடி பச்சைப்பயறு சேர்த்து அரைக்கவும். தினமும் இருவேளை தேய்த்துக் குளிக்க, வியர்வை உப்புக் கசிந்து ஏற்படும் நமைச்சல் இருக்காது.



❖ கைப்பிடியளவு வெந்தயத்தை எடுத்து, சிறிது நீர் விட்டு அரைத்து, ஒரு நாள் விட்டு ஒரு நாள் சாப்பிட்டு வந்தால், உடல் உஷ்ணம் குறையும்.

❖ எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து, தேன் கலந்து பருகினால் நா வறட்சி ஏற்படாது.

'ஸ்...ஸ்...' அப்பாடா!

"என்ன வெயில்... என்ன வெயில்... தரை சுடுது, சுவர் சுடுது, வீடே அடுப்பு மாதிரி ஆயிடுச்சு" என்று புலம்பல் ஒலி கேட்காத வீடே இல்லை. வீட்டைக் குளிர்ச்சியாக்க, சில அனுபவபூர்வமான குறிப்புகள் தருகிறார் சாவித்திரி கிருஷ்ணமூர்த்தி.

ஃபேனுக்கு அடியிலும், ஜன்னலுக்குப் பக்கத்திலும் ஒரு ஸ்டூல் வைத்து, அதன் மேல் அகலமான பிளாஸ்டிக் டப்பாவில் தண்ணீர் வையுங்கள். அல்லது கனமான பெட்ஷீட்டைத் தண்ணீரில் நனைத்துப்

பிழிந்து, ஈரமான ஸ்க்ரீன் போல ஜன்னலுக்கு மாட்டி விடுங்கள். இரவு முழுக்க குளிர்ந்த காற்று கிடைக்கும். நிம்மதியான தூக்கம் வரும்.

மொட்டை மாடி வசதியிருக்கிறதா? வீட்டில் பனை மரமோ, தென்னை மரமோ இருக்கிறதா? அப்படியானால் வசதியாகப் போச்சு!

காய்ந்து விழும் பனை, தென்னை ஓலைகளைச் சேகரித்துக் கொள்ளுங்கள். திறமை இருப்பவர்கள், படல் போல பின்னியும் வைக்கலாம். வெயில் காலம் வந்ததும் ஓலைகளை மொட்டை மாடியில் நன்றாகப் பரப்பி, அதன் மீது மணலைத் தூவி வையுங்கள். வீட்டின் உஷ்ணம் கணிசமாகக் குறைந்திருக்கும். கத்திரி வெயில் ஆரம்பித்ததும், ஓலை மேல் இரண்டு வாளி தண்ணீர் தெளித்து விட்டால், நிமிஷத்தில் உங்கள் வீட்டில் எல்.ஜி., ஹிட்டாச்சி, நேஷனல், வோல்டாஸ் போன்ற ஏ.ஸி. மிஷின்கள் வேலை செய்ய ஆரம்பித்துவிடும் – இலவசமாக!

❖ தோட்டத்துக்குத் தண்ணீர்ப் பாய்ச்சும் முறையை மாற்றி, ரப்பர் குழாய் வழியாகப் பீய்ச்சியடிக்கலாம். அதிலும் அந்தி மயங்கும் வேளை நீர்



• சாவித்திரி

ஊற்றினால், தோட்டம் ஜில்லென்றாவதோடு, வீட்டிலும் மிதமான குளிச்சி இருக்கும்.

❖ நாக்பூர், டெல்லி போன்ற கடுமையான வெயில் உள்ள ஊர்களில் மக்கள் இந்த

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05* Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 * Registered as a Newspaper in Srilanka. Supplement to the Kalki issue Dated 6.4.2003



முறையைப் பயன்படுத்துவார்கள். இரவு படுக்கப் போகும் முன்பு, வெங்காயச் சாற்றில் நனைத்த பஞ்சை, காதில் அடைத்துக் கொள்வார்கள். அறையின் சுவரோரங்களில் மணல் கட்டி, இரண்டு குடம் தண்ணீர் விட்டு, கட்டிலின் மீது படுத்துக் கொள்வார்கள். மேலே ஃபேன் சுற்ற இரவு முழுக்க நீரின் குளிர் அலை, நம்மைத் தாலாட்டும்.

''தாங்க்ஸ்... ரொம்ப நல்லா டிப்ஸ் சொன்னீங்க.... ஆனால்... இரண்டு குடம் தண்ணி எங்க கிடைக்குதுன்னும் டிப்ஸ் கொடுத்தீங்கன்னா உபயோகமா இருக்கும்'னு நீங்க நற... நற...னு பல்லைக் கடிக்கிறது எங்களுக்கும் தெரியுது.

கொஞ்சம் பொறுங்க... வீராணம், கிருஷ்ணா, கங்கைன்னு இல்லாட்டியும், நெய்வேலி ரயிலாவது வராமலா போயிடும்?

தொகுப்பு: **அனுராதா சேகர்**

Machines approved by FDA & European Economy Council

Health and Beauty Clinic



La Praba V Care

Pepechage clinic

the ultimate health and beauty

Hair Scanning Free!

முடி உதிர்தலா? புழுவெட்டா? இந்தியாவிலேயே முதன்முறையாக

★ உடல் எடையைக் குறைக்க... ★ வேண்டாத ரோமங்களை நீக்க...
★ மார்பகத்தை பெரிதாக்க, சிறிதாக்க... ★ அறுவை சிகிச்சையின்றி முகச்சுருக்கம் போக்க...
★ Acne, பரு, மங்கு மற்றும் மருநீக்க... ★ முகக்கருப்பை போக்க... ★ முகத்தை பொலிவாக்க...
★ ஹைடெக் ஃபேஷியல்ஸ்... ★ பெர்மனெண்ட் மேக்கப்

எங்களின் Trichology Centreல் எந்தவிதமான முடி உதிர்தல் பிரச்சினைக்கும் நிரந்தர தீர்வு அளிக்கப்படுகிறது

முடி உதிர்தலா?

கருவி கொண்டு முடியின் Protein மற்றும் Minerals அளவை டெஸ்டிங் செய்து, எந்தவிதமான முடி உதிர்தல் பிரச்சினைக்கும் தீர்வு அளிக்கப்படுகிறது.

பொடுகு பிரச்சினையா? புழுவெட்டா?

கவலை வேண்டாம்! இந்தியாவிலேயே முதன்முறையாக Hair Scannerரால் பொடுகின் அளவைப்பார்த்து Imported Laser Machines மற்றும் மூலிகைகளினால் பொடுகிற்கு நிரந்தர தீர்வு அளிக்கப்படுகிறது.


முடி வளரவேண்டுமா?

முடி உதிர்தலினால் வழுக்கையாகி விடுமோ என்ற பயம் வேண்டாம். எங்களின் மருத்துவர்கள் முடி சாம்பிள்ஸ் எடுத்து டெஸ்டிங் செய்து மயிர்க்கால்களை (Hair Follicle) வலுப்படுத்தும் Root Stimulation என்ற சிகிச்சையினால் முடி கால்களை வலுப்படுத்தி எந்தவிதமான முடி உதிர்தல் பிரச்சினைக்கும் தீர்வு அளிக்கிறார்கள்.



உடல் எடையைக் குறைக்க

ஐரோப்பாவின் அதி நவீன கருவிகளைக் கொண்டு, Diet மற்றும் Side Effects அற்ற FDA-வால் அங்கீகரிக்கப்பட்ட உடல் எடையைக் குறைக்கும் சிகிச்சை அளிக்கப்படுகிறது.



முடி பிரச்சினைகளுக்கு

Australian Trichology System மூலம் நிரந்தர தீர்வு

Trichology-ன் மூலம் முடியில் உள்ள மூலப் பிரச்சினையை ஆராய்ந்து, நிரந்தர தீர்வு நவீன முறையில் அளிக்கப்படும்.

AMERICAN HAIR BONDING & WEAVING SYSTEMS

வழுக்கை தலை உள்ளவர்களுக்கு Bonding & Weaving முறைகள் மூலம் நிரந்தர தீர்வு

நிறுவனர் திருமதி **Praba Reddy**

(Member in British Association of Beauty Therapy and Cosmetology)

D.T.E., B.T.H.D., M.A., M.S., Dip. in Bridal Dressing (Singapore)

Cinema Secrets Hollywood Makeup (London) World Dip. in Hair Colouring (Paris)

Our Office :

PRABA'S HERBAL BEAUTY CLINIC

116, Bussy Street, Pondicherry - 1.

Ph : 0413-2348920, 21, Cell : 98942 33777

எங்களின் மற்றுமொரு புதிய clinic

#15, new giri road, g.n. chetty road, (near apollo cliniq), t.nagar, chennai - 17.

ph : 28260064, 52125659, cell : 98412 77688, 98423 33777 email : carolinpraba@yahoo.com

ஆண், பெண் இருபாலருக்கும்
Govt. recognised Beautician Course
சிறந்த முறையில் அளிக்கப்படும்.

வாரந்தோறும் சனிக்கிழமை காலை 6-30 மணிக்கு Sun TVயில் "உங்களுக்காக" நிகழ்ச்சியில் "La Praba" வழங்கும் அழகுக் குறிப்புகளை காணத் தவறாதீர்கள்.

Winner : 31002495

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered